தமிழீழ ஆவணக் காப்பகம்

நவம்பர் — டிசம்பர் 1997

# எரிமலை




டெல்லியில் நடைபெற்ற

## ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அக்கறைப் பூக்கள்

மதிப்புடன் எரிமலை ஆசிரியர்,

ஐயா! தங்கள் அமைப்பின் வெளியீடான 'எரிமலை' தொடர்ந்து பெற்றுவருகின்றேன். இதழில் வரும் அனைத்தும் சிறப்புமிக்கவை. இவ்விதழை என் நண்பர்களிடம் படிக்கக்கொடுத்து அச்செய்திகளை அவர்கள் அறிந்து கொண்டு மற்றவர்களுக்கும் செய்திகளைச் சொல்லுவது மகிழ்வைத் தருகின்றது. எரிமலையில் ஈழத்தமிழனின் வரலாற்றுக் கட்டுரைகள் தொடர்ந்து வந்தால் ஈழவிடுதலைக்கு வலிமையைச் சேர்க்கும். என் உதவியும் ஆதரவும் என்றும் இருக்கும். தமிழினம் உரிமைபெறுவது காலத்தின் கட்டளை.

அழகுவேல்
மறைமலை நகர்

★★

அன்புடையீர் ! வணக்கம்.

எமக்கு இயல்பாகவே தமிழ், தமிழர்கள் மீது அளவில்லா பற்றும், அன்பும் உண்டு. தமிழீழ விடுதலையின் தேவையினை நண்பர்களிடமும், மற்றவர்களிடமும் எடுத்துக் கூறிவருகின்றேன். இதை எனது கடமைகளில் ஒன்றாகவே கருதுகின்றேன். முஸ்லீம் வார இதழான 'உணர்வு' [சென்னை] அமெரிக்கா புலிகள் இயக்கத்தினை தடை செய்தது நல்ல செயல் என, எழுதியிருந்தது. இது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்றும், புலிகளை இந்துப் பிரிவினைவாதிகள் என்ற தவறான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம் என்றும், அந்த இதழுக்கு எழுதியுள்ளேன்.

"ரைம்" இதழ் [ஒக். 25 1997] அண்மைய கொழும்பு குண்டு வெடிப்புப் பற்றி கட்டுரை எழுதியிருந்தது. அவ் இதழுக்கும் கடிதம் எழுதிய நான், சிறீலங்கா அரசின் புலிகள் மீதான குற்றச்சாட்டையும், புலிகள் அமைப்பின் மறுப்பறிக்கையையும் ஒரு சேர வெளியிட்டிருந்தமையைப் பாராட்டியுள்ளதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசின் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கொடூர சிங்கள அரசினது வலையில் வீழ்ந்து மீண்டும், மக்கள் அவஸ்தைக்குள்ளாவதை அவர்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இனச் சிக்கலை நீக்க ஒரே வழியான மூன்றாவது




உலக நாடுகளின் மத்தியஸ்தத்தை சந்திரிகா உடனடியாக நிபந்தனைகளின்றி மாட வேண்டும் என்று எழுதியிருந்தேன். அத்துடன் பிரண்லைன், நியூஸ்வீக் ஆகிய இதழ்களுக்கும் இதே கருத்துக்களை வலியுறுத்தி எழுதியுள்ளேன்.

இந்த வகையான மடல் போராட்டங்களை தொடர்ந்து செய்து வருகின்றேன். விடுதலைப்பணியில் உயிர் ஈகை செய்த மாவீரர்களுக்கு எனது வீரவணக்கம். புலிகள் பல தடைகளைக் கடந்து வெற்றிக் களம் நோக்கி விரைவது மகிழ்வைத் தருகின்றது. தமிழீழம் வெல்ல என் வாழ்த்துக்கள்.

நல்மனதுடன்.
ச.வேல்முருகன்
புதுச்சேரி.

★★

அன்புடையீர் ! வணக்கம்,

நீண்ட நாட்களுக்குப் பின்னர் எரிமலைக்கு எழுதுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் ஆழம், அகலம், கனம் என்பவற்றை எரிமலையில் காணக்கூடியதாகவிருக்கின்றது. அத்துடன், அக்டோபர் மாத இதழின் அட்டைப் படம் என்னை பெருமிதம் கொள்ள வைத்தது. எதிரியை அழித்து விட்டு வெற்றிக்க களிப்பில் கைப்பற்றிய ஆயுதங்களுடனும், இராணுவ வாகனத்ததுடனும் எமது வீரமறவர்களின் காட்சி, என்னை தமிழீழத்திற்கு அழைத்துச் சென்றதென்றால் மிகையாகாது. அதே வேளை, ஆக்கங்கள் யாவும் மிகவும் சிறப்பாக இருக்கின்றது. உங்கள் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
கே. மயூரா
சுவிஸ்.

★★

அன்புள்ள, எரிமலை ஆசிரியர் குழுவிற்கு என் வணக்கம்.

தொடர்ந்து எரிமலை இதழ் எனக்கு கிடைக்கின்றது. எனக்கும் மற்றும் படிக்கின்றவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. எரிமலை இதழில் சமூக மாற்றுப் பார்வைகளும், மாற்றுச் சமுதாயப் படைப்புக்கான சிந்தனைகளும் பொதிந்துள்ளதிற்கும், அழகு தமிழில் வருவதையிட்டும் என் பாராட்டுக்கள். நான் 'அன்னம்' என்ற சிறு பத்திரிகையின் ஆசிரியனாக இருந்து வருகிறேன். ஆதலால் எரிமலை எனக்கு பயனுள்ளதாக அமைகின்றது. உங்கள் பணிகள் சிறக்கவும், தமிழீழம் மலரவும் என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
செல்வராஜ்
தமிழ்நாடு.

★★

ஐயா ! வணக்கம்.

நீங்கள் அனுப்பும் எரிமலை இதழ்கள் அனைத்தும் கிடைக்கின்றது, மிக்க மகிழ்ச்சி. சிங்கள இராணுவத்திற்கு அமெரிக்கா நேரடியாக உதவி செய்வது குறித்தும், விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது குறித்தும், பொய்யான செய்திகலை இங்குள்ள செய்தித் தாள்கள் வெளியிட்டு வருவது வருத்தத்துக்குரியது. உண்மை நிகழ்வுகளை நாங்கள் அறிந்திட தொடர்ந்து எரிமலை பத்திரிகையையும், ஒளிவீச்சையும் அனுப்பி வைக்குமாறு தமிழர் எழுச்சிப் பேரவை சார்பாக வேண்டுகின்றேன்.

அன்புடன்,
த. இலங்கேஸ்வரன்,
செ. நா. பாளையம்

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...





ஈழத்தமிழர் ஆதரவு சர்வதேச மாநாடு
. . . . . . . . . . . . . . . . . . . . 24ம் பக்கம்



'ஜெயசிக்குறுய்' படை நடவடைக்கை கட்டளைபீட மாற்றத்தின் பின்னணி என்ன? . . 48ம் பக்கம்



பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பொறுக்க இயலாத வன்முறைகள்
. . . . . 32ம் பக்கம்



இலங்கையில் ஜே.வி.பி. அழிப்பு வேலைகளில் ஈடுபட்ட தேசிய புலனாய்வுப் பணி
. . . . . 30ம் பக்கம்



உலகமெங்கும் பரவும் மாவீரர் விளக்குகள்
. . . . . . . . . . . . . 19ம் பக்கம்

தாயகம், தேசியம், தன்னாட்சி: அரசியற் தீர்வுத்திட்டத்திற்கு புலிகள் விதிக்கும் அடிப்படைகள் . . .04ம் பக்கம்

அறிவாலும் தேசப்பணியாலும் அவர் மாமனிதர் . . .08ம் பக்கம்

கைகொடாத தமிழர்கள்: அவர்கள் மனநிலை பற்றிய ஆய்வு . . . 10ம் பக்கம்

தேர்தல் வாக்குறுதிகளும் அம்மையாரின் சுயமுகமும் . . .17ம் பக்கம்

தமிழர் பாரம்பரியமும் பண்பாட்டு மாற்றங்களும் . . .21ம் பக்கம்

போரும் இலக்கியமும் . . .36ம் பக்கம்

கூட்டுக்கரங்களின் வீரியமிக்க செயற்பாடு . . .37ம் பக்கம்

பெண்ணொடுக்குமுறை எனும் சமூகப் பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஒன்றுபடுவோம் . . .39ம் பக்கம்

மலர்வளையம் வாங்கும் சிறீலங்காவின் பத்திரிகையாளர்கள் . . .40ம் பக்கம்

குறி – *சிறுகதை* . . .42ம் பக்கம்

பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே தமிழர்கள் ஓரம்கட்டப்பட்டனர் . . .44ம் பக்கம்

ஒரு முடவன் நடை – *சிறுகதை* . . .46ம் பக்கம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அடிமையாகி வீழாமல் போராடி வாழ்வோம்

இன ஒழிப்பின் விளிம்பில், நாம் தள்ளப்பட்டும் எமக்கு இன்னும் விடுதலைக்கான விழிப்புணர்ச்சியோ, வீராவேச உணர்ச்சியோ தோன்றவில்லை. பசியும் பஞ்சமுமாக தாங்கொணாத் துன்பங்கள் ஏற்பட்டும் நாம் இன்னும் போராடத்தயாராகவில்லை. இனியும் நாம் பயந்து, பயந்து ஒழிந்து செத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ஏதோ எங்கிருந்தோ எமக்குப் புறம்பான சக்திகள் கைகோர்த்து உதவும் என்று காத்துக்கொண்டிருப்பது அசட்டுத்தனம். நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதை விடப் போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராக வேண்டும். ஈழத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப்புலிகளாக மாறவேண்டும். தாழ்ந்து போன தமிழ் இனம் வீரப்புலி இனமாக மாறவேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச் சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச் சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகள் களையப்பெற்று சமூக உணர்வு பிறப்பிக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப் பண்டங்களைப் பாதுகாக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்று தன்னலங்கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவவேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவ வேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ளல் வேண்டும்.

– தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

நவம்பர் – டிசம்பர்1997

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# தமிழர் தேசியப் பிரகடனம்

"புனிதர்களாக, சரித்திரநாயகர்களாக, தேசிய வீரர்களாக தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களின் புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களை சிதைத்து அழித்த செயலை மிகவும் அநாகரிகமான இழிசெயல் என்றே நான் கூறுவேன்."

*– தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்*
*(மாவீரர்நாள் 1997)*

*1997 டிசம்பர் 31 வரை, 11510 மாவீரர்கள் தம்மை அழித்து அதன் தார்மீக பலத்திலே கட்டியெழுப்பி வரும் தமிழீழ தேசத்தின் விடுதலை அவாவை தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், 1997 நவம்பர் 27 மாவீரர்நாளில் தான் நிகழ்த்திய சிறப்பு மிக்க மாவீரர்தின உரையின் மூலம் உலகிற்குத் தெளிவு படுத்தினார். சிங்கள இனவாதம் பிரசவித்த நவீன சிங்கள இனவாதி சந்திரிகாவின் அரசியல் கபட நாடகத்தையும், இரட்டை வேடங்களையும் நியாயத் தீயினால் சுட்டுப் பொசுக்கிய தேசியத் தலைவர் சமகால உலகின் அரசியல் இராஜதந்திர சூட்சுமத்தை தமிழீழத்தின் அரசியல் அடித்தளத்தை சுட்டிக் காட்டியதன் மூலம் வெற்றிகொண்டார்.*

*சந்திரிகாவின் தீர்வுப் பொதியை இன முரண்பாட்டிற்குத் தீர்வுகாணும் பாதை என நம்பும் உலக சமூகத்திடம் இத் தீர்வுப் பொதி, தமிழர்களின் அடிப் படை அபிலாசைகளை தொட்டு நிற்கவில்லை என்பதை சுட்டிக்காட்டிய தேசியத் தலைவர், 1985–ல் திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது தமிழர்கள் முன்வைத்த தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படை கோரிக்கைகளை தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்பு என மீள வலியுறுத்தினார். சிங்கள – தமிழ் தேசியங்களுக்கு இடையேயான முரண்பாட்டிற்கான தீர்விற்கு மேற்கூறிய தமிழர் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும் என உலக சமூகத்திடம் தெளிவாகக் கூறப்பட்டுவிட்டது. சந்திரிகா அரசின் இராணுவ முகத்தை இனம்காட்டிய மாவீரர்நாள் செய்தி தமிழர்களின் சுதந்திர எழுச்சியை எந்த இராணுவ அச்சுறுத்தலாலும் அழித்துவிட முடியாது என்ற 'பிரபாகர' வைராக்கியத்தை உலகிற்குப் புலப்படுத்தியது.*

*தலைவரின் மாவீரர்நாள் செய்தி, தமிழீழ தேசத்தின் கொள்கை விளக்க உரையாக மதிக்கப்படும் மரபு இன்று உருவாகி விட்டது. இது தமிழர்களின் தன்மானத்திற்கும் சுதந்திர ஆகர்சிப்பிற்கும் கிடைத்த வெற்றியாகும்.*

*தலைவரின் இவ்வருட மாவீரர்நாள் செய்தி எமது கௌரவத்திற்குரிய மாீரர்கள் துயிலும் இல்லத்தை சிங்கள இனவாதம் காட்டு மிராண்டிகள் போல் அழித்து சிதைக்க முற்பட்ட கொடுஞ் செயலை பயங்கரவாதம் என விபரித்தது. தமிழர்களின் நெஞ்சிலே கனலும் ஒரு தீராத கோபத்தை தலைவரின் வார்த்தைகள் உலகுக்கு எடுத்துச் சொல்லியது. நவீன தமிழர் வரலாற்றில் உருவாகிவரும் ஒரு வீரமரபை கொச்சைப்படுத்துவதன் மூலம் சிங்கள இனவாதம் எமது தன்மானத்தையும் இறைமையையும் கொச்சைப்படுத்திவிட்டது. ஆனால், தமிழர் எழுச்சியை இந்த அவமானங்கள் மூலம் அல்லது காட்டுமிராண்டித் தனத்தின் மூலம் அழிக்கலாம் என சந்திரிகா அரசு கனவுகாணுமானால் அது சிங்கள இனவாதத்தின் மற்றுமொரு 'ஜெயசுக்குறுய்' ஆகவே இருக்கும்; ஏனெனில், எமது வீரம்செறிந்த பிரபாகரத் தலைமுறை விடுதலை என்பதை மனித சமூகம் உயிர்வாழ்வதற்கான விதியாக வரித்துக்கொண்டுள்ளது.*

*புலம்பெயர்ந்து வாழும் தமிழர் சமூகம் தம் தேசிய வீரர்களுக்கு சிங்கள இனவாதம் புரிந்துவிட்ட கொடுமையை தன் நெஞ்சிலே அனலாய் காத்து வருகின்றது. எமக்கு என்றொரு சுதந்திரபூமி உருவாகும் போதுதான் எம் தேசிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படும் என்ற உண்மை புரிந்துகொள்ளப்பட்டு விட்டது. இதனை இவ்வருடம் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களின் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மாவீரர்நாளை உணர்வு பூர்வமாகக் அனுட்டித்ததன் மூலம் சிங்களப் பேரினவாதத்திற்கும் அதன் பொய்ப்பிரச்சாரங்களை நம்பி ஏமாற முற்படும் உலக சமூகத்திற்கும் தெளிவு படுத்தியுள்ளனர்.*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தாயகம், தேசியம், தன்னாட்சி:

## அரசியற் தீர்வுத் திட்டத்திற்கு புலிகள் விதிக்கும் அடிப்படைகள்

**மாவீரர்நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை இங்கே தரப்பட்டுள்ளது**

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே.

இன்று மாவீரர்நாள்.

எமது இனத்தின் விடுதலைக்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர்த் தியாகிகளை நாம் நினைவுகூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

மக்களின் விடுதலை என்ற ஒரு மகத்தான இலட்சியத்தை வரித்து, அந்த இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்தை அடைய உறுதிதளராது போராடி, அந்த இலட்சியப் போரில் தமது உயிர்களையே அர்ப்பணித்த மாவீரர்கள் மகோன்னதமான மனிதப்பிறவிகள்.

மாவீரர்களைப் புனிதர்களாகவே நான் கௌரவிக்கிறேன். தாய் நாட்டின் விடுதலை என்ற பொதுமையான பற்றுணர்வால் ஈர்க்கப்படும் அவர்கள், தமது தனிமையான பற்றுக்களையும் பாசவுறவுகளையும் துறந்துவிடுகிறார்கள். சுய வாழ்வின் சுகபோகங்களைக் கைவிட்டு பொதுவாழ்வின் அதியுயர் விழுமியத்தைத் தழுவிக்கொள்கிறார்கள். அந்தப் பொதுவான இலட்சியத்திற்காகத் தமது சொந்த வாழ்வையும் அர்ப்பணிக்கத் துணிகிறார்கள். இதனை ஒரு புனிதமான துறவாகவே நான் கருதுகிறேன். இந்தப் புனிதத் துறவறத்திற்கு இலக்கணமாக விளங்கும் மாவீரர்களை நாம் புனிதர்களாகவே பூசிக்க வேண்டும்.

தன்னலமற்ற, தமக்கெனப்பயனை எதிர்பாராத விடுதலைத் தொண்டில், தம்மையே அழித்துக்கொள்ளும் அதியுன்னத தியாகிகள் என்பதால், மாவீரர்களுக்கு எமது விடுதலை இயக்கம் பெரும் மதிப்பையும் கௌரவத்தையும் வழங்கி வருகிறது. மாவீரர்களை எமது இன விடுதலைப் போரின் வரலாற்று நாயகர்களாக, தேசிய வீரர்களாக நாம் போற்றுகிறோம். அவர்களது நினைவுகள் காலத்தால்கரைந்து போகாது, என்றும் எமது நெஞ்சங்களில் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக நாம் அவர்களுக்கு நினைவு விழாக்கள் எடுக்கிறோம். நினைவுச் சின்னங்கள் நிறுவிக் கௌரவிக்கிறோம். வீரவணக்கச் சடங்குகளுடன் மாவீரர்களது வித்துடல்களை விதைப்பதும், நினைவுக்கல் நாட்டுவதும், அவர்களது கல்லறைகளைப் பூசிப்பதும், அவர்களது துயிலும் இல்லங்களைப் புனிதத் தலங்களாக வழிபடுவதும், எமது மக்களால் விரும்பப்படும் வழக்காகிவிட்டது.



**எந்தவோர் அரசியல் தீர்வுத்திட்டத்திற்கும் தமிழரின் தாயகம் அடிப்படையானது. தமிழரின் நிலமானது தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசியத் தனித்துவத்திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்தவொரு திட்டமும் தமிழரின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது**

மாவீரர்களின் நினைவாக, ஒரு வீர வழிபாட்டு மரபு எமது மண்ணில் உருவாகியிருக்கிறதென்பதை நான் பெருமிதத்துடன் சொல்வேன்.

மாவீரர்களை வணக்கத்திற்குரியவர்களாகக் கௌரவிக்கும் எமது வீர மரபு, தமிழரின் எதிரியான சிங்கள இனவாத அரசுக்கு எரிச்சலையூட்டியிருக்கிறது. சிங்கள தேசம் யாரைப் பயங்கரவாதிகளாக இழிவுபடுத்தி வந்ததோ அவர்களைத் தமிழர் தேசம் புனிதர்களாகப் பூசிப்பதை பேரினவாதிகளால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அத்தோடு மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலை எழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்து வருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத் துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்கமுடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது.

யாழ்ப்பாணக் குடாநாடு எதிரிப் படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியால் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன.

புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாக, தமிழர்களாற் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச் சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமென இச்செயலை சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச் செயல். தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறையை ஏற்படுத்திய இந்த அவச் செயலுக்குச் சிங்களப் பேரினவாத அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இந்தப் பண்பாடற்ற செயல் ஒரு உண்மையைப் பகர்கிறது. அதாவது, சிங்கள தேசத்தை ஆண்டுவரும் இனவாத



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆட்சியாளர்கள் தமிழர்களின் உணர்வுகளுக்கு என்றுமே மதிப்பளிக்கப்போவதில்லை. அத்துடன் தமிழர்களின் தேசிய அபிலாசைகளைப் புரிந்து, அவர்களுக்கு நீதியும் வழங்கப்போவதில்லை. இறந்து போனோரின் அமைதியையே கெடுப்பவர்கள் இறவாதோருக்கு நிம்மதியைக் கொடுப்பார்களென நான் கருதவில்லை.

எனது அன்பார்ந்த மக்களே!

இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரம் சிங்களப் பெரும்பான்மை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்த அரை நூற்றாண்டு காலமாக மாறி மாறி அதிகார பீடத்தில் ஏறிய சிங்கள இனவாதக் கட்சிகள் ஈழத் தமிழினத்தின் துயர் துடைக்க இதுவரை சாதித்தது என்ன?

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டதா?

தீப்பற்றி எரியும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதா?

ஒன்றுமே நடக்கவில்லை.

மாறாக, இந்த நீண்ட காலவிரிப்பில், தமிழர்கள் மீது, துன்பத்தின் மேல் துன்பமாக, தாங்கொணாத் துயரப்பளு மட்டுமே சுமத்தப்பட்டு வந்தது.

தமிழரின் நிலத்தை அபகரித்து, தமிழரின் மொழியைப் புறக்கணித்து; தமிழரின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளை மறுத்து, தமிழரின் தேசிய வளங்களை அழித்து, தமிழரின் சமூக, பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் கொன்றொழித்து, தமிழினத்தை இனவாரியாக ஒழித்துக்கட்டுவதில்தான் சிங்கள அரசுகள் முனைப்புடன் செயற்பட்டன. இதுதான் வரலாற்று உண்மை.

சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக்காலம் தமிழினத்திற்கு சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களே இல்லையெனலாம். சந்திரிகாவின் ஆட்சியில்தான் போர் விரிவடைந்து, பெரும் தீயாகப் பரவி தமிழர் தேசத்தைச் சுட்டெரித்தது. இதனால் சனசமுத்திரமாக மக்கள் இடம்பெயர்ந்து இருப்பிடமின்றி அவலப்பட்டனர். தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரிய நிலங்கள் இராணுவ அடக்குமுறையாட்சிக்கு உட்பட்டன. மாறி, மாறி நிகழ்ந்த படையெடுப்புக்களோடு, உணவு, மருந்துத்தடைகளையும் அரச இறுக்கிவந்ததால், பசியும் பட்டினியும், நோயும் சாவுமாக தமிழ் மக்கள் சந்தித்த இன்னல்களை சொல்லில் விபரிப்பது கடினம்.

ஐம்பது ஆண்டு காலமாக முடிவின்றி நீண்டு செல்லும் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையானது சந்திரிகா ஆட்சிக்காலத்தில்தான் மிகவும் தீவிரமான கடும்போக்கை எடுத்தது எனலாம். தமிழரின் தேசிய சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளை நசுக்கி, தமிழினத்தை சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் அரசின் நோக்கம். இந்த இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்துவதில்தான் முழு முனைப்போடு செயற்பட்டு வருகிறது சந்திரிகா அரசு.

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும் அதன் விளைவாகத் தமிழருக்கு ஏற்பட்டுவரும் பேரவலங்களையும் மூடி மறைத்து, உலகத்தின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில், சந்திரிகா அரசானது தீர்வுப் பொதி என்ற நாடகத்தை அரங்கேற்றியது. இந்த அரசியல் நாடகத்தின் சூட்சுமத்தை உலக நாடுகள் புரிந்துகொள்ளவில்லை. சந்திரிகாவின் தீர்வுப்பொதியானது, இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுமுகம் என்பதை உலகம் கண்டுகொள்ளவில்லை. மாறாக, சிங்கள அரசின் சாணக்கியமான பிரச்சார மாயையில் மயங்கி உலக நாடுகள் சந்திரிகாவின் தீர்வுப்பொதிக்குக் கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கின. சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் தமிழ்த்துவேசப் போக்கினால் தமிழர் முகம் கொடுத்த கசப்பான வரலாற்று அனுபவத்தைக் கருத்தில் கொள்ளாது, அவசரப்பட்டு உலக நாடுகள் எடுத்த இம்முடிவு எமக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்தது. சர்வதேச உலகம் சந்திரிகாவின் சார்பாகத் திரும்பியதால், துன்பம் தோய்ந்த தமிழரின் அவலக்குரல் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப்பொதி, தமிழரின் அடிப்படையான தேசிய அபிலாசைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை. காலத்திற்குக் காலம் தேய்ந்து, தேய்ந்து உள்ளடக்கம் உருக்குலைந்துவரும் இத் தீர்வுத் திட்டம் இரண்டரை வருடங்களாக இழுபட்டும் இன்னும் முழுமை பெறவில்லை. எனினும் இத்திட்டத்தின் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. தமிழரின் தேசியத் தனித்துவத்தையும், தாயகத்தையும் மறுதலித்து, தமிழர் தேசத்தைச் சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதுதான் இதன் குறிக்கோள். இராணுவத் தீர்வின் நோக்கமும் இதுதான். எனவே, சந்திரிகா அரசியற் பொதியும், இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே எமக்குத் தெரிகின்றன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நீதியான முறையில், சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடம் இல்லை. தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணியவில்லை. இந்த இயலாமையை நியாயப்படுத்த தீவிர பேரினவாத சக்திகள் மீது பழியைச் சுமத்த முனைகிறது அரசு. உண்மையில் சந்திரிகாவின்அரசும் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் ஒரு நவீன வடிவம்தான். சிங்கள – பேரினவாதத்தைக் கட்டியெழுப்பி, அதனைப் பூதாகரமாக வளர்த்துவிட்ட சந்திரிகாவின் அரசியற் கட்சி, இப்பொழுது அந்தத் தீவிரவாத சக்திகள் மீது குறை கூறுவது அபத்தமானது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பவில்லையெனச் சந்திரிகா அரசு கூறுவதிலும் உண்மையில்லை. நாம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பியதால் தான் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். இப் பேச்சுக்களின்போது நாம் தமிழினத்தின் நலனில் உறுதியாக நின்றோம். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்தன. இதனாற் பேச்சுக்கள் வெற்றிபெறவில்லை. இதற்கு எம்மீது குறைகூறிப் பயனில்லை. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத போக்கே இந் நிலைமைக்குக் காரணம்.

தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகிய வற்றை அங்கீகரித்து, அவற்றின் அடிப்படையில் ஓர் அரசியற் தீர்வுத்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என நாம் திம்பு காலத்தில் இருந்தே வலியுறுத்தி வருகிறோம். இது இன்றும் எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது.

எந்தவோர் அரசியல் தீர்வுத்திட்டத்திற்கும் தமிழரின் தாயகம் அடிப்படையானது. தமிழரின் நிலமானது தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசியத் தனித்துவத்திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்தவொரு திட்டமும் தமிழரின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இன்றைய சிங்கள அரசியல்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாதிகள் திம்புக் கோட்பாடுகளின் அடிப் படையில் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தமிழர்களுக்கு வழங்குவார்களா என்பது கேள்விக்குரியது. தென் இலங்கை அரசியல் உலகத்தில் சிங்கள – பௌத்த பேரினவாதச் சிந்தனை ஆதிக்கம் செலுத்தும் வரை இது சாத்தியமாகப் போவதில்லை. இந்த உண்மையை உணர்ந்து கொண்டதால்தான், இருபது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழீழ மக்கள் தன்னாட்சி உரிமையைப் பிரகடனம் செய்து தனியரசு அமைக்க முடிவெடுத்தனர். தமிழ் மக்களின் இத் தேசிய அபிலாசையை இலட்சியமாக வரித்தே, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எமது விடுதலை இயக்கம் தன்னாட்சி உரிமையை நிலை நாட்டப் போராடி வருகிறது.

தமிழர்களின் உரிமைகளையும் பறித்து, தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வு வழங்கவும் மறுத்தது. தமிழர்கள் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதையும் எதிர்த்து, எல்லாவழிகளிலும் சமாதானப் பாதைக்கு இடையூறாக நிற்பது சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாம் அல்ல.

கடந்த 50 ஆண்டுகாலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழிதான் சிங்களம் சென்று கொண்டிருக்கிறது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையால் தான் இலங்கையில் அமைதிகுலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக்கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும் பேரழிவையுமே அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப்பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது, சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாமல்ல.

இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத்தானே அழித்துக்கொண்டிருக்கிறதே தவிர, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது. இந்த உண்மையைச் சிங்களப் பேரினவாதம் என்றோ ஒருநாள் உணர்ந்தே தீரும். ஆயினும் இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம், தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த எதிர்பார்ப்புடன் நாம் எமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல. அது இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்துப் போராடிப் பெற வேண்டிய புனித உரிமை. எனவே, நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடையத் தொடர்ந்து போராடுவோம்.

இத்தனை காலமும் நாம் சிந்திய இரத்தமும், நாம் செய்த உயிர்த்தியாகங்களும் வீண்போகாதென்ற திடமான நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது புனித மண்ணை தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போம் என்ற திடசங்கற்பத்துடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

உறுதியுடன் போராடும் தேசமே இறுதியில் வெற்றிபெறுமென்ற உண்மையை நெஞ்சில் நிறுத்தி, நாம் செயலுறுதியுடன் போராடுவோம்.

மனவலிமையின் நெருப்பாக எரிந்து எமது மண்ணின் விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து, இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம்.

**'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'**

# தணல் கண்கள்

- ப. தயாளன் -



பூவுக்குள் இருந்து புயலான விண்கள் - இவர்கள்
சாவுக்குப் பின்னும் சிரிக்கின்ற கண்கள்
காற்றினை பிளந்து திசையெல்லாம் பறந்தீர் - பெற்ற
கணவனே உலகெனும் கதையினை மறந்தீர்!

காதலன் கையணை தன்னுள் மடங்கியே - வண்ண
கனவினுள் கரைந்த வாழ்வினை உடைத்தீர்
சோதனை அலைகளை தாண்டியே விரைந்து - பெரும்
சேனைகள் கொண்டொரு சாதனை படைத்தீர்

தோளில் சுமந்த துயரச் சிலுவை - உங்கள்
தாளில் விழுந்தது தணலாய் கொதித்தீர்.
வாழ்வுக் கணக்கிலே இதுவொரு நிலுவை - என்று
ஏழ் கடல் மீதிலும் காலடி பதித்தீர்.

உருக்கென கிடந்த விலங்குகள் உடையும் - இனி
உலகினில் புதிதாய் விதிகள் படையும்
செருக்குடன் நிமிர்ந்த தறுக்கர் தலைகள் - யாவும்
சிதைத்துமே பெறுவீர் உயர்ந்த நிலைகள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தடுத்தாட்கொள்ளல்

- புதுவை இரத்தினதுரை



நெடும்பாலை வெளியில் வழிதவறி
தாகத்திலல்லாடும் பயணியா நான்?
வெளியில் செல்லவிருப்பற்று
உத்தரத்தையே உற்று நோக்கியபடி
என் நாட்கள் நகருகின்றன.
ஆயிரமிருந்தாலும் சலிப்புற்றுளது என்ஜீவிதம்.
நேற்றுப்போல் இன்றும்....
இன்றுபோல் நாளையும்....
என்ன இது?
மாற்றமில்லாத வழித்தடத்தில்
சுழல்கிறது வாழ்க்கைச் சக்கரம்.
பார்த்த முகங்கள்;
பழகிய வார்த்தைகள்;
'அச்சில் வார்த்தெடுத்ததான அனுபவங்கள்
புதிதென்று எதிவுமில்லையென்றாச்சு.
பொய்த்தோல் போர்துலவும் சர்ப்பங்கள்.
அசந்தால் ஆளையேயடித்துக் குழம்புவைக்கும்
ஸ்பரிச உணர்வற்ற சொந்தங்கள்.
நெஞ்சு கனத்து நெடுமூச்சிடும்,
சுவாசக் குழலடைத்து மூச்சுத் திக்குமுக்காடும்.
யாருடன் நோவேன் யான்?
அன்புக்கேங்கும் குழந்தையென
எடுப்பாரொருவரை எதிர்பார்த்திருக்கின்றேன்.
தாயினுணர்வுடன் யாரும் முத்தமிடக் காணோமே.
கோயிலுக்குப் போனால்
மனம் சாந்தியடையுமெனச் சொன்னார்கள்
சென்றேன்.
குருக்கள் முதல் கணக்குப்பிள்ளைவரை
கடைவிரித்துள்ளனர்.
நல்ல வியாபாரம் நடக்கிறது.
ஆண்டவனைத்தான் காணவில்லை.
மலங்களைக் கழுவி
சீவன்முத்தர்களாக்கும் கோயில்களிற்கூட
அங்கிங்கெனாதபடி எங்கும் தரகர்கள்.
இருந்த வியாதி இன்னும் கூடியது.
சலித்து வீடுவரும் வழியில்....
'அசரீரியொன்று வழிமறித்தது.
விழிமடல் சாத்தி உற்றுக் கேட்டேன்.
'அட மானுடா;
உன்னொருவனின் விடுதலைக்காகவா
ஏங்குகின்றாய்?
உன்னொருவனின் மகிழ்ச்சியை மட்டுமா
தேடுகின்றாய்?
ஆகாயத்தில் பறக்கவிரும்பினால்
உனக்கு இறக்கை வேண்டும்.
விரலுக்கேற்ற வீக்கமே விரும்பக்கூடியது.
உள்ளதுக்கான வாழ்வையே அமைத்துக்கொள்.
ஒரு சிறங்கை நீரில் உடல்நனைக்க நினைக்காதே
ஊரோடு ஒத்தோடிப்பார்.
புதிய திசைகள் விரியும்.
நீ மட்டும் தானா எரியுண்டு கிடக்கின்றாய்?
அட மடையா திரும்பிப்பார்
தாயகமே தீப்பிடித்து எரிகிறது,
தணிக்கும் முயற்சியில் இறங்குவாய்.
மகிழ்ச்சி அதிலுண்டு.
தினசரி புதிய வாழ்வைச் சந்தித்தால்
வாழ்வுனக்குச் சித்திக்கும்
தித்திக்கும் கூட.
அசரீரி நின்றதும் கண்களைத் திறந்தேன்
எதிரே புதியபோராளிகள் இணையும் செயலகம்.
சரியான இடத்தில்தான்
என் கால்கள் தரித்து நின்றுள்ளன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அறிவாலும் தேசப் பணியாலும் அவர் மாமனிதர்

## நிலையான பெரும் புகழுடை 'மாமனிதர்' விருது

தமிழீழம் தந்த அருந்தவச் செல்வர்களுள் ஒருவர் பேராசிரியர் கணிதமகாமேதை கிறிஸ்ரி ஜெயரெட்ணம் எலியேசர். தமிழ் மொழியிலே 'கல்விக்கடல்' என்று ஒரு சொற்றொடர் பயின்று வருவதுண்டு. அதன் வாழ்க்கைக்கு உதாரணமாகத் திகழ்பவர் பேராசிரியர் எலியேசர். நாம் "தேசப்பற்றாளர்" என்ற சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்துவது உண்டு. அதற்கும் தலைசிறந்த உதாரண புருடராகத் திகழ்பவர் பேராசிரியர் கிறிஸ்ரி ஜெயரெட்ணம் எலியேசர் அவர்கள். சுருக்கமாகச் சொன்னால் தமிழீழத்தின் அறிவுச் செழுமையும் தன்மானப் பேருணர்வும் ஒருங்கே அமைந்த மாமனிதன் பேராசிரியர் எலியேசர். அன்னாரை எங்கள் தமிழீழத் திருநாட்டின் தேசத்தலைவர் பிரபாகரன் "மாமனிதர் விருது"க்கு உரியவராக அறிவித்துள்ளமை தமிழீழ மக்களுக்கு குறிப்பாக புலம்பெயர் தமிழீழ மக்களுக்கு வரலாற்றுப் பெருமையைத் தேடித்தந்துள்ளது. இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் பேராசிரியர் எலியேசரின் அறிவுப்பணியையும் தேசப்பணியையும் கோடிட்டுக் காட்டுவதினால் இப் பெரியாரின் பெருமையையும் மாமனிதர் விருதின் மகிமையையும் சிறிதளவாவது புலப்படுத்த முயல்வதே இக்கட்டுரையின் இலக்கு.



இலண்டன் பல்கலைக்கழகத்து விஞ்ஞான இளமானி விசேட பட்டத்துக்கான பரீட்சையில் முதலாம் தரத்தில் சித்தி பெற்றதன் மூலம் 1937–ல் பேராசிரியர் எலியேசரின் அறிவுப் பணி ஆரம்பமாகியது. இதனை அடுத்து திறமையாளர் ஒழுங்கு விருதில் முதலாவது இடத்துடன் (First in the order of merit Award) கூடிய விசேட விஞ்ஞான இளமானிப் பட்டத்தினை கணிதத்துறையில் முதலாம் நிலையில் தனதாக்கியவர் பேராசிரியர் எலியேசர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உயர் கணிதத்துறையிலான விஞ்ஞான இளமானிப் பட்டமும் அடுத்து பேராசிரியர் எலியேசரை வந்தடைந்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக இளங்கலைமானிப் பட்டத்தில் கணிதத்துறைக்கென தனியான பட்டமொன்று உண்டு. அதனை "Wrangler in Mathematical Tripos" என்று அழைப்பார்கள். இந்தப் பட்டத்தினையும் வென்ற பேராசரியர் எலியேசர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக "Mathematical Tripos" எனும் பட்டத்தின் மூன்றாவது பகுதியை 1942–ல் அதி விசேட திறமையுடன் தாண்டி சேர். ஐசக் நியூட்டன் கணித ஆய்வுப் பரிசினைப் பெற்று கணித ஆராய்ச்சி மாணவனாக மாறினார். இதற்கு முன்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் "Mathematical Tripos" பட்டத்திற்குப் படிக்கும் பொழுது இலங்கைப் பல்கலைக்கழகத்து புலமைப் பரிசிலுடன் மேலதிகமாக கிறைஸ்ட் கொலிஜ் புலமைப்பரிசிலும் இவருக்கே அளிக்கப்பட்டு இவர் கௌரவிக்கப்பட்டிருந்தார். 1943–ல் கேம்பிரிஜ் பல்கலைக்கழக "சிமித் பரிசு" பேராசிரியருக்கு வழங்கப்பட்டது. ஈற்றில் 1945–ல் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத் துறையில் தத்துவவியல் (Ph.D) பட்டத்தைப் பெற்று கலாநிதி எலியேசராக உயர்வுகண்டார். 1947–ம் ஆண்டில் விஞ்ஞான தேசிய அக்கெடெமியின் சார்ள்ஸ். எல். மாயர் விருது பேராசிரியர் எலியேசருக்குக் கொடுக்கப்பட்டது. அதே ஆண்டில் கிறைஸ்ட் கொலிஜ்ஜின் உறுபினராக (Fellow)வும் நியமிக்கப்பட்ட பேராசிரியர் எலியேசர் அவர்கள் 1948–ம் ஆண்டு தனது ஆய்வுகளின் சாராம்சமான 'எலியேசர் கோட்பாடு" (Eliezer Theory) எனும் பிரபல்யமான நூலை வெளியிட்டார். விஞ்ஞானத்துறையின் தலைசிறந்த ஆய்வாளரான எலியேசர் அவர்கள் 1949–ம் ஆண்டில் இலண்டனில் பாரிஸ்டர் அட் லோ (Barrister at Law) பரீட்சையில் சித்தி பெற்று சட்ட அறிஞராகவும் புகழ்பெற்றார். பேராசிரியர் எலியேசர் அவர்களின் மேதாவித்தனத்தின் நிறைவாக 1950–ம் ஆண்டில் விஞ்ஞானப் பெரும் கலாநிதி (Doctor of Science - D.Sc) பட்டம் இலண்டன் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டது.

இவ்வாறு கணிதம் – விஞ்ஞானம் – சட்டம் எனும் முத்துறைகளிலும் விற்பன்னராக விளங்கிய பேராசிரியர் எலியேசர் அவர்கள் விஞ்ஞானத்துறையையே மாற்றங்களுக்கு உள்ளாக்கிய சக்தி சமன்பாடான $E = MC^2$ ஐ உலகுக்கு வழங்கிய இருபதாம் நூற்றாண்டின் மாமேதை அல்பேர்ட் ஐன்ஸ்டீனுடன் கணித நுட்பங்கள் குறித்து விவாதிக்கும் சந்தர்ப்பம் கிடைத்த ஒரே தமிழர் ஆவார். உயர் கல்விக்கான பிரின்ஸ்டன் (Princeton Institute for Advanced Studies) நிறுவனத்தில் புல்பிரைட் புலமைப்பரிசிலில் பேராசிரியர் எலியேசர் ஆய்வு செய்தபொழுது இந் நிறுவனத்தின் இயக்குனர் கலாநிதி ஆர். ஏ. ஒப்பன்ஹெல்மர் (Dr. R.A.Oppenhelmer) உடன் 1955–ம் ஆண்டில் மாமேதை அல்பிரெட் ஐன்ஸ்டினை சந்தித்து ஆய்வுகள் குறித்து கலந்துரையாடியுள்ளார். மேலும் பேராசிரியர் எலியேசர் அவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 'குவாண்டம் பொறிமுறை' குறித்து, நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் ஏ.எம்.டிராக் (Professor A.M.Dirac) உடன் இணைந்து அவரின் உதவியாளராக ஆய்வுகள் செய்ததுமல்லாமல் பேராசிரியர் ஏ.எம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டிராக் இல்லாத சமயங்களில் அவரின் விரிவுரைகளையும் நிகழ்த்தியவர். பேராசிரியர் எலியேசரின் நுண்மான் நுழைபுல அறிவினைக் கண்டு வியந்த ஐக்கிய நாடுகள் சபை ஜெனிவா, வியன்னா, பம்பாயில் நடந்த ஐக்கிய நாடுகள் சபை மாநாடுகளில் "அணுச் டுசக்தியின் அமைதிவழிப் பயன்பாடு" குறித்து ஆய்வுக்கட்டுரைகள் படிக்கும் படி பேராசிரியர் எலியேசரை அழைத் துக் கௌரவித்தது. இவ்வாறு உலக கல்வியியல் வரலாற்றில்தனக்கென தனி யான இடத்தை தக்கவைத்துக்கொண்ட பேராசிரியர் எலியேசர் தன் மொழியை யும் தான் பிறந்த மண்ணையும் மறவாப் பெரும் பண்பாளர் ஆவார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைத் தமிழீழத்தின் தமிழ்த்தூது பேராசிரியர் தனிநாயகம் அடிகள் ஆரம்பித்த நாள் முதல் தனிநாயக அடிகளுடனிணைந்து தமிழின் முதுமை, இனிமை, வளமை, பெருமை தனிமை குறித்து பேராய்வுகள் வளர உதவியவர்களுள் முக்கியமானவ ராகப் பேராசிரியர் எலியேசர் விளங்கி னார். உலகில் எங்கு வாழ்ந்தாலும் தனது இனத்துடன், மொழியுடன், கலாச்சாரத் துடன் கூடிவாழும் மனோபாவமே தேசியவாதத்தினைத் தோற்றுவிக்கும் பண்பாகும் என்பது ஆய்வாளர்கள் கருத்து. அவ்வகையில் பேராசிரியர் எலியேசர் பேராசிரியர் தனிநாயக அடி கள் போன்றோர் தமது கல்விப்பணி கருதி பிறதேசங்களில் வாழ்ந்த போதி லும் தனது இனத்துடன், மொழியுடன், கலாச்சாரத்துடன் கூடிவாழ்ந்து அதனை பேணி வளர்க்கும் மனோபாவத்துடன் காணப்பட்டமை "இலங்கை தேசிய வாதம்" என்று ஒன்று தோன்றவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது. இலங்கை அரசாங்கம் என்ற ஒற்றை ஆட்சிக்குள் பிரித்தானிய காலனித்து வத்தினால் தமிழீழ மக்கள் கட்டுண்ட போதும் இலங்கைத் தீவு காலனித்துவத் திலிருந்து விலகி இரண்டு ஆண்டுகளுக்கு உள்ளேயே "தமிழரசு" என்ற உணர்வு தமிழரிடை மிகுந்து காலனித்துவம் உரு வாக்கிய ஆட்சிமுறைமையை நிராகரிக் கும் குரல் ஓங்கி ஒலித்தமை தமிழீழத் தேச வரலாறு இந்த அரசியல் உணர் வின் சர்வதேச பிரதிநிதிகளாகவே தமிழீ ழத்தின் பேரறிஞர் கூட்டம் இயங்கியது என்ற உண்மைக்கு உதாரணமான பல ருள் முக்கியமானவர் பேராசிரியர் எலியேசர். இதனால் பேராசிரியர் எலியேசர் தாம் வாழ்ந்த இடங்களில் தமிழ்ப்பணி பெருக்கும் சேவையில் ஈடு பட்டார். 1966–ம் ஆண்டு கோலாலம் பூர் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் இணைத்தலைவராக இயங்கிய பேராசிரி யர் எலியேசர் அவர்கள் நியூடெல்லி, சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகத் தமிழா ராய்ச்சி மகாநாடுகளினதும் அமைப் பாளராக அரும்பணியாற்றினார். 1992–ல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகத்தமிழர் மாநாட்டின் நிர்வாக உறுப் பினராக பணியாற்றி வழிகாட்டினர்.

இலங்கைத் தீவில் பிரித்தானிய கால னித்துவம் தமிழ்—சிங்கள தேச இனங் கள் ஒற்றையாட்சி ஜனநாயகத்தில் இணைந்து ஆட்சியை தொடர்வதற்கு பிரித்தானியா விதித்த அரசியலமைப்பு நிபந்தனைகள் சிங்களப் பெரும்பான்மை அரசால் நிராகரிக்கப்பட்டு பிரித்தானிய பாராளுமன்ற முறைமை வன்முறைப் படுத்தப்பட்டு நவலங்காவில் தன்னிச் சையான சிறீலங்கா பௌத்த சிங்களக் குடியரசை 1972–ல் பிரகடனப்படுத்தி சிறீலங்கா எனும் சட்டவிரோத அரசாங் கம் தமிழீழ மக்கள் மேல் திணிக்கப்பட் டதும் அதனை ஜனநாயக வழிகளில் தமிழர்கள் எதிர்க்க முற்பட்ட போது பொலிசார் சிறீலங்கா அந்நிய அரசால் இராணுவத்தினரின் பணிகளைச் செய்ய பணிக்கப்பட்டு இலங்கைத் தீவில் தமி ழர்கள் நாடற்ற இனமாக்கப்பட்டு; அரா ஜகங்களுக்கு உள்ளானதும்; இவைகளின் விடிவாக தமிழர்களின் அரசியல் தலை வராக அன்று விளங்கிய தந்தை செல் வநாயகம் 1975–ல் சுயநிர்ணய உரிமை பிரகடனத்தை சிறீலங்கா பாராளுமன் றத்தில் விடுத்து ஒற்றையாட்சி முறைமை யில் இருந்து விலகி 1976–ல் வட்டுக் கோட்டை தீர்மானம் மூலம் தமிழீழத் தனியரசை பிரகடனம் செய்து 1977–ல் குடியொப்பம் மூலம் தமிழ் மக்கள் அதனை உலகுக்கு வெளிப்படுத்தி அங்கீ கரித்ததும் இந்த மாற்றமுடியாத மக்கள் ஆணையை தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத் தேசிய விடுதலை போராட் டத்தின் மூலம் முன்னெடுக்கத் தொடங் கியதும் அதனை 1978–ல் பயங்கரவா தம் என இழிவு செய்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் இனவேட்டையை ஆரம்பித்ததும்; பின்னர் 1983–ல் போர் என்றால் போர் என அப்பாவித் தமிழ் மக்கள் மேல் யுத் தப் பிரகடனம் செய்து இன்றுவரை தமிழ் மக்களின் அந்நிய ஆட்சிக்கெதி ரான சுயநிர்ணய உரிமைப் பிரகடன மான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச சட் டங்களுக்கு விரோதமான வகையில் இன அழிப்பு, தேச உட்கட்டுமான அழிப்பு எனும் இரண்டையும் இரா ணுவத்தினூடாக நிறைவேற்றி அழிக்க முற்படுவதும் தமிழீழத்தேசத்தினது கால வரலாறு.

தமிழீழத்தேசமும் தமிழீழ மக்களும் அப்பட்டமான இன அழிப்புக்கும், உட் கட்டுமான உருக்குலைப்புக்கும் உள்ளாக் கப்படும் இந்தக் காலகட்டத்தில் பேராசி ரியர் எலியேசர் அவர்கள் உண்மைக்குச் சாட்சி சொல்லி உலக சமுதாயத்துக்கு தமிழீழ மக்களின் யதார்த்த நிலையினை எடுத்து விளக்கும் தனது தேசப்பணியை வாழ்வின் ஓர் அங்கமாகக் கொண்டு செயற்படத்தொடங்கினார்.

1978–ல் இலங்கைத் தமிழர் அமைப் பினைத் தோற்றுவித்த பேராசிரியர் எலியேசர் 1984 முதல் அவுஸ்திரேலிய தமிழர் அமைப்புக்களின் குடைநிழல் அமைப்பாக இயங்கத் தொடங்கிய அவுஸ்திரேலிய தமிழர் அமைப்புகளின் பேரவையை (Australia Federation of Tamil Association) நிறுவி அதன் தலைவ ராக இன்றுவரை பெரும்பணி ஆற்றி வருகிறார். தமிழீழ மக்களின் தேசிய விடு தலைப் போராட்டத்தின் தேவையை சத்தியத்தை உலகுக்கு உணர்த்தும் சர்வ தேசப் பேச்சாளராகவும் சிறீலங்காவில் உள்ள தமிழர்கள் மனித உரிமை வன் முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வதைக் கப்படுவதை உலகுக்கு வெளிப்படுத்தி அவர்களுக்குரிய பாதுகாப்பினை வழங்கும்படி உலக அமைப்புக்களை அரசுகளை கேட்பவராகவும் பேராசிரி யர் எலியேசர் தன் தேசப்பணியினைத் தொடர்கிறார்.

பேராசிரியர் இலங்கை கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் தலைவராகவும், வை.எம்.சி.ஏ. இலங்கை அமைப்பினதும் கோலாலம்பூர் அமைப்பினதும் உபதலை வராகவும் திகழ்ந்தவர். இலங்கை மெத டிஸ் திருச்சபையின் மாநாட்டினதும் உபதலைவராகவும் பேராசிரியர் கடமை யாற்றியுள்ளார். அவுஸ்திரேலிய கிறிஸ் தவ ஒருங்கமைப்பினதும் ஆரம்ப கர்த் தாவாகவும் இவர் பணியாற்றியுள் ளார். இந்த அனுபவங்களை பேராசி ரியர் எலியேசரின் தமிழர் நலப் பணி களில் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு தன் அறிவு அனுபவம் ஆற் றல் அனைத்தையும் தமிழீழ மக்களின் நலனுக்காகவும் தமிழீழத்தேசத்தினது நலனுக்காகவும் அர்ப்பணித்த பேராசி ரியர் எலியேசர் அவர்கள் "மாமனிதர்" விருதுக்கு ஏற்புடைய பெருந்தகையாள ராகத் திகழ்கின்றார். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கைகொடாத் தமிழர்கள்

## அவர்கள் மனநிலை பற்றிய ஆய்வு

அண்மையில் மு. திருநாவுக்கரசு எழுதிய 'உடைந்துபோன வாக்குறுதிகள்' என்னும் (Broken Promises) நூலைப் படித்தேன். இத்தலைப்பு, கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் முறிந்துபோன காதலர்கள் பற்றிய சோகக் கதை என்று வாசகர்கள் தப்புக்கணக்கு போட்டுவிடவேண்டாம். இது அதைவிட கொடூரமான துயரம் நிறைந்த கதை (சரித்திரம்). ஒரு இனமக்களின் முன் வைக்கப்பட்ட கபட வாக்குறுதிகளும், அதன் உடைவுகளும் பற்றியது. முக்கிய தீர்மானங்கள் நிறைவேற வேண்டிய பொறுத்த கட்டங்களில் சிங்களத் தலைவர்கள், தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகளை தாராளமாக அள்ளி வீசினார்கள். இந்த இக்கட்டான கட்டங்களைத் தாண்டியதும், வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டனர்.

இப்படியாக சிறீலங்காவில் (அன்றைய இலங்கை) தலைமை அமைச்சர்கள் D.S. சேனநாயக்கா தொடக்கம் S.W.R.D. பண்டாரநாயக்கா (இன்றைய அரசுத் தலைவரின் தந்தை — பௌத்த பிக்குவால் சுட்டுக்கொல்லப்பட்டவர்) ஊடாக டட்லி சேனநாயக்கா, J.R. ஜெயவர்த்தனா, ஏன் அமைதித்தீர்வை (சுடுகாட்டு அமைதியாக) முன்வைத்து ஆட்சிக்கு வந்த இன்றைய அரசுத் தலைவர் ஈறாக அனைத்துத் தலைவர்களினதும் வாக்குறுதிகளையும், அவற்றின் முறிவுகளையும் ஆசிரியர் நினைவுபடுத்துகிறார்.

தங்கள் சொந்த அனுபவங்களில் பாடம் படிப்பவர்கள் மூடர்கள் என்றும், பிறர் அனுபவங்களில் பாடம் படிப்பவர்கள் புத்திசாலிகள் என்றும் சொல்லுவார்கள். ஆனால் தங்கள் கடந்தகால தவறுகளில் இருந்துகூட பாடம் படிக்காத தமிழர்களை என்னவென்று சொல்லுவது. மூடரிலும் மூடராய் திரும்பவும் திரும்பவும் கபட வாக்குறுதிகளால் ஏமாந்து விடுகிறார்கள். பட்டும் பட்டும் கடந்தகாலச் சரித்திரம் நமக்குத்தரும் பாடத்தை படிக்க மறுக்கிறார்கள். இப்படியாக இன்றைய அரசாங்கம் மேடையேற்றும் கபட நாடகங்களை நம்பும் தமிழர்களை எப்படி அழைப்பது. இன்று, புலிகள் ஆயுதங்களை கைவிட்டால், அல்லது தோற்கடிக்கப்பட்டால், பௌத்த பிக்குகளும், சிங்கள அரசியல்வாதிகளும் அவர்கள் வார்த்தைகளில் 'சலுகைகள்' தருவார்கள் என்று நம்புகிறார்கள் எம்மவர்கள். அதுவும் அவர்கள் தரும் இச்சலுகைகளை நாம் எம் மக்களின் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். உரிமைகள் அவர்களால் தரப்படவேண்டிய ஒன்று

**சொல்ல முடியாத துன்பத்திலும் மரண வேதனையிலும் நடாத்தப்படும் ஆயுதப் போராட்டத்தை, வெளிநாட்டிலும், வடக்குக் கிழக்குக்கு வெளியிலும் இருந்து பொறுமையின்றி விமர்சிக்கும் தமிழர்களின் மன நிலையை என்னவென்பது**

தானா? பிறர் கருணையில் போடும் பிச்சையாகவோ, மன இரக்கத்தினாலோ எந்த இன மக்களுக்கும் உரிமைகள் கிடைத்தது கிடையாது. உரிமைகள் மறுக்கப்பட்டதால் வேறு வழியில்லை என்ற நிலையில் 'பேரிழப்புக்களை' (பொருளாதார இழப்புகள் மட்டுமல்ல) ஏற்படுத்தி உரிமைகள் பெறப்படுகிறது. சுருங்கக் கூறின் ஒரு இனம் போராடி உரிமைகளை பெற்ற பின்பே அவை கொடுக்கப்படுகிறது. இது பரிதாபத்துக்கும் கவலைக்கும் உரிய உண்மை. இதனையே திரும்பத் திரும்ப மனித சரித்திரம் கண்டது. அடக்குமுறையாளர்கள் திடீரென மனம் மாறியதில்லை. கொடுங்கோலாட்சியாளர் மனமுருகி மனச்சாட்சியாளர்களாய் திடீரென மாறியதுமில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்புதான் (தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட பின்பு) பேச்சுவார்த்தை என்னும் அரசின் வலியுறுத்தல் பொய்யும் கபடமும் நிறைந்ததே. சமாதானப் பேச்சு என்பது இரு சம சக்திகளுக்கு இடையே அன்றி, வல்லவன் ஒருவனின் கட்டளை ஆணையோ, அல்லது வெற்றி பெற்றவன் தோற்றவனுக்கு 'விரும்பினால் எடுத்துக்கொள் அல்லது விட்டுவிடு' என்ற அடிப்படையிலோ அல்ல.

எனவே சொல்ல முடியாத துன்பத்திலும் மரண வேதனையிலும் நடாத்தப்படும் ஆயுதப்போராட்டத்தை, வெளிநாட்டிலும், வடக்குக் கிழக்குக்கு வெளியிலும் இருந்து பொறுமையின்றி விமர்சிக்கும் தமிழர்களின் மன நிலையை என்னவென்பது. (விவிலியம் சொல்வது போல, 'பிறருக்காக தம் உயிரை அர்ப்பணிப்பதை விட மேலான அன்பு எதுவும் இல்லை'. திரும்பவும் விவிலியத்தில், தர்மம் வீட்டில் இருந்து ஆரம்பமாகிறது. எங்கு எம் வேர் இருக்கிறதோ அதுவே வீடு. விரும்பியோ விரும்பாமலோ எமது வேர் இன்று, சிறீலங்கா என்று இன்று சொல்லப்படுகிற தீவில்தான்) தமிழர்களின் வேறுபட்ட நிலைக்கும் ஒத்துழையாமைக்கும் பலகாரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

எப்படி இருப்பினும் இதை தொடரும் முதல் சில சொற்களின் கருத்துக்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன். சிங்களவர் என்று நான் இக்கட்டுரையில் சொல்லும் பொழுது சுருக்கமாக கருணை அற்ற சாதித்துவேசம் நிறைந்த சிங்களவர்கள் என்றும், பௌத்தர்கள் என்று சொல்லும் பொழுது, மென்மையான பௌத்த கொள்கையின் பேரால் (பௌத்தம் —



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒரு மதம் அல்ல இது ஒரு வாழ்க்கை வழிகாட்டி) கடும் வெறுப்பையும், மிருகத்தனமான நடத்தையையும் கட்டவிழ்த்துவிடும் பௌத்தர்களையுமே குறிப்பிடுகிறேன். நான் இச்சொற்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏனென்றால், இனவாதத்துக்கு எதிரான போரில் நாங்களே இனவாதிகளாய் மாறிவிடக்கூடாது என்பது மட்டுமல்ல Paulo Frere தனது Predagogy of the Oppressed என்கிற நசுக்கப்பட்டவர்கள் பற்றிய நூலில், 'நசுக்கப்பட்டவர்கள் நசுக்குபவர்களாய் மாறிவிடக்கூடாது' என்று எச்சரிக்கிறார். எனக்கு அன்புக்கும் பண்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய நண்பர்கள் என்று அழைக்கக் கூடியவர்கள் சிங்களவர்களே என்பதால் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்குத் தெரிந்தவர்களில், எனது உள்ளத்தை கவர்ந்த ஒருவர் தன் மதநம்பிக்கை பற்றி என்றும் என்னுடன் பேசியது கிடையாது. ஆனால் தன் அன்றாட வாழ்வில் பௌத்தத்தை திறம்பட கடைப்பிடிப்பவர். இதுவே அன்று நானறிந்த பல இன, பல மத, கலாச்சார இலங்கையாய் இருந்தது. இன்று வெறுப்புக்கும், அழிவுக்கும், துயரத்திற்கும் உள்ளாகிக்கொண்டிருக்கும், துர்நாற்றம் வீசும் சிறீலங்காவாக பரிணமிக்கிறது. பல காரணங்களுக்காகவும் இன்றைய பௌத்த சிங்கள அரசாங்கம் முன்வைக்கும் எதிர்வாதங்களை நம்பும், நம்பவிரும்பும், குறுகிய மனம் படைத்த தமிழர்களை ஒருபுறம் விட்டு மற்றப்பகுதியினரை பார்ப்போம். ரோமச்சக்கரவர்த்தியும், ஸ்ரோயிக் (Stoic) தத்துவ ஞானியுமான Marcus Aurelius தனது தியானத்தில் தன்னைத் தானே கேட்டார், ஒரு தனிமனிதனின் தரத்தை எப்படிக் கணிப்பது என்று. ஒவ்வொருவரும் எதெதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது என்கிற பதிலும் அவரிடம் இருந்து வந்தது. நம்மில் பலர் பணத்துக்கும், பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஏனெனில் அது சுகபோகத்தை, பாதுகாப்பை, சமூக அந்தஸ்தை, எம் உறவினர்கள், நண்பர்களின் பொறாமையையும் (இது அதிக திருப்தியை எமக்குத்தருகிறது) வாங்கவல்லது. அது மட்டுமல்ல இதுவே எம் வாழ்க்கையின் வெற்றியின் சின்னமாகவும், எம் தற்பெருமையை அதிகரிப்பதாகவும் உள்ளது.

வேறு சிலர் சமூக ஒன்றுகூடல், பொழுது போக்குகள், அலங்கரிப்பு, விளையாட்டுகள், பிறர் வம்பளத்தல் (இவற்றிற்கு இவர்கள் நேரம், சிந்தனை, சக்தி, உரையாடல், தலையங்கம் என்பவற்றில் கணிக்கப்படுகிறது) போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் தனிப்பட்டவர்களும், குடும்பத்தவர்களும் – எம்மவர்களிலும் அவர்கள் கதியிலும் எதுவித அக்கறையும் இல்லாதவர்கள். வெய்யிலையும், கடலையும், வெப்பவலய அழகையும், பாலியல் இன்பங்களையும் தேடி அலையும் மேற்கத்திய உல்லாசப்பயணிகளை கவரும் இத்தீவு, எம் உறவுகளுக்கு தருவது கவலையும் கண்ணீரும், பயமுமே. இந்த உறவுகளைப் பற்றி அக்கறையே இல்லாதவர்கள் இவர்கள். (சிறீலங்கா பௌத்தத்தின் பொக்கிசம் என்று அறைகூவினும், இன்று அது வன்முறைக்கும், ஊழலுக்கும் கை தேர்ந்து விட்டது மட்டுமல்ல சிறுவர் பாலியல் இன்பம் தேடிவரும் காமுகர்களின் சொர்க்கமாகவும் மாறிவிட்டது) சமூக ஒன்றுகூடல்கள், விளையாட்டுகள் மற்றும் ஓய்வுநேர பொழுதுபோக்குகள் வாழ்க்கையில் ஆக்கபூர்வமற்றவை என்றல்ல. நாம் அவற்றிற்கு எவ்வளவு நேரம், சக்தி, சிந்தனையை செலவிடுகிறோம் என்பதுதான் இங்கு என் வாதம். (ஆங்கில வார்த்தை 'Recreation' = 'We re-create' ourselves.) நாங்களே எங்களை உருவாக்குவது ஆக்கபூர்வமானது – அது எம்மை ஆளாக்குகிறது. இவற்றிற்கு செலவிடும் நேரம், மற்ற முக்கியமான தன்னலமற்ற முயற்சிகளை பலி எடுக்கிறதா என்று நாம் சிந்திக்க வேண்டும். திரும்பவும் Marcus Aurelies இன் கூற்றுப்படி, நம்மில் சிலர் பெறுமதி அற்றவைக்கு பெறுமதி கொடுத்து, காலத்தையும் நேரத்தையும் எம் சக்தியையும் விரையமாக்கிக் கொண்டு, வடக்கு கிழக்கில் கதியற்று அனாதையாய் அல்லலுறும் எமது உறவுகளை உருக்குலைந்து ஊனமுற விட்டுவிடுகிறோம்.

## திரையில் பார்க்காதது நிகழ்வே இல்லை

அரசு அலுவலகங்களிலும் சரி, தனியார் நிறுவனங்களிலும் சரி, வேலை செய்பவர்களின் சிந்தனை செயல்களை மாற்றி அமைப்பது கடினம். இவ் ஏனோதானோ போக்கை எம்மில் பலர் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். எனவே இது அரசியல் மட்டத்தில் ஏன் வித்தியாசமாய் இருக்கவேண்டும். எனவே இவ் ஏனோதானோப் போக்கை தம் உணர்வுக்குத்தள்ளி அமைதியாக இருந்து விடுகின்றனர். பாதுகாப்பு என்னும் போர்வையில் சிங்கள அரசும் சர்வதேசப் பத்திரிகையாளர்கள், நிவாரணப்பணியாளர்களை தடைசெய்திருப்பதால், தமிழ் மக்களின் உள்ளங்களையும், ஏன் வீடுகளையும் வயல்களையும், அன்றாட வாழ்க்கையையே அழிக்கும் சிங்கள இராணுவத்திற்கு 'பாதுகாப்பு' கொடுப்பதற்கு செய்தித்தணிக்கையும், இருட்டடிப்பும் துணை போகிறது. மேற்கத்தைய தேசங்களிலும் மற்றைய இடங்களிலும், அநேகமானவர்கள், பத்திரிகைகளில் வரும் எழுத்துக்களை விட, தொலைக்காட்சியில் வரும் செய்திகளையே நம்பும் இந்நாட்களில், திரையில் படமாக வராவிட்டால் எந்த நிகழ்வுகளும் உலகிற்குத் தெரியப்போவதில்லை என்றே அர்த்தம். ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தும் அது அறிவிக்கப்படாவிட்டால் அது நிகழவில்லை என்றே அர்த்தம். இது எவ்வளவு அபத்தமானது. ஆனால் அதுவே உண்மை. ஆங்கிலத்தில் 'Information' (தகவல்) என்ற சொல்லின் கரு (IN) **FORM** (ATION) ஆக்கம். நாம் பெற்றுக்கொள்ளும் தகவலே, எம் சிந்தனையை, எம் கருத்துக் கொள்கைகளை,. ஏன் எம்மையே உருவாக்க வல்லது. ஒரு சிறு தீவில் உள்ள மிகச் சிறு இனமாகிய தமிழ் மக்களின் செய்திகளை இலகுவாக மறைத்து விடலாம். வெளி உலகும் அதைப்பற்றி அறியாமலே இருந்து விடும். (அதை விட ஆபத்தானது தப்பான செய்திகளை வெளியிடுவது) தகவலும் விளக்கக் குறைவும் ஏற்படும் பொழுது, அக்கறையும் குறைந்துவிடுகிறது. தமிழ் இனத்தின் கடந்தகால, நிகழ்கால அவஸ்த்தைகளை, வருங்கால தலைமுறையை உருவாக்க நாம் படும் பாட்டை வெளி உலகம் அறியாமலே போய்விடும். இன்னும் ஒருபகுதி தமிழ் மக்கள், நாட்டில் என்ன நடக்கிறது என்றே விளக்கமில்லாமல் இருக்கின்றனர். கனடாவில் வதியும் ஒரு நண்பர் திகைப்புடனும், அங்கலாய்ப்புடனும் கேட்டாராம், 'இவர்கள் ஏன் இப்படி குழப்பத்தை உண்டுபண்ணிக்கொண்டே இருக்கிறார்கள்' என்று. ஒரு சிலர் வறுமையினாலும், எழுதப்படிக்கத் தெரியாததினாலும், அல்லது அன்றாட வாழ்க்கைப் பழு அவர்கள் செய்திகளைக் கேட்கவோ, படிக்கவோ அவகாசம் இல்லாமல் செய்வதாலும் அறியாமையில் இருக்கின்றனர். (இவர்கள் வறியவர்களும் தொழிலாளர் வர்க்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கமும்) இவர்கள் அனுதாபத்துக்குரிய வர்கள். இவ் அறியாமையை அகற்ற கூடியளவு உதவி தேவை. ஆனால் நான் முன்பு குறிப்பிட்ட கனடா நண்பர் போன்றவர்களில் இருக்கும் அறியாமை ஒரு பாவம், படுபாதகம் புரியும் குற்றம். ஏனென்றால் இவர்களில் இருக்கும் அறியாமை நிவர்த்தி செய்யக் கூடியது. இது இவர்கள் தாங்களாக தமக்கு விரும்பி வருவித்துக்கொள்ளும் அறியாமை. இத் தமிழர்கள், பிரச்சினை பற்றிக் கேட்டுவிட்டு — மறுபக்கம், என்ன பதில் சொல்கின்றார்கள் என்று அறிய அக்கறை அற்றவர்களாய், அல்லது சோம்பேறிகளாய் இருக்கின்றார்கள். (மறுபக்கம் என்கின்றேன், ஏனெனில் இத்தமிழர்கள் நாம் ஏன் இப்படிச் செய்கின்றோம் என்று தம்மையும் தமிழ் இனம் என ஒன்றுபடுத்தாமல், 'இவர்கள் ஏன் இப்படிச் செய்கின்றார்கள்' என்று விளக்கக் குறைவிலும் கருத்து வேறுபாட்டிலும் முதலாய் தங்களைப் புறம்புபடுத்திக் கொள்கின்றார்கள்). இவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தி கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்கு எப்படிப்பட்ட பதில்களாய் இருப்பினும் அவற்றை அறிய முயற்சி எடுக்காமல் அக்கறை அற்ற விதத்தில் மேலோட்டமாக ஏதோ கேள்விகளைக் கேட்பார்கள். இவைகள் கேள்விகளா என்ன?

### மனச்சான்றை அமைதிப்படுத்தி மகிழ்ச்சியாக இருக்க இலகுவான வழி

வேறு சில தமிழர்களின் நடைமுறை அவர்களின் உள்ளறிவு, சிந்தனைப்போக்கில் இருந்து கீழ்க்காணும் பாதையில் தெரியவருகிறது. 'எனக்கு வேறு எந்தப் பிரச்சினைகளிலும் ஈடுபட விருப்பமில்லை — எனக்கு, நான், எனது குடும்ப முன்னேற்றம், அதன் மகிழ்ச்சி, பொழுதுபோக்கு அவ்வளவுந்தான்'. ஆனால் தன் மனதைத் தட்டி ஆராய்வாரானால், முடிவு அவரைத் தலைகுனிய வைக்கும். அவரிலோ, அவளிலோ உள்ள சுயநலம் வெளியாகி தம்மில் தமக்குள்ள சுய கௌரவத்தையே தகர்த்தெறியும். இந் நிலையில் தமிழ்ப்போராளிகள் மூடர்கள் என்றோ அல்லது கொலைவெறியர்கள் என்றோ தங்களுத் தாங்களே நம்பவைப்பார்களேயானால், தங்கள் சுயநலத்தையே நியாயப்படுத்தி சுய திருப்தியும் அடைவார்கள் இந்நபர்கள். இனி இவர்கள் மனச்சான்று இவர்களை உறுத்தாது மட்டுமல்ல, இவர்களின் பாராமுகப்போக்கு ஒரு குறைபாடாக இவர்களுக்குத் தெரியாமல் போய்விடும். அதுமட்டுமல்ல இப் பாராமுகப்போக்கு அவர்களுக்கு அவர்களை, புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும், ஒழுக்கம், ஏன் ஞானவாதிகளாகவும் காட்டும். வெட்கப்பட்டு தலை குனிய வேண்டிய இப்போக்கு, அவர்களை பெரிய மனிதர்களாக எண்ண வைத்துவிடுகிறது. இதை நான் திரும்பவும் வலியுறுத்துகிறேன். இது ஒரு **உள்போக்கு.** உளவியல் தந்திரம். ஏனென்றால் நாம் மற்றவர்களுடன் வாழமுன்னர், நாம் நம்முடன் சமாதானமாக வாழவேண்டும். மற்றெல்லா மக்களையும் போல தமிழர்களும் தம் குற்ற உள்ளத்தைத் தட்டும் மனச்சாட்சியை, தம் கடந்தகால வாழ்க்கை நினைவுகளை, ஏன் பெற்றோர், உற்றார் உறவினர்களைப் பற்றிய நினைவுகளைத் தூக்கி எறியும் சுயநலவாதிகளாகிவிட்டனர். இன்னும் ஒரு வகையானவர்கள் இருக்கிறார்கள். இதற்கு விளக்கம் தேவையில்லை. நண்பர் எழுதிய கடிதம் ஒன்றை குறிப்பிடுகின்றேன். 'வெளிநாடுகளில் இருக்கும் சில தமிழர்கள், போராட்டத்தைக் கைவிட்டு நல்ல சாந்தமாக சிறுபான்மையினராக திரும்பிப் போக வேண்டும் என்று நினைக்கிறார்கள். இவர்கள் ஆசையும் அபிலாசையும் என்னவென்றால், சிறீலங்காவுக்குச் சென்று அங்குள்ள உற்றார், உறவினருடன் சிறீலங்காக் கடற்கரைகளில் தங்க வேண்டும், கண்டி நுவரெலியா என்று உல்லாசப்பயணம் போக வேண்டும். நல்லாய் அனுபவிச்சம்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

என்று வர்ணிக்கவேண்டும். சிங்கள சிறீலங்கா உல்லாச விடுதிகளில் நாணய மாற்றில் பெறுமதி ஏறிக்கொண்டே போகும் வெளிநாட்டுக் காசை அள்ளி வீசி, வெளிநாட்டு உடை, வெளிநாட்டு கொச்சைத்தமிழ் உச்சரிப்பு என்று மகாராஜாக்கள் போல உல்லாசப் பயணிகளாக.????'. அன்று இவர்கள் அல்லது இவர்களது பெற்றோர்கள் பிறந்த மண்ணில் 'உல்லாசப்பயணிகள்' இவர்கள். வடக்குக் கிழக்கில் இவர்கள் சொந்த உறவுகள் அனுபவிக்கும் கஸ்ர துன்பங்களை துளியும் அறியாத இவர்கள், பெரும் விடுமுறை அனுபவிக்கத் துடிக்கிறார்கள். 'நாங்கள் அனுபவிக்கமுடியாமல் கெடுக்கின்றார்கள் இந்தப் போராளிகள்; எவ்வளவு நாகரீகமற்றவர்கள்; அவர்கள் மேல் எங்களுக்கு எரிச்சலும் சினமும் வருகிறது; அவர்கள் உறவும் வேண்டாம் தொடர்பும் வேண்டாம்; அவர்களுக்கு உதவி செய்யவும் மாட்டோம்; பிரச்சினையைப் பற்றிக் காது கொடுக்கவே மாட்டோம்; வெறும் அலுவல்; அவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க நாம் விடுமுறைக்கு வேறு எங்காவது போவோம்; இன்று தொலைக்காட்சியில் வேறு என்ன இருக்கின்றது.' இவர்களுக்கு போராளிகள் மேல் ஏகப்பட்ட சினம். ஈன இரக்கமற்று தம் சொந்த மக்கள் பக்கமிருந்தே முகத்தைத் திருப்பி விட்டார்கள்.

அடுத்து வருபவர்கள் மதப்பற்றுள்ள தமிழர்கள் (இந்துக்களும் கிறிஸ்தவர்களும்). இவர்களின் அகிம்சை நிலையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தெய்வம் நாம் காண அல்லது கேட்க நேரடியாகத் தோன்றி மனிதப் பிரச்சினைகளில் தலையிட்ட காலம் இதுவல்ல என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சரித்திரத்தில் தெய்வத் தலையீடு இன்று ஏற்படும் என்றால்அது மனித காரணிகள் மூலமாகத்தான் இருக்கும். எனவே இறைவனை வேண்டிவிட்டு செயற்பட வேண்டும். (உ+ம்) தகர்ந்த தமிழ் இல்லங்களையும், உள்ளங்களையும் கட்டி புனர்வாழ்வு கொடுக்க உதவவேண்டும். அது ஆயிரம் பவுண்களாக இல்லாவிட்டாலும், நூறு பவுண்களாக, இல்லை பத்துப் பவுண்களாக, எவ்வளவு சிறிதாக இருந்தாலும் உதவ முன்வரவேண்டும். வடக்குக்கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு அகிம்சை வழியில் நாம் உதவக்கூடிய பல வழிகளில் இதுவும் ஒன்று.

## நாம் ஒரு இனமாக உயிர் வாழ வேண்டுமாயின் அகிம்சை ஒருபோதும் துணைபோகாது

இறுதியாக ஒரு சாரார் மனிதாபிமான மனுநீதிக்கோட்பாட்டு அடிப்படையில் வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள். இவர்களின் நிலைப்பாட்டை வெறும் கலைப்பிரியர்களின் நிலைப்பாடாகவும், நாகரீக கனவான், கனவாட்டிகளின் புறக்கணிப்பென்றும் கணித்துத் தட்டிக்கழித்துவிட முடியாது. மொத்தத்தில் தமிழர்கள் பிற கரிசனையும் உள்ளத்துடிப்பும் உள்ளவர்கள். இவர்களின் வன்முறை எதிர்ப்பும் பாசமும் நுண்ணிய கட்டுக்கோப்புக்களையும், அடிப்படையாகக் கொண்டது, அல்லது தமிழர்களுக்கே உரிய ஒரு தன்மை என்று கருதி விட முடியாது. இதற்கு இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் இருந்து ஒரு உதாரணம் தருகின்றேன். இங்கிலாந்து தன் நாட்டைக் காக்க யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது அகிம்சைக் கோட்பாட்டை தீவிரமாக ஆதரித்த ஆங்கிலேய ஆண்களும் பெண்களும் அதன் பிரதிபலன்களைப் பின் அனுபவிக்க வேண்டியிருந்தது. எனினும் இதுவும் ஒரு வகையில் தீவிரத்தின் வெளிப்பாடுதான். ஆனால் அவர்கள் பிழையாக வழிநடத்தப்பட்டுவிட்டார்கள். இந்நிலைப்பாட்டை இன்னும் அதிகமானவர்கள் பின்பற்றியிருந்தால் உலகம் இன்னும் சில காலம் தீய அடக்கு முறையாளர்களின் ஆட்சிக்கு அடிபணிந்து அடங்கி ஒடுங்கவேண்டியிருந்திருக்கும். இன்னும் சில காலம் என்கிறேன், சர்வாதிகாரிகளும் சர்வாதிகாரமும், கொடுங்கோலாட்சியும் நித்தியமானவையல்ல. அவர்கள் காலமும் நேரமும் வரும்போது மறைந்துவிடுவார்கள். பிரான்சியப் புரட்சி நெப்போலியனின் சர்வாதிகாரக் கொடுங்கோலாட்சிக்கு பிரான்ஸ் மக்களை இட்டுச்சென்று திரும்பவும் முடியாட்சியைத் தோற்றுவித்தது என்னவோ உண்மைதான். புரட்சி தோல்வியாகவும் ஏமாற்றப்பட்டதாகவும் கறைபடிந்ததாகவும் தோன்றினாலும் இந்நிலை நீடிக்கவில்லை. பிரான்ஸ் மக்கள் அன்று எதற்காகப் புரட்சி செய்தார்களோ, அதை அன்றிலிருந்து இன்றுவரை காத்து அனுபவிக்கின்றார்கள். ஹிட்லர் தனது கொடுங்கோலாட்சியில் ஐரோப்பிய நாடுகளை அடிபணிய வைத்திருந்தான் என்றால், ஆசிய ஆபிரிக்க நாடுகள் நாசிசத்தின் கீழ் எப்படி இருந்திருக்கும். இது என்னை திரும்பவும் தமிழர் பிரச்சினைக்குக் கொண்டு வருகின்றது. நாம் ஒரு இன மக்களாக சுதந்திரத்துடனும், சுய மரியாதையுடனும், வாழவேண்டுமானால்

## இன்றைய நிலை






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழத்தைத் தவிர வேறுவழியில்லை. அகிம்சாவாதிகளாக இருந்த எம்மை தொடர்ச்சியான வன்முறைச் சம்பவங்கள் மூலம் பாதுகாப்பற்ற பிரஜைகளாக்கி இந்த முடிவுக்கு வரச்செய்தது.

காந்திய சத்தியாக்கிரகம், அநீதிக்கும் புறக்கணிப்புக்கும் எதிரான அகிம்சைப் போராட்டம், அமைதிப் போராட்டம், ஜனநாயக அரசியலமைப்புக்கு அமைய எடுத்த நடைமுறைகள் அனைத்தும் வன்முறையில்தான் முடிந்தது. சில தமிழர்கள் ஞாபகத்திலிருந்து சில கடந்த கால நிகழ்வுகள் விரைவில் அழிந்து விடுவதால், திரும்பத்திரும்ப ஞாபகப் படுத்தவேண்டியுள்ளது. 1950களில் இருந்து தொடர்ந்து வரும் இனக்கலவரங்களைத் தடுத்து ஒழுங்கு, அமைதியை நிலைநாட்ட சிங்கள அரசாங்கங்கள் தாமதித்தது ஏன்? வன்முறைக் கும்பல்களின் பயங்கரவாத நடவடிக்கையால் தமிழர்களைப் பயமுறுத்தி அடிபணியவைத்து, தாம் இரண்டாந் தரப் பிரஜைகள் என்பதை ஏற்றுக்கொள்ள வைத்து நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதாலேயே. அடுத்து அரசாங்கமும் அரச படையினரும், பொலிஸ் காவலரும் சேர்ந்து செய்த இனக்கலவரங்கள் 1983–ல் உச்சக்கட்டத்தை அடைந்தது. உத்தியோகபூர்வ பட்டியல்களில் (உ+ம் வாக்காளர் பட்டியல்) இருந்து தமிழர் விபரங்களையும் பெயர்களையும் சேகரித்து, அவர்களை உயிரோடு சித்திரவதை செய்யவும், கற்பழித்து, கொள்ளையடித்து மிகுதியை எரித்து அழிக்கவும் கையாட்களுக்கு பிரயாண வசதியும் செய்துகொடுக்கப்பட்டது. இது ஒரு அகோர இனப்படுகொலை. இது இனக்கலவரம் அல்ல. அரச அதிகாரிகளாலும் மதத்தலைவர்களாலும் திட்டமிடப்பட்டு தூண்டிவிடப்பட்ட இனப்படுகொலை. இது ஒரு கோழைச்செயலும் கூட. திராணியற்ற பெண்கள், குழந்தைகள், ஆண்கள் என்று தாக்கினார்களேயன்றி தமிழ் விடுதலைப் போராளிகளை எதிர்கொண்டு போகவில்லை. கொழும்புச் சிறைச்சாலையில் அரசியற்கைதிகளாக இருந்த தமிழ் கைதிகள் தம் சக சிங்களக் கைதிகளால் கொலைசெய்ய கட்டவிழ்த்துவிடப் பட்டார்கள். இது சிறைச்சாலை அதிகாரிகளால் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டதே. இவை எல்லாவற்றையும் கண்டும் கேட்டும் ஏன் தாமே அனுபவித்தும் நாட்டை விட்டு வெளியேறிய அதே தமிழர்கள், மேலை நாடுகளில் குடியேறியவர்கள் அங்கு கைவிடப் பட்டு துன்பத்திற்குள்ளாகும் தம் மக்கள் மட்டில் பாராமுகமாய் இருப்பதேன். 1983–டன் தமிழர் துன்பம் முடிந்துவிட்டது என்று எண்ணுகின்றார்களா. அங்கு தொடர்ந்தும் குண்டு வீச்சுக்களும், எறிகணைகளும் விழுந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆக்கிரமிப்புப் பகுதிகளில் மிருகத்தனமான அழிவுகள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. சிங்கள இனவாதத்தின் (hegemanic drivers) உருவாக்கமே தமிழ் ஆயுதப்போராட்டம். இது வேறுவழியின்றி கடைசியாக எடுக்கப்பட்ட முயற்சியென்றே கொள்ளவேண்டும். தாம் எதிர்கொள்ளப்போகும் கஸ்ரங்களை புத்திசுயாதீனமாகத் தெரிந்து கொண்டுதான், செயலற்ற பலிப்பொருட்களாக என்றும் இருந்துவிடாமல், பாதுகாப்பற்ற தமிழ் மக்களை பாதுகாக்க அவர்கள் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கப் போராளிகள் புறப்பட்டனர்.

ஐரோப்பியர்களால், (அரேபியர்களால் அல்ல) நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்டு இன்று தமக்கென ஒரு நாட்டை அமைக்க முயலும் யூதர் போல, தமிழர்களும் தமிழீழ எல்லைக்குள்தான் நாம் பாதுகாப்பாகவும் சுயமரியாதையுடனும் வாழலாம் என்று உணர்த்தப்பட்டுவிட்டார்கள். (கடந்த காலத்தில் ஐரோப்பியர்கள் செய்த பாவத்துக்கு துரதிஸ்ரவசமாக பலஸ்தீனர்கள் பரிகாரம் செய்கிறார்கள், இது வேறுகதை). சுதந்திரத்திற்கு முன்போ (1948) அல்லது நாடு சுதந்திரம் அடைந்த அண்மைக்காலங்களிலோ எம் தமிழ் தலைவர்கள் நாட்டைக் கூறுபோடும்படி கேட்கவில்லை. பின்பு நிகழ்ந்த சம்பவங்களால் அதிகுறைந்த அதிகாரப்பரவலாக்கத்தைக் கேட்டார்கள். அதன்பின்பு தொடர்ச்சியான அரசின் பாரபட்சத்தினாலும், அதிகரித்துக்கொண்டே போன வன்முறைகளினாலுமே தனி மாநிலமே தீர்வு எனக் கண்டனர் தமிழ் மக்கள். எனவே இதற்கு யார் காரணம். இங்கு வன்முறைக்கு தள்ளப்பட்ட மக்கள் வன்முறையாளர்கள் எனப்படுகிறார்கள். வரலாறு மறந்துபோய்விட்டது. காரண காரியங்கள் மறைக்கப்பட்டுவிட்டன. பாதிக்கப்பட்டவர்கள் வில்லன்களாகக் கணிக்கப்படும் கசப்பான அனுபவம். யார்மேல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார்களோ, அவர்கள் பாதிப்புக்குள்ளானவர்களை இன்று பயங்கரவாதிகள் என்று குறிப்பிடுகிறார்கள். தமிழர்கள் சிங்களப் பகுதிகளைக் கைப்பற்றவில்லை. சிங்கள இராணுவம் தமிழர்கள் நேசிக்கும் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தது போல, கண்டியை ஆக்கிரமிக்கவில்லை. நாம் கேட்பதெல்லாம் நாம் பிறந்த மண்ணில் எங்களை அமைதியாக வாழ விடுங்கள். எங்கள் வழியில் எங்களைப் போக விடுங்கள். இது என்ன அதிகமாகவா கேட்டுவிட்டோம். பெரும் எண்ணிக்கையுடன், நவீன ஆயுதங்களையும் கொண்டு தமிழ் மக்களை அடிமைகளாகவும், பாதுகாப்பு அற்றவர்களாகவும் ஆக்கிவிட்டு ஒரு அமைப்பின்கீழ் வர கட்டாயப்படுத்துவதேன். மொழி, கலாச்சாரம், நிலம் இவற்றால் இலங்கை இப்பொழுது இரு வேறுபட்ட இனங்களைக் கொண்டது. இதற்கு பௌத்த சிங்கள இயக்கங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். வேறொரு சந்தர்ப்பத்தில் வேறொரு இன மக்களுக்கு சொல்லப்பட்டது போல 'என் மக்களைப் போகவிடு'.

(சில தமிழர்களின் அபிப்பிராயப்படி) போராளிகள் போராட்டத்தைக் கைவிடுவார்கள். ஆனால் என்ன நடக்கும்? நான் இக்கட்டுரையில் முன்னிரண்டு பந்திகளில் கூறுவதுபோல பலமிழந்த நிராயுதபாணிகளுக்கு 'சலுகை'களும் கிடையாது. (சலுகை தாழ்ச்சியையும் அவமானத்தையும் குறிக்கிறது.) Herodotus என்கிற சரித்திர ஆசிரியர், அடிமைகள் புரட்சி பற்றி கூறும் பொழுது, எஜமான்கள் அடிமைகளுடன் வாள்கொண்டு வெல்லமுடியாத போரை நடத்தினர். வாள் கொண்டு வெல்லமுடியாது என்று கண்டதும் அவர்களில் ஒருவர் கூறினார், ஆயுதங்களைக் கைவிட்டு இறந்த கால அதிகாரச் சின்னமான சாட்டைகளை எடுப்போம். எதிரி முன்னாள் அடிமை நிலையை தன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டிருந்தால் சரணடைவான் என்று, அப்படியே திட்டமும் நிறைவேறியது. இந்த ஒப்புதலில் கடைசிப்பகுதி எமக்குப் பொருந்தாது. தமிழர்கள் அடிமைகளாய் இருந்ததே கிடையாது. இருப்பினும் தமிழர்கள் பயந்த சுபாவம் கொண்ட கோழைகள், எதையும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும், சிங்களவர்கள் வீரர்கள், அஞ்சா நெஞ்சத்தவர், விரைவில் சினந்து எழுவார்கள் என்றிருந்த நிலையை மாற்றி தமிழர்கள் உரிய இடம் கொடுக்கப்பட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வேண்டியவர்கள், சமமாக மதிக்கப்பட்டு நீதியுடன் நடத்தப்படவேண்டியவர்கள் என்ற நிலைக்கு சிங்களவர்களை அமைத்தவர்கள் தமிழ் போராளிகளே. நாம் அடையவேண்டிய குறியை அடையும் முன் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டால் தமிழ் மக்களின் நிலை என்னாவது. அதற்காக இழந்த இழப்புக்கள் எல்லாம் வீணாகிவிடும். திரும்பவும் புறக்கணிப்புக்களும் அவமானங்களும், கற்பழிப்புகளும், அவமரியாதைகளும், காடைத்தனங்களும் கட்டவிழ்த்துவிடப்படும். இதை அறிவிக்க ஒரு தீர்க்தரிசி தேவையில்லை. தப்புக்கணக்குப் போட்டு கற்பனை உலகில் இருந்து விடக்கூடாது. வெற்றியீட்டியவர்கள் அரக்கர்களாகவும், இனவாத, மத வெறியால் உந்தப்பட்டு தம் வெற்றியை தமிழர்களை இழிவுபடுத்திக் கொண்டாடுவர். தமிழர்களோடு தோளோடு தோள்கொடுக்கக் கூடிய சிங்களவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் இன்று தமிழர்களுக்கு எதிரான சூழ்நிலை பரவலாக உருவாக்கப்பட்டுள்ளது. அனேகமான சிங்கள மக்கள் தம் இனவாதத்தை பெருமையாகக் கொள்கிறார்கள். அதைத் தேசிய பிரதிபலிப்பாக கொள்கிறார்கள். நேர்மையான உள்ளம் படைத்த சிங்களவர்கள் துரோகிகளாக, கோழைகளாகக் கருதப்பட்டு ஓரங்கட்டப்படுகிறார்கள். கடந்த காலங்களைப் போல் கொள்கைகளும், நடைமுறைகளும் இனத்துவேசம் பிடித்த பௌத்த இனவாத சன்னியாசிகளால் சமர்ப்பிக்கப்படுகிறது.

(தமிழர் பிரச்சினைக்கு முடிவுகண்ட பின்னர் இவர்கள் கவனம், முஸ்லீம்கள் மேலும், சிங்கள கிறிஸ்தவர்கள் மேலும் திரும்பும். சிறீலங்காவை தனி பௌத்த சிங்கள தீவாக்குவதே இவர்கள் நோக்கம்) இதுவே எம்மை எதிர்நோக்கும் உண்மை. ஆனால் ஈழத்துக்கு வெளியே இருக்கும் தமிழர்களாகிய நாம் கைகொடுக்காவிடின் எவ்வளவோ முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டுவிடும். ஈழத்துக்கு வெளியே இருக்கும் நாம், எம்மில் பெரும் சரித்திரப் பழுவை சுமந்துகொண்டிருக்கிறோம். என்றும் இல்லாதவாறு இன்று எமது உதவி அவசியமாகவும், முக்கியமானதாகவும் இருக்கிறது. பொருளுதவி, மற்றவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் என்று பல வழிகளிலும் உதவி செய்யலாம். மனம் உண்டானால் இடமுண்டு.

இன்னும் சில தமிழர்கள் நாம் கையாண்ட வழிமுறை, எமக்கே பாதகமான முடிவாகிவிடலாம் என்று பயப்படுகிறார்கள். வெளிப்படையாகச் சொன்னால், சிங்கள வன்முறையின் பிடியில் இருந்து புலிகளின் கொடுங்கோல் ஆட்சிக்கு மாற்றப்பட்டுவிடுவோமோ? ஈழத்தில் ஜனநாயகம் இருக்குமா, தனி மனித சுதந்திரம் இருக்குமா அல்லது அடக்குமுறை நிலவுமா என்று கலங்குகிறார்கள். ஆனால் உலகமே இதுவரை கண்டிராத தியாகங்கள் பல செய்து துணிவுடன் எதையும் எதிர்கொள்ளும் தமிழர்களை எந்த சக்திகளாலும் நசுக்கி பயம்காட்ட முடியாது. அது வெளிநாட்டு சக்தியாக இருந்தாலென்ன, உள்நாட்டு சக்தியாக இருந்தாலென்ன. எமக்கு எம்மக்களில் நம்பிக்கை வேண்டும். அவர்கள் அதை நிரூபித்துவிட்டார்கள். உரித்துடையவர்களும் அவர்களே. ஈழத்துக்கு வெளியே இருந்துகொண்டு, (என்னைப்போல லண்டனில் இருந்து கொண்டு) போராட்டம் தொடர வேண்டும் என்று தீர்மானிக்க முடியாது; தீர்மானிக்கவும் கூடாது. எங்களுக்கு அந்த உரிமை இல்லை. எம் உடலோ, உயிரோ, வீடோ, வாசலோ, பிள்ளைகளோ பாதிப்புக்குள்ளாகவில்லை. வசதிகள் பாதுகாப்புகளுடன் இருக்கும் நாம் மற்றவர்களுக்காக தீர்மானமெடுக்க உரிமை கிடையாது. (ஆனால் பசும் புற்தரைகளை நாடி ஓட்டியிருக்கும் எம்மைவிட ஈழத்துக்கு வெளியில் சிங்கள சிறீலங்காவுக்குள் இன்னும் இருக்கும் தமிழர்களுக்கு அதிக உரிமை உண்டு.) ஆயிரம் ஆயிரம் உயிர்களை பறிகொடுத்து விட்டோம். இன்னும் எத்தனையோ ஆயிரம் உள்ளத்தாலும் உடலாலும் ஊனமுற்றுள்ளார்கள். ஒரு தலைமுறையே முறையான கல்வி இன்றி, தம் வாழ்வில் அமைதியோ அழகோ இன்றி வாழ்கிறது. மறைந்த எனது அன்னை அன்று சொன்னார், எத்தனையோ இளம் தமிழ் உயிர்கள் வாழமுதலே மடிகிறார்கள். தமிழினம் நன்றாக வாழ வேண்டும் என்று. நரகமாக மாறிய சொர்க்கபூமியில் இருந்து தப்பி வெளியேறிய நாம் அவர்களுக்காக தீர்மானிக்க உரிமையற்றவர்கள். ஆனால் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் எம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,

## 14 ஆண்டு காலப் போரில் மிகப் பெரிய மோதல்! சர்வதேசச் செய்தியாளர் விபரிப்பு

தற்போது நடைபெற்றிருப்பது மிகப் பெரிய மோதல். பதினான்கு ஆண்டுகாலப் போரில் ஒரு பெரும் தாக்குதல், புலிகளின் கேந்திர முக்கிய நிலைத் தாக்குதல் இதுவாகும். 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையில் இரண்டு இராணுவப் பிரிவுகள் ஒன்று சேர்ந்து வவுனியா, ஆனையிறவு பாதையைப் பிடிக்கும் முயற்சியில் ஒவ்வொரு இராணுவ நகர்விலும் புலிகளின் பெரிய எதிர்ப்புக் கிடைத்தது.

இவ்வாறு சர்வதேசச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இத்தகவலை நேற்று வெளியிட்ட ஐ.பி.சி செய்தி நிறுவனம் மேலும் அச்செய்தியாளரை மேற்கோள்காட்டித் தெரிவிக்கையில்,

யார் பெரிது என்பதில் பெரும் போட்டி ஏற்பட்டது. இப்போது புலிகள் வெவ்வேறு இடங்களில் அடிபோட வல்லவர்கள் தாங்கள் என்பதைக் காட்டியிருக்கிறார்கள். கொழும்பில் கூட பெரும் தாக்குதலை நடத்தினார்கள். ஒரு பெரும் குழி அங்கே இருக்கிறது. ஒரு 'பெரிய வடு' இருக்கிறது. எல்லோரும் பார்க்கக்கூடிய 'போர் வடு' உலக வர்த்தக மையமாக அமைந்திருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தை அரச படைகள் பிடித்தபோது சிறீலங்கா மக்கள் பலர் கருதினார்கள் போர் முடிந்துவிட்டது என்று. ஆனால், கடந்த இரண்டு வருடங்களுள் அது மேலும் தீவிரமடைந்திருக்கிறது என்றும் தெரிவித்தது.

இதேவேளை களநிலையின் அபாயங்களை கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் அரசியல் நிர்ப்பந்தக்களுக்காக 'ஜயசிக்குறு' யுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் 'ஜயசிக்குறு' இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் சண்டையில் இராணுவத்திற்கேற்படும் இழப்புக்கள் பெருத்த இழப்புகளாகும் எனத் தெரிவித்த அந்த ஆய்வாளர்கள்,

வியட்னாமில் அமெரிக்கப் படைகளுக்கு நேர்ந்ததுதான் வன்னிப்பகுதியில் சிறீலங்காப் படையினருக்கு நடக்குமென்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சகோதர சகோதரிகள், அங்கிருக்கும் எம் உறவுகள் தீர்மானித்துவிட்டார்கள். நியாயமாக நீதி கேட்டோம். கிடைத்தது காற்றில் பறக்கும் வாக்குறுதிகளும் வெறுப்பும் வன்செயல்களுமே. உண்மையான சமாதானத்திற்கு வழி பிரிந்து போவதே. காயங்களிலிருந்து விடுதலையடைய, யுத்தத்தால் உண்டாகும் நோவையும் மரணத்தையும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். Frantz Fanan காட்டியதுபோல Decolonisation மிகக் கடினமானதும் நிரந்தரமில்லாததுமான திட்டம். எதையும் தாங்க அங்கிருக்கும் தமிழர்கள் தைரியத்தோடு தீர்மானித்துவிட்டார்கள். இந்நிலையில் இவர்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளை எவ்வளவு சிறிதானாலும் செய்யாமல் இருக்கமுடியுமா? உதவி என்றால் திரும்பவும் சொல்கின்றேன், புனரமைப்பாக இருக்கலாம், புனருத்தாரணமாக இருக்கலாம், பொதுமக்கள் வாழும் பகுதிகள், வீடுகள், வயல்கள் பொது மக்கள் மேல் குண்டுவீச்சை நிறுத்தும்படி சிங்களவரைக் கட்டாயப்படுத்துவதாக இருக்கலாம். மருந்தும், உணவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கும்படி வற்புறுத்தலாம். பெண்களையும், யுவதிகளையும் கற்பழித்தலையும், வெளிநாட்டு ஆயுதப்படையினரைப்போல் கொடூர சித்திரவதைகளால், அவர்களில் பய உணர்வை வரவழைப்பதையும் நிறுத்தத் தூண்டலாம். (பயம் என்ற பதம் பயங்கரவாதத்தை ஞாபகப்படுத்துகின்றது. சிறீலங்கா அரச படைகள் ஆக்கிரமித்து இருக்கும் வடக்குக் கிழக்கு பகுதிகளில் இருக்கும் தமிழ் மக்களுக்கு சிங்களப்படையினர் பயங்கரவாதிகள்.) மனமிருந்தால் எது விதத்திலாவது உதவ வழிபிறக்கும். சுயநல நோக்கத்தோடாவது நாம் உதவ முன்வரவேண்டும். எம்மக்கள் அங்கு அடிமைகளாக வாழ, நாம் இங்கு எப்படி மானத்தோடு வாழ முடியும். உடலால் நாம் பல மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் அவர்கள் எம்மில் ஒரு பகுதி.

இறுதியாக வெற்றியைத் தொடர்ந்து உண்மை அமைதி கிடைக்கும். திருப்தி/யற்ற தற்காலத் தோல்வியால் அடிமைப்படுத்தப்பட்டாலும் உண்மை அமைதியை கூறுபோட முடியாது. அது தரும் ஆசியையும், நன்மைகளையும் தமிழர்கள் நாமும் நம்முடன் சிங்களவர்களும் அனுபவிப்போம்.

— எஸ். ஜே.

## தமிழ்பகை 'ஜெயின்' அறிக்கையைக் கண்டித்து தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்

கடந்த டிசம்பர் 1-ம் திகதி தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு மார்க்சிய – லெனிய கட்சித் தோழர்களால் நடத்தப்பட்டது. தமிழர் பகை 'ஜெயின்' அறிக்கையை கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், விடுதலைப் புலிகளின் ஆதரவுக் குரல்களும், தமிழக ஆதரவுக் குரல்களும் எழுப்பப்பட்டதுடன், 'ஜெயின்' அறிக்கையைக் கண்டித்து பல கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் உரையாற்றினார்கள். இதன் ஒரு பகுதியாக கரூர் மாவட்டத்திலும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. தமிழகத்தில் தமிழ்நாடு மார்க்சிய – லெனிய கட்சி பரவலாக ஈழ ஆதரவுச் செயற்பாடுகளை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் எழுச்சி நாள் - 97 புதுச்சேரியில் விழா எடுக்கப்பட்டது

கடந்த 26.11.97 அன்று புதுச்சேரி அரியாங்குப்பத்தில் உள்ள பகுத்தறிவு இலவச நூலகத்தின் சார்பில் மேற்படி தமிழர் எழுச்சி நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் ஆரம்பத்தில் சுமார் 600க்கும் மேற்பட்ட மக்கள் ஊர்வலமாகச் செல்லும்போது சாலையின் இருமருங்கிலும் பெருந்திரளான மக்கள் ஆதரவுக் குரல் எழுப்ப, 1 கிலோமீற்றர் தூரத்திற்குப் பட்டாசுகள் கொழுத்தப்பட்டது. தமிழீழ ஆதரவுக் முழக்கங்கள் செய்து கொண்டு ஊர்வலம் கடலூர் சாலையைச் சென்றடைந்தது. இந் நாளில் மேற்கொள்ளும் எழுச்சிநாள் விழாவின் சிறப்பும், நோக்கமும் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் அனைவருக்கும் இனிப்புக்களும் வழங்கப்பட்டன. அதன் பின்னர் புதுச்சேரி அருகில் முதலியார் சாவடியில் அமைந்திருக்கும் ஈழத்தமிழர் அகதிமுகாமிற்குச் சென்ற ஊர்வல ஏற்பாட்டாளர்கள் இராவணன் பகுத்தறிவு நூலகத்தின் சார்பில் 250 உணவுப் பொட்டலங்களையும், உடைகளையும் வழங்கினர்.

## நாங்கள் யார் விடுதலைப் புலிகளை நிராகரிக்க?

### - பாரதீய ஜனதாக் கட்சி -

"விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதோ அல்லது எதிரானதோ என்பதல்ல எமது கட்சியின் நிலைப்பாடு. அதை அங்கு வாழும் தமிழ் மக்களே தீர்மானிப்பர். ஆனால் சிறீலங்காவில் நடப்பவற்றையிட்டு இந்தியா அக்கறை கொள்ளும்" இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சி தமிழ்நாடு பொதுச் செயலாளர் எம். கணேசன் தெரிவித்துள்ளார். பலர் நினைப்பது போல், எமது கட்சி தமிழரின் விடயத்தில் கண்களை மூடிக்கொண்டிருக்காது எனத் தெரிவித்த எம். கணேசன், தமிழர்களின் பிரச்சனை இந்தியாவினுடைய பிரச்சனை, பல்லாயிரம் தமிழ் அகதிகள் எம்மோடு வாழ்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். எண்பதுகளில் தமிழீழ ஆதரவாளர்கள் மாநாட்டில் பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளர் திரு. வாஜ்பாய் அவர்கள் கலந்து கொண்டதையும் நினைவுபடுத்தியுள்ளார்.



கரூர் மாவட்டத்தில் 'தமிழ்நாடு மார்க்சிய - லெனினிய' கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட எழுச்சிப் பேரணியின் ஒரு பகுதி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தேர்தல் வாக்குறுதிகளும் அம்மையாரின் சுயமுகமும்

சந்திரிகா அம்மையார் தனது மூன்று ஆண்டுகால ஆட்சியில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது என்பது சொல்லிச் சொல்லிப் புளித்துப் போன கதை. தேர்தற்காலத்தில் வாக்குறுதிகளை எக்கச்சக்கமாய் வழங்கிவிட்டு மக்கள் அதைக் கேட்டு மிகுந்த எதிர்பார்ப்புடன் பார்த்திருக்க ஆட்சி அதிகாரம் ஏறியதும் அந்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டது. அது மட்டுமன்றி சொல்லப்பட்ட வாக்குறுதிகளுக்கு எதிராகவும் செயற்பட்டது.

தேர்தலின் போது வாரிக்கொட்டிய வாக்குறுதி மழையில் மக்கள் மூச்சுத் திணறினர்; ஆனந்தக்கண்ணீர் விட்டனர். தமக்கு விடிவுகாலம் கிட்டிவிட்டதாக எண்ணிக் கூத்தாடினர்.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்து சமாதான ரீதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் கொண்டுவருவது தனியார் மயமாக்கலை நிறுத்துவது, ஜனாதிபதி முறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சிமுறை ஒன்றைக் கொண்டு வருவது, ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், வீண்விரயம் என்பவற்றைக் கட்டுப்படுத்துவது அரசியற் படுகொலைகளை முற்றாக நிறுத்துவது போன்ற இன்னோரன்ன விடயங்களால் மக்களை உச்சிகுளிர்வித்து, ஆட்சி பீடம் வந்ததும் எல்லாம் மறந்து போன கதையாய் தன் சுயரூபம் காட்டியது.

சந்திரிகா அம்மையார் வெளியில் தன்னை வெண்தாமரை கொண்ட சமாதானத் தேவதையாய் பரப்புரை செய்துகொண்டு, உள்ளுக்குள் கோரப்பல் கொண்ட, தமிழர்களை நரபலிகேட்கின்ற சிங்கள இனவாத அரசியாக நாடகமாடுகிறார்.

மேன்மேலும் யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு யுத்தத்தையே "சமாதானத்துக்கான யுத்தம்'' என்ற புதிய பெயருடன் நடாத்திக்கொண்டிருக்கிறார். தொலைதூரம் காற்றில் பறந்து காணாமல் போய்விட்ட தேர்தற்கால வாக்குறுதியில் இதுவும் ஒன்று.

யுத்தத்திற்கான செலவினம் நாளாந்தம் அசுர வேகத்தில் கூடிச்செல்கின்ற நிலமைக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் நாட்டின் அனைத்து வருமானங்களிற் பெரும் பகுதி யுத்தத்திற்கே செலவிடப்படுகின்றது. நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றம், உற்பத்தி போன்ற செலவினங்களையும் விட சந்திரிகா அரசுக்கு யுத்தமே இப்போது தலையாய விடயமாக போய்விட்டது.

மூன்றாம் ஈழப்போருக்குப் பின்னர் சிறீலங்கா அரசின் யுத்த பாதுகாப்புச் செலவினம் நாளொன்றுக்கு பதினான்கு கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. ஆனால் சிறீலங்காவின் வருமானமோ



முன்னைய ஆண்டுகளை விட வீழ்ச்சி கண்ட நிலையில் இருக்கிறது. உள்நாட்டு யுத்தம், காலநிலை வறட்சி போன்ற காரணங்களால் சிறீலங்கா அரசின் உள்நாட்டு உற்பத்தியானது 3.8 வீதத்தினால் குறைந்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

தொடரும் யுத்தத்தின் விளைவாக சிறீலங்காவின் பொருளாதாரம் மூன்று ஆண்டுகள் பின்தள்ளிப் போய்விட்டதாக அரசு கூறினாலும், பொருளாதார வளர்ச்சி எட்டு ஆண்டுகள் பின்தள்ளிப் போய்விட்டதென N.A.F. சர்வதேச செய்தி நிறுவனத்தின் கொழும்பு முகவர் கூறியுள்ளார்.

மேற்படி பொருளாதார நெருக்கடிகள் ஒருபுறம், யுத்த செலவின அதிகரிப்பு வீதம் இன்னொரு புறமாகத் திண்டாடிக் கொண்டிருக்கும் சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் தனது திறந்த பொருளாதாரக் கொள்கையில் மேன்மேலும் தளர்வுகளை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவை சொன்னவற்றிற்கு எல்லாம் தாளம் போட்டபடி அவற்றையே நம்பியிருக்கும் நிலையில் சிறீலங்கா இருக்கிறது. இனி பிழிவதற்கே இடமில்லை என்ற நிலையில் சக்கையாகிவிட்ட நாட்டின் வருமான வளங்களையும்விட, எவ்வாறு மேன்மேலும் தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களையும் சுரண்டி வேறு நாடுகளுக்கு விற்று, வருமானத்தை அதிகரிக்கலாம் என்பதைப் பற்றியும் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

இந்த வளச்சுரண்டல் முயற்சியில் ஒன்று அண்மையில் புல்மோட்டையில் நடைபெற்றது. அமெரிக்கக் கம்பனி ஒன்றிற்கு ஒப்பந்த அடிப்படையில் சிறீலங்கா அரசு இல்மனைற் கனிப் பொருட்களை விற்பனை செய்ய முயன்று கொண்டிருந்தது.

M.V. கோடியாவிற்றி என்ற பாரிய சரக்குக் கப்பல் முப்பதினாயிரம் தொன் இல்மனைற்றை ஏற்றிக்கொண்டு புல்மோட்டையில் இருந்து புறப்படுவதாக திட்டமிடப்பட்டது. 1997.09.09 அன்று 89 மில்லியன் ரூபா பெறுமதியான 27 350 தொன் நிறையுள்ள இல்மனைற் கப்பலில் நிரப்பப்பட்டபொழுது கடற் புலிகள் நடாத்திய தாக்குதலில் இம் முயற்சி முற்றுமுழுவதுமாக முறியடிக்கப்பட்டது.

புல்மோட்டையில் காணப்படும் இல்மனைற் கனிப்பொருள் கொண்ட மணற்திட்டுக்கள் தமிழீழப் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியுள் காணப்படும் இயற்கை வளமாகும். இப்பிரதேசத்திற்கே உரித்தான இக்கனிப்பொருட்களை சிங்கள அரசு திட்டமிட்ட முறையில் அபகரித்து, வெளிநாடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் விற்பனை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

செய்கிறது. பெற்ற வருமானத்தில் இருந்து அதற்குப் பதிலீடாக யுத்தத் தளபாடங்களைக் கொள்வனவு செய்கிறது. இக்கப்பல் ஆயுதங்களைக் கொண்டுவந்து சிறீலங்காவில் இறக்கிவிட்டுப் போகும் போதே இல்மனைற் கனியத்தை ஏற்றிக்கொண்டு போவதாக திட்டமிடப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான வளம் சுரண்டப்பட்டு, அதில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானம் தமிழ் மக்களை அழிக்கும் யுத்த தளபாடங்களாகவும், வெடி பொருட்களாகவும் மாறுவதை எவ்வாறு நாம் அனுமதிக்கமுடியும்?

தனியார்மயமாக்கற் கொள்கையை நிறுத்துவது என முன்னர் தேர்தற்பிரச்சாரத்தின் போது முழக்கமிட்ட சந்திரிகா அம்மையார், முன்பு ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் நடைமுறையில் இருந்த அதே தனியார் மயமாக்கற் கொள்கையை தொடர்ந்தும் அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார். அதனைவிடத் தீவிரமாகவே இவற்றை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டுகிறார் எனக்கூறலாம்.

நிறுவனங்களில் ஏற்படும் ஊழல் மோசடிகள், தவறான முகாமைத்துவம் என்பவை காரணமாக நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களையே தனியார் மயமாக்குகின்றோம் என்று கூறியபடி, இருக்கும் பொதுச் சொத்துக்களை தனியாருக்கு விற்கும் செயல்மூலம் அதிக இலாபம் தரும் நிறுவனங்களையும் மலிவான கேள்விக்கு விற்றது உலகின் தனியார் நிறுவனங்களும் அதிகளவு இலாபத்தைப் பெறும் நோக்குடன் சிறீலங்கா அரசின் இக்கையாலாகத் தனத்தை தத்தமக்கு சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றன.

தொலைத்தொடர்புச் சேவையைத் தனியார் மயமாக்கும் திட்டம், நாட்டின் பல்கலைக்கழகங்கள், பல்கலைக் கல்லூரிகளைத் தனியார்மயமாக்கும் திட்டம் என சிங்கள அரசின் இக்கொள்கைத் திட்டம் போய்க் கொண்டிருக்கிறது.

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள இறங்கு துறைமுகங்களில் ஒன்றான 'குயின் எலிசபெத்' இறங்குதுறையை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு சிறீலங்கா அரசு திட்டமிட்டிருப்பதை ஆட்சேபித்து தொழில்துறை மற்றும் பொது ஊழியர்களின் சங்கம் முழு அளவிலான வேலைநிறுத்தமொன்றுக்கு அழைப்பு விடுத்தது. இத்துறைமுக இறங்குதுறை விற்பனை செய்யப்படுமாயின் பல தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தினை நடாத்தவுள்ளனர்.

இதே போன்றே 'எயர்லங்கா' நிறுவனத்தையும் மலேசியாவைச் சேர்ந்த 'ஹைபொஸ்' என்ற பிரபல தனியார் நிறுவனத்துக்கு விற்பதென சிறீலங்கா அரசு முடிவு செய்துள்ளது.

சிறீலங்காவின் சுகாதார அமைச்சர் நிமால் டி. சில்வா பணத்துக்காக இரத்தத்தை விற்கும் இரத்த வங்கி ஒன்றை நடாத்த தனியார் ஒருவருக்கு அனுமதி அளித்துள்ளார். சிறீலங்காவின் மனித உரிமைகளைப் பேணும் (?) சட்டத்தின் கீழ், மனித இரத்தத்தை விற்கவோ, வாங்கவோ முயல்வது சட்ட விரோதமாகும் என ஒரு சட்டநடைமுறை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு 'தியவன' என்ற சிங்களப் பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது. யுத்தத்தில் காயமடைந்த சிறீலங்கா இராணுவச் சிப்பாய்களுக்கு ஏற்றுவதற்கென இரத்தம் தேவையாக இருக்கையில் சட்ட நடைமுறையை மீறிப் பணம் கொடுத்து வாங்கினால் என்ன? இதனையே தனியார் மூலம் அரசு பெற்றுக்கொள்கிறது. யுத்தத்துக்காக சிங்கள அரசு சட்டநடைமுறைகளையும் மீறுகிறது. இது இப்போதுதான் தொடங்கப்பட்ட புதிய விடயமல்ல.

எவற்றை எவற்றையெல்லாம் தனியாருக்கு விற்பனை செய்வதன் மூலம் தனது யுத்த தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அதிகளவு வருமானத்தை ஈட்டவும் முடியுமோ அவற்றை அவற்றையெல்லாம் தனியாருக்கு தாரை வார்த்து இலாபம் ஈட்டக்கூடிய வழி வகைகளைப் பற்றி சந்திரிகா அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. தலைக்கு மேலே ஏறிவிட்ட கடன், வாரி இறைக்க இறைக்க மேன்மேலும் ஊறிக்கொண்டிருக்கும் யுத்த செலவினம், இவற்றை ஈடுசெய்வது எவ்வாறு?

தயவு தாட்சணியம் அற்ற வழிகள் மூலம் இவற்றுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்களை அடக்கியது.

இத்தகைய அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்கும் நடவடிக்கை காரணமாகப் பல தொழிலாளர்கள் வேலை இழந்தவர்களாகி, பாரிய வாழ்க்கை நெருக்கடிகளையும் எதிர்நோக்கியதன் காரணமாக இவற்றை எதிர்த்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர், ஆனால், இவற்றையும் சிறீலங்கா அரசு தடை செய்தது. முன்னர் தொழிலாளர் உரிமை பற்றியும் தொழிற்சங்கங்களின் தேவை பற்றியும் அவற்றுக்குச் சாதமாகப் பேசிய சந்திரிகா அம்மையார் இத்தகைய தொழிலாளர் போராட்டங்களைத் துப்பாக்கி முனையில் அடக்கினார்.

நடாத்தப்பட்ட வைத்தியசாலைகளின் மருத்துவர், ஊழியர் போராட்டம், மாணவர் போராட்டம், தொழிலாளர்களின் போராட்டங்கள் என தென் இலங்கை மக்களின் நாடு தழுவிய போராட்டத்தினை தனது இராணுவ மேலாதிக்க நிலையினால் அடக்கினார்.

பாண் முதல் பருப்பு வரை மக்களின் அன்றாட தேவைப் பொருட்களின் விலையேற்றம் இன்னொருபுறம்.

முன்வந்த அரசுகளின் தவறைச் சுட்டிக்காட்டி வந்த சந்திரிகா இப்போது தவறு விடுவதில் அவற்றை விட பல படி மேலே நிற்பதுதான் கேலிக்குரிய விடயம். கடன் பழுவினால் சிறீலங்கா கீழே போய்க்கொண்டு இருக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளின் காலக் கெடுவில் மக்கள் ஏமாற்றம் அடைந்து கொண்டிருக்கின்றனர். தடம்புரண்டு போன பொருளாதாரத்தை சீர்படுத்துவது அரசுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகால ஆட்சியில் எவற்றை எவற்றையெல்லாம் அம்மையார் சாதித்தார் என்பதில் மக்கள் மிகுந்த அதிருப்தி கொண்டுள்ளனர். அம்மையார் சமாதான முகமூடித் திரையை அணிந்து கொண்டு, யுத்தத்தையும் பொருளாதாரச் சுமைகளின் அழுத்தத்தையும் மக்கள் மீது சுமத்தினார். யுத்த நடவடிக்கைகளுக்காக சட்ட ஒழுங்குகளை மீறினார் – மக்களது கிளர்ச்சிகளை வன்முறைகளை பிரயோகித்து நசுக்கினார். அம்மையாரின் தேர்தற்கால முகம் ஒன்று; ஆட்சிபீடம் ஏறியதும் தெரிகின்ற முகம் இன்னொன்று.

தனது தென்னிலங்கை வாழ் மக்களின் நலனிலே கூட நேர்மையற்ற முறையில் சிறீலங்கா அரசு நடந்து கொண்டிருக்கும்போது தமிழ் மக்களது பிரச்சினைகளை எப்படி தீர்க்கப் போகிறது என்பது தெரிந்த விடயம்தான். தீர்வுப்பொதி சுத்த ஏமாற்றுத்தனத்தையும் வெளி உலகுக்கான கண்துடைப்பாக, சந்திரிகாவின் ஒருதலைபட்சமான முடிவுகளையும்தான் கொண்டுவரப் போகிறது என்பதை தமிழ் மக்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உலகெங்கும் பரவும் மாவீரர் விளக்குகள்




இன்று உலகில் தமிழர்கள் இல்லாத நாடுகள் தேடுவது கடினமான காரியங்களில் ஒன்றெனலாம். உலகெல்லாம் சிதறிக்கிடக்கும் தமிழ் முகங்களைப் பார்ப்போர், இவர்கள் யாரென்றும், இவர்களுக்கும் இந்த நாடுகளுக்குமான தொடர்பு எப்படிப்பட்டதென்றும் வினவுவது இயல்பு, ஆனால் இதற்கான பதிலும் கேள்வியைப் போலவே மிகவும் இலகுவானது. இப் புலம்பெயர்ந்த தமிழரில் ஒரு பகுதியினரை 19-ம் நூற்றாண்டின் காலனித்துவம் தமிழகத்திலிருந்து இதர நாடுகளின் பெருந்தோட்டங்களை நோக்கி நகர்த்தியது. 1980-ற்குப் பின்னாயின் இலங்கையிலிருந்து தமிழர்களை போர் வெளிநாடுகளை நோக்கித் தள்ளியிருக்கின்றது. இவர்கள் அகதிகளாக்கப்பட்டும்; கலாச்சாரம் அழிந்தும்; வாழ்வு தொலைந்து போயும், மகத்தான ஏதோவொன்றை இழந்துபோன சோகத்தையும் மறைக்க முயன்றும் வாழ நேர்ந்துள்ளதை அனைவரும் அறிவர்,. எனினும் இப்போது தாய்நாடு தொலைத்த தமிழரிடையே அவர்கள் பிறந்த நாடுகள் குறித்த பேதங்கள் மறைந்து, புதிதாக ஓர் நம்பிக்கை ஒன்றுபட வைத்து வருகிறது. அந்த நம்பிக்கையையும், பிரகாசத்தையும் தலைவர் பிரபாகரனிலிருந்தும்; அவர் தம்பியரிலிருந்தும் உலகத் தமிழினம் பெற்றுக் கொள்ளத் தொடங்கியிருக்கிறது. அந்த ஒளியே இன்று கார்த்திகை மாதத்துத் தீபங்களாக, மாவீரர்தின விளக்கொளியாக உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கிறது.

உலகமெல்லாம் பரந்திருக்கும் மக்களை ஒன்று கூட்டுவதிலும், தமிழ்த் தேசியமென்ற ஒருமித்த நோக்கில் செயற்பட வைப்பதிலும் வெற்றிபெற வேண்டுமானால் செயற்பாடற்ற வாய்ப்பந்தல்களினால் அவை சாத்தியமாகாதென்பதை தமிழரின் கடந்தகாலம் மெய்ப்பித்துவிட்டது. சுயநலமற்று, தமிழினத்தின் விடிவிற்காகப் போராடுவதும், தியாகிப்பதும், தேசத்திற்காகத் தம்மை அர்ப்பணிப்பதுவுமே அந்தப் பணிக்குரிய தேவையென்பது இப்போது நிஜமாகிவிட்டது. எனினும் இப்பணி ஆசாபாசங்களுக்குட்பட்ட வாழ்விற்குள் சாத்தியமானதல்ல; மிகக் கடுமையான வழி. இதனால் இப்பாதை எவரதும் தெரிவிற்குட்படாமலே கிடந்தது. தமிழினத்தின் துணிந்து முன்வராத நிலையானது அவர்களின் தன்மானம், சுதந்திரம் ஆகிய இரண்டையுமே நெடுங்காலமாகக் கிடப்பில் போட்டும் வைத்திருந்தது. அசைவற்றுக் கிடந்த இப்பணிகளில் ஓர் திடீர்விசை கொடுத்ததே புலிகளின் புது வரவாகும். இவர்கள் தாமாகவே முன்வந்து இக்கடிய பணியை ஏற்றுக்கொண்டனர். தம் இனத்தின் விடிவிற்காக அவர்கள் இரத்தம் சிந்த மட்டுமல்ல; உயிர் தரவும் தயாராயிருந்தனர். வரலாற்றுக்குள்ளால் அவர்கள் வெளிப்பட்டவிதம் அசாதாரணமாயிருந்தது. எழுத்துக்களாலும் இலக்கியங்களாலும் சிறைப்பிடிக்க முடியாது உயர்ந்து நின்றது. சுதந்திரம் விலை மதிப்பற்றது. அதை யாரும்தர முடியாது. அது நாம் எண்ணற்ற தியாகங்களை விலையாகக் கொடுத்துப் பெற வேண்டியது என்ற உண்மையால் வடிவமைக்கப்பட்டவர்கள் மாவீரர்கள்.

சங்கர் மாவீரரானபோது அதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய பக்குவத்தை அன்றைய நிலையில் போராளிகளே பெற்றிருக்கவில்லை என்று கேணல் கிட்டு அவர்கள் ஓர் பேட்டியில் கூறியிருந்தார். ஆனால் இன்றோ சாவின் திகதியறிந்தே, சஞ்சலமில்லாது விடைபெற்றுக் கொண்டிருக்கும் கரும்புலிகளின் காலத்திற்குள் போராட்டம் வீறுகொண்டு நடக்கிறது. மாவீர் ஆவோரின் வருடாந்தக் கணக்கீடு உயர்ந்து கொண்டே செல்லும் காட்சியைப் பார்ப்போர் சில உண்மைகளை இலகுவாகவே விளங்கிக் கொள்ள முடியும். சிங்கள அரசு குறிப்பிடுவது போல அவர்களுக்கு வெற்றிகிடைத்திருந்தால்; வெற்றிக்காகத்தான் அவர்கள் கொடியேற்றியிருக்கிறார்கள் என்பது உண்மையானால் மாவீரர் பட்டியல் முன்னையைவிட அதிகம் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. உலகால் இருட்டடிப்புச் செய்திருந்தாலும் போர்க்கள நிலையில் புலிகளின் கையே ஓங்கியிருப்பதற்கு அதிகரிக்கும் மாவீரர் எண்ணிக்கையே சான்றாகும். மேலும் பேரினவாதிகள் கனவு காணும் துட்டகைமுனு தன்னுடைய எதிரியான எல்லாளனின் சமாதிக்கு உரிய மரியாதை செலுத்தினான் என்று தமது காவிய வரலாற்று நூலான மகாவம்சத்தில் எழுதி, துட்டகைமுனுவின் பெருமையைப் புகழ்ந்து, அந்தப் பெருமையிலேயே பல்லாயிரமாண்டுகளைக் கழித்துவிட்ட புத்த மகாசங்கத்தினர்கூட, மாவீரர் துயுலுமிடங்களை சந்திரிகாவின் படையினர் அழித்தபோது மௌனமாகவே இருந்தார்கள் என்றால் மாவீரர் சிங்களப் பேரினவாதத்திற்கு எத்தகைய சவாலாக விளங்கினார்கள் என்பதை நாம் சொல்லாமலே புரிந்துகொள்ள முடியும்.

உலகத்தை ஆட்சி செய்யும் பெரும்பான்மை இனங்கள் தம் உயர்வையும், மேட்டிமைத்தனத்தையும் உரைத்துப் பார்ப்பதற்கு சிறுபான்மை மக்கள் குழுவினர் மீது அநாகரிகமான தாக்குதல்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



களையும், கொடிய சட்டங்களையும் கட்டவிழ்த்து விடுவதை எப்போதுமே வழமையாக்கி வருகின்றனர். இத்தகைய இழிசெயல் இப்போது அமுலில் இருக்கும் ஜனநாயக ஆட்சி முறைமையின் பொதுமை நோய்க்குறியீடாகும். இதே வேளை குடும்ப ஆட்சி முறைமைக்குள் ஜனநாயகத்தை வைத்திருக்கும் சிங்கள அரசு ஜனநாயகப் பாதையில் கூர்ப்படையாத இளமைநிலை கொண்டது. அது கூட தன் மேன்மையைக் கண்டு மகிழவே தமிழரை அடிமையாக வைத்திருக்க ஆசைப்படுகின்றதென்பது அதன் தீர்வுப் பொதியால் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. வரலாறு எப்பொழுதும் ஒரே பக்கம் இருப்பதில்லை என்பதும் புத்தரின் போதனைகளில் ஒன்றுதான். மாவீரர்களின் காலத்திற்கு முற்பட்ட ஈழத்தமிழினமும், மாவீரருடைய காலத்து ஈழத் தமிழினமும் ஒரே எண்ணங்களைக் கொண்டதல்ல; காலம் அடிதலையாக மாறியிருக்கிறது. பிரபாகரனின் காலத்தோடு சிங்கள அரசின் மேலாதிக்க எண்ணம் காலாவதியாகப் போகத் தொடங்கிவிட்டது. கரும்புலிகளோடு கை கோர்த்து அவர்கள் நடக்கும் தியாகப் பயணம் மிகமிகப் புதியது. "மாவீரர் மரணிப்பதில்லை; மாவீரர் தேசமும் அப்படியே" என்பதை சிங்களப் பேரினவாதம் கண்டு வெட்கமடையும்போது, மாவீரர் கனவு நனவாகியிருக்கும் அதே போல சந்திரிகா போட ஆசைப்படும் பாதையும் தாண்டிக்குளத்திற்கானதல்ல தமிழீழத்திற்கானது என்பதை விரைவில் வரலாறு உணர்த்தும் .

**- கி.செ.துரை**

## மாவீரர் பணிமனை வெளியீடு

"எமக்கு ஒரு நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் வீழ்கின்றார்கள். எமது நாடு எமக்கே சொந்தம் என்ற உரிமைக்குரலை அவர்கள் உலகெங்கும் முழங்கச் செய்கின்றார்கள். எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசொலியும் வீர சுதந்திர பிரகடனமாகவே சம்பவிக்கின்றது."

– தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

### 27.11.82 தொடக்கம் 31.12.97 வரை வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை

**ஆண்டுவாரியாக தமிழீழ விடுதலைப் போராளிகளின் தொகை**

| | | | |
|---|---|---|---|
| *1982* | — | *1* | போராளி |
| *1983* | — | *5* | போராளிகள் |
| *1984* | — | *36* | போராளிகள் |
| *1985* | — | *123* | போராளிகள் |
| *1986* | — | *256* | போராளிகள் |
| *1987* | — | *451* | போராளிகள் |
| *1988* | — | *364* | போராளிகள் |
| *1989* | — | *372* | போராளிகள் |
| *1990* | — | *960* | போராளிகள் |
| *1991* | — | *1613* | போராளிகள் |
| *1993* | — | *788* | போராளிகள் |
| *1993* | — | *925* | போராளிகள் |
| *1994* | — | *374* | போராளிகள் |
| *1995* | — | *1502* | போராளிகள் |
| *1996* | — | *1366* | போராளிகள் |
| *1997* | — | *2097* | போராளிகள் |
| ஏனையோர் | — | *264* | போராளிகள் |
| தனிக்குழு | — | *10* | போராளிகள் |
| **மாவீரர் (ஆண்)** | — | *9916* | போராளிகள் |
| **மாவீரர் (பெண்)** | — | *1594* | போராளிகள் |
| **31.12.97 வரை** | - | **11510** | **போராளிகள்** |

### சில முகாம் தகர்ப்புக்கள், இராணுவ நடவடிக்கைகளில் வீரமரணமடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| ஆகாயக் கடல்வழிச்சமர் | — | *602* | போராளிகள் |
| மணலாறு சமர் | — | *233* | போராளிகள் |
| ஒப்பரேசன் தவளை | — | *469* | போராளிகள் |
| கொக்குத்தொடுவாய் | — | *175* | போராளிகள் |
| இடிமுழக்கம் | — | *181* | போராளிகள் |
| சூரியக்கதிர் | — | *438* | போராளிகள் |
| ஓயாத அலைகள் | — | *315* | போராளிகள் |
| சத்ஜெய 2 | — | *100* | போராளிகள் |
| சத்ஜெய 3 | — | *133* | போராளிகள் |
| பரந்தன்/ஆனையிறவு சமர் | — | *193* | போராளிகள் |
| ஜெயசிக்குறுவும் எதிர்த்தாக்குதலும் | — | *1178* | போராளிகள் |

### 31.12.97 வரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவு அடைந்த கரும்புலிகளின் எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| தரை கரும்புலி | — ஆண் 38 + | பெண் 01 | = 39 போராளிகள் |
| கடல் கரும்புலி | — ஆண் 54 + | பெண் 22 | = 76 போராளிகள் |
| கரும்புலிகள் மொத்தம் | — ஆண் 92 + | பெண் 23 | = 115 போராளிகள் |



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் பாரம்பரியமும் பண்பாட்டு மாற்றங்களும்

**விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் வெளிச்சமும் இணைந்து நடத்திய கலை, இலக்கிய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை**

**கோகிலா மகேந்திரன்**

மனித குலம் அதன் தோற்றத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது உயர்ந்து வருகிறது என்பதற்கு அறிகுறியாக இருக்கும் சொல் பண்பாடு ஆகும். நிலம் எப்படி அதன் தோற்றத்தில் கற்பாறையாக இருந்து காலம் செல்லச் செல்லப் பயிர்ச் செய்கைக்கு உகந்த திருந்திய நிலமாக மாறுகிறதோ அதேபோலவே மனிதனும் குரங்கில் இருந்து கூர்ப்படைந்த போது அநாகரிகமானவனாக இருந்து படிப்படியாக பண்பட்டான்.

இடத்துக்கிடம் இனத்துக்கு இனம் பண்பாடு மாற்றமடைந்தாலும் அது உயர் குணங்கள் பலவற்றால் நிரப்பப் பெறுவது என்பதில் மாற்றமில்லை. அன்புடைமை, தியனகடிதல், தியாகமுடைமை, குறிப்பறிந்து நடத்தல் போன்ற உயர் குணங்கள் தமிழர் பண்பாடாகப் போற்றப்பட்டு வந்தமை பற்றி வித்துவான் பொன் முத்துக்குமரன் 'தமிழ் மரபில்' சிறப்பாக எடுத்துக்கூறுகிறார். தன்னைச் சேர்ந்தவரிடத்தில் அன்பு செய்தல், பிற உயிர்களிடத்தில் அன்பு செய்தல், அன்பு வளர்வதற்கான செயல்களைச் செய்தல், காரணமுள்ள வழியிலும் தீமை செய்யாமை, தீமை செய்தார்க்கும் நன்மை செய்தல், மனம் வாக்குக் காயங்களால் தீமை ஏற்படாதவாறு தன்னைப் பாதுகாத்து நடத்தல், நன்மை உண்டாகும் வண்ணம் தன் உடல் பொருள் உயிரை ஈயச் சித்தமாய் இருத்தல், பிறர் விரும்பியதைக் குறிப்பறிந்து நடத்தல், அதனால் தனக்கேற்படும் துன்பத்தைப் பொருட்படுத்தாமை போன்றவை எமது பண்பாடாக இருந்தமைக்குத் தமிழ் இலக்கியச் சான்றுகள் உள்ளன.

'கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்' என்பார் எமது தேசியத் தலைவர் அவர்கள்.

விலங்கு ஒன்று ஒரு காட்டில் இருந்து புதிய காட்டுக்குள் செல்லுமாயின் பழைய தொடர்பை மறந்து விடும். ஆனால் மனிதனோ ஒரு ஊரில் இருந்து வேறொரு ஊருக்குப் போனாலும் பழைய நினைவுடனேயே புதிய வாழ்வைத் தொடங்குகிறான். பழைய நினைவு ஒருபோதும் விட்டுப் போவதில்லை. போகவும் கூடாது. அதே போலவே பண்பாடும் இலக்கிய மரபும் காலத்துக்கு ஏற்ப புதிய புதிய வடிவங்களைப் பெறலாம். ஆனால் பழைய பண்பாட்டின் மணம், பழைய இலக்கியத் தொடர்பு விட்டுப் போகக்கூடாது. இதுவே ஒரு இனத்தின் பண்பாட்டு மரபு என்றும் இலக்கிய மரபு என்றும் பேசப்படுகிறது.

எமது இலக்கிய மரபுகளில் சில இன்னும் மிக வலிமையாகவும் போற்றப்படத்தக்கவையாகவும் இருப்பது பற்றி நாங்கள் முதலில் சிந்திக்கலாம். முதல் உதாரணம் இது.

காதல் பாட்டுக்களை அகத்திணைப் பாட்டுக்களாய்ப் போற்றுதல் வேண்டுமெனில் காதலரின் பெயர் முதலியன சுட்டாமலும் பாடவேண்டும் என்பது எமது மரபு.

'மக்கள் நுதலிய அதன் ஐந்திணையும் சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்' இக் கருத்தை T.S.Eliot எப்படிச் சொல்கிறார் பாருங்கள்,

"A good love poem though it may be addressed to one person is always meant overheard by other people. Surely the proper language of love that is of communication to the beloved to no one else is prose"

ஆகவே இப்பண்பாட்டினை நாங்கள் தொடர்ந்து பேணிவரலாம் இல்லையா?

மற்றொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு சம்பவத்தை அல்லது ஒரு நிகழ்வை விளக்குவதற்கு 'இயைபாம் பின்னணியை அல்லது முரணாம் பின்னணியைப்'' பாவிக்கும் பாரம்பரியம் எம்மிடம் உண்டு.

காதலன் வருகையை எதிர்நோக்கித் தனித்திருக்கும் பெண்ணைக் குறித்துப் பேசும்போது, மரக்கிளையில் தனிப் பறவையைக் காட்டுவது இயைபாம் பின்னணி. மரக் கிளையில் இரு பறவைகளைக் காட்டுவது முரணாம் பின்னணி.

காதலன் காதலியைப் பிரிந்து போகும்வழி பாலைவழி. ஆயினும் அவன் உள்ளத்தில் நிறைய அன்பு இருக்கின்றது. யானைகள் தின்பதற்குத் தழையும் குடிப்பதற்கு நீரும் அற்ற காடு அது. ஆயினும் அவையோ ஒன்றை விட்டுப் பிரியாமல் அன்பாக வாழுகின்றன. யா மரத்தில் தழை இல்லை. பட்டைக்கு அடியில் உள்ள நாரில் ஈரம் இருக்கிறது. ஆண் யானை பட்டையை உரித்துப் பெண் யானைக்குக் கொடுக்கிறது.

> **'கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்' என்பார் எமது தேசியத் தலைவர் அவர்கள்**

*"பிடி பசி களை இய பெருங்கை வேழம்*
*மென் சினையா அம் பொளிக்கும்*
*அன்பின் தோழி அவர் சென்ற ஆறே."*

குறுந்தொகையில் வரும் இந்த முரண் அணி மரபை நாங்கள் இன்னும் பேணுகிறோம்; பேணலாம்.

தாம் உணர்த்த விரும்பும் பொருளை வெளிப்படையாக உணர்த்தாமல் மறைத்துப் புலப்படுத்துவது கலைத் திறமை. அவ்வாறு மறைத்து உணர்த்தப்படும் குறிப்புப் பொருளை வியந்சனம் என்பர் வட நூலார். குறிப்புப் பொருள் எந்தப் பாட்டில் மற்றப் பொருளிலும் சிறந்து விளங்குகிறதோ அதுவே உத்தமமான பாடல் என்பது எங்கள் பாரம்பரியம். இதுவே நவீன இலக்கியத்தில்– கவிதையில் மட்டுமல்ல, சிறுகதையிலும், நாவலிலும், நாடகத்திலும் "Symbolism" என்று வழங்கும் உத்தி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உதாரணமாக கவிஞர். சோ. பவின் 'பௌர்ணமி நாள்' கவிதையில் இன்னும் இது சிறப்பாகத் தான் வந்திருக்கிறது. இந்தப் பாரம்பரியத்தை நாங்கள் எங்களுடையது என்று கூறித் தொடர்ந்து பாவிக்கலாம். இப்சனின் 'பொம்மை வீடு' நாடகத்தில் இது சிறப்பாக வந்தது என்பதற்காக இதை மேற்கத்தியப் பாரம்பரியம் என்று நாம் மயங்கத் தேவையில்லை.

தமிழ் இலக்கியத்தில் பொருள் பற்றிய ஒரு பாரம்பரியமும் இருப்பது எமக்குத் தெரியும். இம் மரபு ஐவகை நிலங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. குறிஞ்சி நிலத்தின் அகப்பொருளாகக் காதலர் கூடல் பற்றிப் பாடுவதும் புறப்பொருளாகப் பகைவர் பசுக்கவர்தல் பற்றிப் பாடுவதும் இன்று பொருத்தமானவையாக இல்லை. இன்று பகைவர்கள் 'டாங்கி' கவர்தல் பற்றிப் பாடுவது தான் வாழ்வுடன் பொருந்துவதாக உள்ளது. இலக்கியம் என்பது வாழ்வின் கண்ணாடி. ஆகவே பசுக்கவர்தல் பற்றிப் பாடாது ஒரு புலவன் 'பவள் கவர்தல்' பற்றிப் பாடுவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாரம்பரிய மாற்றமாக உள்ளது.

சிறுகதையும் நாவலும் எமக்கு மேற்கத்திய நாடுகளில் இருந்து வந்தவை. ஆகவே அவற்றின் வடிவம் பற்றிய மரபு எம்மிடம் இல்லை. ஆனால் கவிதை, நாடகம் ஆகியவை தொடர்பாக எமக்கு ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. அசை, சீர், அடி, தளை, தொடைபாவின் ஓசை, நேர்பு, நிரைபு என்று கவிதைக்கு மிக இறுக்கமான வடிவம் எங்கள் மரபு. இன்ன இன்ன பொருள் பற்றிப் பாடும் போது இன்ன இன்ன யாப்பு அமைதல் வேண்டும் என்ற மரபும் எங்களிடம் இருந்தது. உதாரணமாக ஒருவரை வாழ்த்திப் பாடும் போது அது ஆசிரியப்பாவாக அல்லது வெண்பாவாக அமைதல் வேண்டும். கலியாகவும் வஞ்சியாகவும் அமைதல் கூடாது என்பது நாங்கள் வகுத்திருந்த விதி. ஆனால் இன்று இவையாவும் மாறிவிட்டன. 'மாறத்தான் வேண்டுமா?' என்பது கேள்வி. "நான் சொல்ல வந்த பொருளைத் தெளிவாகச் சொல்வதற்கு யாப்பும் மரபும் இடைஞ்சலாக உள்ளன." என்று ஒரு கவிஞன் சொல்லுவானாயின் அவன் ஏதோ ஒரு வகையில், 'அவை எனக்கு இடைஞ்சலாக இல்லை' என்று சொல்லுகிற கவிஞனை விட ஆற்றல் குறைந்தவன் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே இவ்விடயத்தில் எமது பாரம்பரியத்தைப் பேண முயல்வதே சிறப்பு.

நாடகத்தைப் பொறுத்தவரை நிலை வேறு மாதிரி உள்ளது. சிலப்பதிகார காலத்தில் எம்மிடம் சாந்திக் கூத்தும், காக்கைக் கூத்தும், தமிழ்க்கூத்தும், பதினோராடவும் இருந்தனவாயினும் இவற்றின் எழுத்துருக்கள் பேணப்படாமையால் வடிவங்கள் தெளிவாகத் தெரியவில்லை. இப்போது எம்மிடம் உள்ள எழுத்துக்களில் பள்ளும் குறவஞ்சியுமே பழைய வடிவங்கள். நாடகத்தின் வளர்ச்சிப் பாதையில் நாங்கள் இவற்றைத் தாண்டி நீண்ட தூரம் வந்துவிட்டோம். இன்றைய எமது நவீன நாடகங்களின் கருத்தாழமும் உத்தி முறைகளும், காட்சியமைப்பும், ஆடலும், பாடலும் சிறப்பானவை. ஆகவே இந்த இடத்தில் எமது பழைய நாடக வடிவங்களை அவை இருக்குமாப்போல் காட்சிப் பொருளாகப் பேணிக்கொண்டு, வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து செல்வதே சிறப்பானது. இந்த இடத்தில் பாரம்பரியம் எமது கை கால்களைக் கட்டிப் போடக்கூடாது.

> **"நான் சொல்ல வந்த பொருளைத் தெளிவாகச் சொல்வதற்கு யாப்பும் மரபும் இடைஞ்சலாக உள்ளன." என்று ஒரு கவிஞன் சொல்லுவானாயின் அவன் ஏதோ ஒரு வகையில், 'அவை எனக்கு இடைஞ்சலாக இல்லை" என்று சொல்லுகிற கவிஞனை விட ஆற்றல் குறைந்தவன் என்பது மறுக்க முடியாத உண்மை**

அடுத்து கலை, இலக்கியங்களில் வரும் உணர்ச்சிகளுக்கு வருவோம்.

*'நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'*

என்று தொல்காப்பியத்தில் முதன்மைபெறுவன எட்டு உணர்வுகளே. பிற்காலத்தில் நடுவுநிலை அல்லது சாந்தமும் சேர்ந்து உணர்ச்சிகள் ஒன்பதாயின. இந்த ஒன்பது உணர்ச்சிகளுமே எமது இலக்கிய மரபை வழிநடத்திச்சென்றன. ஆனால் உளவியல் விஞ்ஞானம், அடிப்படை உணர்வுகள் நாலு என்று பேசும்.

எப்படியும் காதல், வீரம், தியாகம் என்பனவே எப்போதும் மனித வாழ்வின் அடிப்படை வாழ்க்கைப் பகுதிகளாக உள்ளன. காதலுக்குரிய சூழ்நிலையும் வீரத்திற்குரிய காரணமும் மாறலாம். ஆனால் அந்த உணர்வுகளின் முக்கியத்துவமும் சிறப்பும் மாறுவது இல்லை; மாறவில்லை; மாறவேண்டியதுமில்லை.

"Of all the emotions trealed of in literature the emotion love is that which recieves most attention & as a rule most impressiom the reader" என்று G. Branoles கூறுவார்.

பக்தி இலக்கியம் சிறப்புற்றிருந்த காலத்தில் ஆண் பெண் காதல் பாடப்படாமல் கடவுள் அடியார் காதல் பாடப்பட்டது. இன்று மண்ணுக்கும் போராளிக்கும் இடையில் உள்ள காதல் எழுதப்படுகிறது. உணர்வு ஒன்றுதான்.

*"தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"*

என்று அப்பர் பாடியதற்கும்,

*"ஓய்வும் ஒழிதலும் இல்லாமல் அவன்*
*உறவை நினைத்திருக்கும் உள்ளம்"*

என்று பாரதி பாடியதற்கும்,

*"ஊமை நிலவும் உப்பளக் காற்றும்*
*உன்னை அறியும்"*

என்று புதுவை பாடியதற்கும் உணர்வு வேறுபாடு இல்லை!

ஆகவே தாகூர் சொல்வதுபோல இலக்கியம் விதிகளுக்கு அமைதல் வேண்டும்; அவற்றைக் கடந்தும் உயர்தல் வேண்டும். விதிகள் சிறகுகள். அது தானாகப் பறக்காவிட்டால் இழுத்து விழுத்தக்கூடாது. தமிழனுக்கு மன வைராக்கியம் தொடர்பாக ஒரு மரபும் பண்பாடும் உண்டு. "ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என மறுத்த அப்பரிடம் காணப்பட்டது ஒரு சமய வைராக்கியம்.

*'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்*
*எண்ணியர் திண்ணியராகப் பெறின்'*

என்று வள்ளுவர் இது பற்றிப் பேசுவார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மலரவனின் 'போர் உலா'வில் இந்த வைராக்கியம் சமகால நிகழ்வுகளோடு இயைந்து எமது மண்ணை மீட்கும் வைராக்கியமாக, இழந்த எமது மானத்தைக் காக்கத் தேவையான வைராக்கியமாகச் சிறப்புற வெளிப்படுவதைக் காண்கிறோம். இது போன்ற பண்பாடுகளை நாம் என்ன விலை கொடுத்தும் பேணத்தான் வேண்டும். காப்பாற்றத்தான் வேண்டும்.

அதே சமயத்தில் எமது பண்பாடுகள், பழக்க வழக்கங்களில் சில இன்றைய இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியோடு பார்க்குமிடத்து காலத்துக்குப் பொருந்தாத மூடநம்பிக்கைகளாக இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. நல்ல நாள் கெட்ட நாள் பார்த்தல், சகுனம் பார்த்தல், கனவு காண்பதில் உள்ள செயல்களுக்குப் பலன் பார்த்து அதன்படி செயற்படுதல், தொழில்களை நல்ல நேரத்தில் தொடங்குதல், வடதிசை புண்ணியதிசை என்று கொள்ளுதல் போன்றவை எமது பண்பாடுகளாக இருப்பினும் ,அறிவியல் வளர்ச்சியோடு இவை அழிந்து போனால் அது பற்றி நாம் பெரிதாக கவலை கொள்ள ஏதுமில்லை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தப் பொருத்தமான இடங்களில் இதுவுமொன்று. உதாரணமாகக் கனவு என்பது இன்றைய உளவியல் விஞ்ஞான அறிவின்படி பார்த்தால் நனவிலி மனதின் விருப்பங்களும் பயங்களும் ஆத்திரங்களும் தேவைகளும் மட்டுமே என்று தெரிகிறது. ஆகவே அவற்றிற்குப் பலன் சொல்லுவதும் பயப்படுவதும் தேவையற்ற விடயங்கள். இத்தகு விடயங்கள் தொடர்ந்து நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதில் இலக்கியங்கள் முண்டுகொடுக்க வேண்டியதில்லை. கட்டுரையாசிரியரின் 'துயிலும் ஒரு நாள் கலையும்' நாவலில் நாயகி 'பூரணி' ஒரு கனவு கண்டு வாய் பிதற்றுகிறாள். ஒரு வகையில் அது அவளின் நனவிலி மனதின் ஏக்கமாகவே அமைவதை அவர் காட்ட முனைந்துள்ளார். இது ஒரு மரபு மீறல் என்று யாரும் கருதுவதில்லை.

"கலைஞனுக்கு மரபு குற்றேவல் புரியும். அவனால் மரபுகள் மாறும். சமுதாயத்தில் சட்டைகள் படிப்படியாக மாறுவதுபோல அவை மாறும். உலகம் அதை ஏற்கும்'' என்று சொல்லப்படுவது இச் சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது.

உண்மையில் வாழ்விலும் அறிவுத் துறையிலும் நேரும் மாறுதல்களை ஆற்றல் மிக்க கலைஞர்கள் தம் படைப்பில் அமைத்துக் காட்டுகிறார்கள். "ஒரு விஞ்ஞானச் சிந்தனை என்பது சரியானவர்களால் சரியான முறையில் சரியான நேரத்தில் கையாளப்படவேண்டும்'' என்ற அறிவியல் கருத்தினைப் பேராசிரியர் நந்தி அவர்கள் தமது 'குரங்குகள்' நாடகத்தில் நல்ல முறையில் கையாண்டதை 1975–லேயே நாங்கள் கண்டோம்.

எமது பாரம்பரியங்கள் மரபுகள் சில கட்டாயம் மீறப்பட வேண்டியனவாயும் திருத்தப்பட வேண்டயனவாயும், உள்ளன. அது எமது பண்பாடு என்று சொல்வது எமக்கு அவமானகரமாக உள்ளது. உதாரணமாகக் "கணவன் மாண்டால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டும். இன்றேல் கைம்மைநோன்பு மேற்கொண்டு வாழவேண்டும்'' என்று கூறப்பட்ட மரபு ஒன்று எம்மிடம் இருந்தது உண்மை தான். ஆனால் இது

> **போரென்று கேட்டால் அதனை விரும்பி ஆரவாரிக்கும் வீரம் தமிழர் பண்பாடு. தமிழ்ப் பெண்களிடமும் வீரம் செறிந்த பண்பாடு இருந்தது என்பதற்கு புற நானூற்றுப் பெண் சான்று**

கட்டாயம் களையப்படவேண்டிய அநாகரிகமான மரபு.

சிலப்பதிகார காலத்தில் செல்வர்கள் ஒழுக்கம் பற்றி அதிகம் கவலைப்படவில்லை என்பது மெய்தான். கோவலன் "உருவும் திருவும் உயர்பேர் ஒழுக்கமும் பெருமகன் திருமொழி பிறழா நோன்பும் உடையீர்'' என்று கவுந்தி அடிகளால் பாராட்டப்பட்டவன். இவனே தனது ஒழுக்கத்தில் தவறினான். உண்மைதான். "ஒரு பரத்தையும் தூர்த்தனும் கோவலன் கண்ணகியைக் கண்டு எள்ளி நகையாடினர். அவர்களை நரிகளாக்கும்படி கவுந்தி அடிகள் சபித்தார்'' எனும்போது, ஒழுக்கம் கெட்ட ஆண் பெண்கள் தமிழ்நாட்டில் திரிந்தனர் என்பது ஏற்கப்படவேண்டிய ஒன்றாகவே தோன்றுகிறது. அப்போதிருந்த கணிகையரின் தொழில் நடனமும், கூத்தும், சங்கீதமும் விபச்சாரமுமே. இவர்களை அரசரும் செல்வரும் ஆதரித்தே வந்தனர். சரிதான். 'அதற்காகச் செல்வர்கள் ஒழுக்கம் தவறுவதும், ஒழுக்கம் கெட்டு வீதியில் திரிவதும் கணிகையர் விபசாரம் செய்வதும் எமது பண்பாடு என்று கூறி அவற்றைத் தொடரவேண்டுமா? இல்லை.

அரசனுக்கும் புலவனுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவது எங்கள் பண்பாடு. மோசிகீரனார் முரசு கட்டிலில் உறங்கிய போது கவரி வீசினான் மன்னன். கோப்பெருஞ்சோழனுடன் ஒன்றாக உயிர் விட்டார் பிசிராந்தையார். இந்த உறவு போற்றப்பட வேண்டிய சிறந்த பண்பாடு.

போரென்று கேட்டால் அதனை விரும்பி ஆரவாரிக்கும் வீரம் தமிழர் பண்பாடு. தமிழ்ப் பெண்களிடமும் வீரம் செறிந்த பண்பாடு இருந்தது என்பதற்கு புற நானூற்றுப் பெண் சான்று.

உயிரைவிட மானம் பெரியது என்பதும் எமது பண்பாடு. போர்க்களத்தில் வீழ்ந்தோர் வீரர் அதனால் நோய் காரணமாக ஒருவர் இறப்பினும் வாளால் வெட்டி அடக்கஞ் செய்வர். அரசருக்கு வீர உணர்வு ஊட்டிப் போர் செய்யத் தூண்டுவது புலவர் பண்பாடு. இலக்கியங்கள் இத்தகைய பண்பாடுகளைப் பேண உதவ வேண்டும்.

போரில் வீழ்ந்த வீரரைக் கல்லில் அமைத்து வழிபடுவதும், நடுகற்களுக்கு மலரும் மதுவும் சோறும் படைப்பதும் போர் தொடங்கு முன் போர் விருந்து அளிப்பதும் அவ்விருந்தில் அரசன் வீரருடன் ஒருங்கிருந்து உண்பதும், உயரமான இடங்களில் 'பார்வல்' இருக்கை அமைப்பதும், குழந்தைகளுக்குச் சங்கு, சக்கரம் தண்டாயுதம் வாள் வில் உருவம் பொறித்த ஐம்படைத்தாலி அணிவதும் எமது பண்பாடுகள். இவற்றை நாம் பேணுவது நன்று.

'செயற் தக்க அல்ல செயக் கெடும்
செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என்பார் வள்ளுவர். செய்யத் தகாதவற்றை செய்தும் கேடு அடையலாம். செய்யத்தக்கவற்றைச் செய்யாமல் இருந்தும் கேடு அடையலாம். பண்பாடு, பாரம்பரியம் பொறுத்தும் இதுவே உண்மையானது.

ஆகவே செய்ய வேண்டியவற்றை நிறுத்தி தொடர்ந்து செய்து வருவதும், நிறுத்த வேண்டியவற்றை நிறுத்தி விடுவதும், எது செய்யப்பட வேண்டியது, எது நிறுத்தப்பட வேண்டியது என்று பிரித்தறியும் ஆற்றல் இருப்பதுவுமே இன்று எம்மிடம் வேண்டப்படுபவை.

இலக்கியம் இதற்கு உரிய முறையில் உதவவேண்டும். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஈழத்தமிழர் ஆதரவ

அகில இந்திய சமதாக் கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் டெல்லியில் ஈழத் தமிழர் ஆதரவு – சர்வதேச மாநாட்டை நடத்தத் திட்டமிட்டு கடந்த 13, 14.12.97 தேதிகளில் மாநாடு நடக்கும் என்று அறிவித்திருந்தார்.

டெல்லியில் உள்ள இந்திய வணிக–தொழில் மைய அரங்கில் மாநாடு நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் மாநாடு நடப்பதற்கு இரண்டு நாள் முன்னதாக (12.12.97) மாநாட்டிற்கு இந்திய அரசு தடை விதித்தது. மத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா சமதாக் கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டசுக்கு அனுப்பிய கடிதத்தில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து விடுதலைப் புலிகள் தந்த பணம் மாநாட்டிற்கு வந்துள்ளது




## மத்திய அரசின் தடையை மீறி டெல்லியில் சிறப்பாக நடந்தது!

என்று உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கிறது. அமெரிக்க அரசு விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக அறிவித்துள்ளது. எனவே அந்நாட்டிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள புலிகள் இந்தியாவிற்குள் ஊடுருவத் திட்டமிட்டு நெடுமாறன் மூலமாக இம்மாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். எனவே தாங்கள் (ஜார்ஜ்) மாநாட்டுப் பணிகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும் எனக் கூறியிருந்தார். இதற்கு அகில இந்திய சமதாக் கட்சி அமைப்புச் செயலாளர் திருமதி ஜெயா எழுதிய பதிலில் மாநாட்டை சமதாக் கட்சி நடத்துகிறது என்று கூறி கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இதையொட்டி டெல்லி போலீசார் மாநாட்டிற்கு அனுமதி தர இயலாது எனக் கூறிவிட்டனர். மாநாடு நடத்தக் கூடாது எனவும் அறிவித்தனர்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் தனது வீட்டிற்குப் பின்புறம் உள்ள புல்வெளித் திடலில் திட்டமிட்டபடி மாநாடு நடக்கும் என அறிவித்தார். அவரது அறிவிப்பையொட்டி அவரது வீட்டுமுன் போலீசார் குவிக்கப்பட்டனர்.

ஆனால் துணிச்சலுடன் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மாநாட்டை 14–ம் தேதியில் நடத்தினார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், உலக நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர். கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் மக்கள் அலையலையாக வந்து கலந்து கொண்டனர்.

கிருஷ்ணமேனன் மார்க் ஜார்ஜ் இல்ல புல்வெளி மைதானத்தில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டிற்கு ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமை தாங்கினார். மாநாட்டை இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் தமிழ் வாழ்க எனக் கூறி தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, டாக்டர் சதானந்தன் (இலங்கை), முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ.பி. வெங்கடேசுவரன், மால்கம் கிரேசி (அவுஸ்திரேலியா), ஜில் பிக்குவா (பிரான்ஸ்) இந்திய அமைதிப்படைத் தளபதி ஜெனரல் அசோக் கே. மேத்தா, இரா. ஜனார்த்தனம் (தமிழ்நாடு), நந்திவர்மன் (புதுவை) ஆகியோர் பேசினர்.

தீர்மானங்களை முன்மொழிந்து டெல்லி, ஆந்திரா, மராட்டியம், பீகார், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிகள் பேசினர்.

வெளிநாட்டுப் பிரதிநிகளின் ஆங்கிலப் பேச்சை தியாகு (தமிழ் தமிழர் இயக்கம்) தமிழில் மொழிபெயர்த்தார்.

மாநாட்டுக்கு வந்த வாழ்த்துச் செய்திகளை திருமதி ஜெயா வாசித்தார்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் பழ. நெடுமாறன் நன்றி கூறினார்.

மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டினர், சிறப்பு அழைப்பாளர்களுக்கு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. தியாகி மணி, மெல்கியோர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சர்வதேச மாநாடு

ஜெயின் கமிசன் அறிக்கை தமிழர்களைப் பயங்கவாதிகளாக, தேச விரோதிகளாகக் குற்றம் சாட்டியது. இதற்கு எந்த சக்தி பின்னணியில் இருந்ததோ அதே சக்திதான் மாநாட்டு தடைக்கும் பின்னணியாக இருந்தது.

இரயில்வே போராட்டத்தின் போது இந்திரஜித் குப்தா போராட்டக் குழுவில் ஒரு உறுப்பினர். நான் அந்தக் குழுவின் தலைவன். இந்திய கமியூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் முப்பது வருட நாடாளுமன்ற உறுப்பினராகப் போராட்டக் குழுவில் என்னோடு பங்கேற்றவர். என்னை நன்கு அறிந்தவர். இந்த மாநாட்டிற்குப் புலிகள் பணம் வந்துள்ளது எனக் கூறியது எனக்கு மனவருத்தத்தை அளிக்கிறது. குப்தாவின் இந்தக் குற்றச்சாட்டு மூலம் என்னைக் கெடுப்பதற்கு பதில், ஈழத் தமிழர்களின்




## இந்தியாவின் பல்வேறு மாநில - உலகப் பிரதிநிகள் கலந்து கொண்டனர்!!

(உ.ம.வி.இ), பெ. மணியரசன் (த.தே.பொ.க), தியாகு (த.த.க.), அழகிரி (புதுவை), என்.பி. இராமசாமி, கி.வே. பொன்னையன் (மா.லெ.க) ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினர்.

திருச்சி வேலுசாமி, பரந்தாமன், சி. முருகேசன், கார்முகில், இராசேந்திர சோழன், வாலசாவல்லவன், ஈழவேந்தன், பி.வி. இராமானுசம், நா.மு. தமிழ்மணி, என்.பி. இராமசாமி, நற்றேவன், ம.செ. தமிழ்மணி, மா. பூங்குன்றன் உட்பட இருநூறுக்கு மேற்பட்ட தமிழகப் பிரதிநிகள் கலந்து கொண்டனர்.

சர்வதேச ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டிற்கு தலைமை வகித்த இந்திய சமதாக் கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் பேசியதாவது:—

**சர்வாதிகாரம் — அரசு பயங்கரவாதத்திற்கு எதிராக வன்முறையைக் கையாளலாம் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு நடத்துவோம்!**

ஈழத்தமிழர் ஆதரவு சர்வதேச மாநாட்டை நான் எனது கட்சி சார்பில் நடத்துகிறேன். மத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா உளவுத் துறை தந்த செய்தியின் அடிப்படையில் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அதில் நெடுமாறன் மூலமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து விடுதலைப் புலிகள் பணம் மாநாட்டிற்கு வந்துள்ளது எனக் கூறி மாநாட்டிற்குத் தடை விதித்துள்ளனர். இலங்கை அரசின் நிலை, மனித உரிமை மீறல்கள், அரச பயங்கரவாதம் குறித்து கவலைப் பட வேண்டிய இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது. புதுவையில் நடந்த மாநாட்டில் நான் அளித்த உறுதி மொழிக்கேற்ப இம்மாநாடு ஏற்கனவே நடந்து முடிந்திருக்க வேண்டும், பல்வேறு பணிகள் காரணமாக தற்போது நடக்கிறது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 24மணி நேரத்திற்கு முன் மாநாட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எத்தகைய சக்தி இதன் பின்னணியில் உள்ளது என்பதை நான் விவரிக்க விரும்பவில்லை.

நலன்களைக் கெடுக்கிறார். மன்னார் வளைகுடாவிற்கு அடுத்து நடக்கும் தமிழர் படுகொலை, மனித உரிமை மீறல்களை தடுக்க இயலாத இந்த மானங்கெட்ட தன்மையை மறைக்க இதுபோன்று செயல்படுகிறது. மாநாடு நடைபெறும் அந்த மைதானத்தின் புதர்களைப் போலீசார் துருவித் துருவிச் சோதனையிட்டனர். விடுதலைப் புலிகள் புதர்களில் மறைந்து இருப்பார்கள் என சோதனை போட்டிருப்பார்கள். (பலத்த சிரிப்பு). இந்த அரசுக்கு சவாலாக நான் இந்த மாநாட்டை கூட்டவில்லை. நெருக்கடி நிலை காலத்தில் அரசுக்கு சவால்விட்டு ஒரு ஆண்டு தலைமறைவாக இருந்தேன். நெருக்கடி நிலை முடிவுக்கு வந்து வெளியே வந்தேன். இந்த மாநாட்டிற்கு ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த பிரதிநிதி யோகன் மைல்ஸ் விமான நிலையத்தில் தடுக்கப்பட்டிருக்கிறார். நெடுமாறனுடன் ஐந்து நிமிடம் பேச மட்டும் அதிகாரிகள் அனுமதித்துள்ளனர். இலங்கையில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நடப்பது உலக நாடுகளின் மக்களுக்கு தெரியக்கூடாது என்பதற்காகத் தடை போடுகிறார்கள், தடுக்கிறார்கள்.

இலங்கை அரசு சுதந்திரம் பெற்ற போது இயற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் மதசார்பற்ற நாடு என்றும் தமிழ், சிங்களம் சம அந்தஸ்த்துடன் ஆட்சி மொழியாக இருக்கும் என்று இருந்தது. ஆனால் பின் சிங்கள அரசுகள் சட்டத்தை மாற்றி இலங்கையைப் புத்த மத அரசாக அறிவித்தது, தமிழர்களை இரண்டாம் தரக்குடி மக்களாக்கியது. சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என அமைதி வழிகளில் ஈழத் தமிழர்கள் போராடினார்கள். தேர்தல்களில் நின்று உணர்வுகளை வெளிப்படுத்தினர். ஆனால் எந்தப் பலனும் ஏற்படாத நிலையில் வேறுவழி இல்லாததால் இளைஞர்கள் தமிழ் மக்களைக் காக்க ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டி வந்தது. சொந்த முறையில் அமைதியை விரும்புபவன் நான். இந்திரா காந்தி அமைதியை விரும்பாமல் நெருக்கடி நிலையைக் கொண்டு வந்தபோது எதிர்த்துப் போராடியவன்.

சர்வாதிகாரம், அரச பயங்கரவாதத்திற்கு எதிராக வன்முறையை கையாளலாம். இந்திரா காந்தி பாராளுமன்றத்தில் என்னை சீண்டினார். அப்போது சர்வாதிகாரத்திற்கு எதிராக வன்முறையாளனாக இருக்க நான் என்றும் தயாராக இருப்பேன் என்று கூறினேன்.

இலங்கையில் ஐந்தில் இரு பங்குள்ள தமிழர்கள் பல ஆண்டு காலமாக தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். தன் நாட்டு வளம் – வலிமை முழுவதையும் திரட்டி போராடியும் இலங்கை அரசால் விடுதலைப் புலிகளின் போராட்டத்தைத் தடுக்க முடியவில்லை. முறியடிக்க முடியவில்லை. இந்த மாநாடு மூலம் தான் ஊக்கப்படுத்த தேவை இல்லை. 15 ஆண்டு காலமாக போராடி வருகிறார்கள். இலங்கை அரசாலும், இந்திய அரசாலும் தடுக்க முடியாது.

புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்திரா காந்தி அழைத்து டெல்லியிலும், சென்னையிலும் சந்தித்தார். உதவிகள் செய்தார். இதே போல் ராஜீவ் பதவிக்கு வந்ததும் ஆதரித்தார். அப்படி இருக்கும்போது மற்றவர் ஆதரித்தால் மட்டும் குற்றமாகிறது.

இலங்கை அதிபர் சந்திரிகா புதிய அதிகாரப் பரவல் திட்டம் என்கிறார். அதில் உருப்படியாக எதுவும் இல்லை. கிளிண்டன் முதல் இந்திய தலைவர்கள் வரை இதை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். இலங்கை அரசு உலக மக்களையும் ஏமாற்ற முடியாது.

மாநாட்டில் தீர்மானங்களை முன்மொழிந்து பேசிய மராட்டிய, மேற்கு வங்க, பீகார், ஆந்திர, கர்னாடகப் பிரதிநிதிகள் தத்தமது மாநிலங்களில் இது போன்று மாநாடு நடத்த முன் வந்துள்ளனர். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இது போன்று மாநாடுகள் நடத்துவோம். எந்தத் தடை வந்தாலும் இப் பிரச்சனையை அகில இந்திய அளவில் எடுத்துச் செல்வோம். இந்திய வர்த்தக மைய அரங்கில் இருந்து நம்மை வெளியில் தள்ளி இந்த குளிரில் மாநாடு நடத்த உதவிய குப்தாவிற்கும் நன்றி கூறவேண்டும். அவரது மடத்தனமான, முட்டாள் தனமான நடவடிக்கை காரணமாக பிரதிநிதிகளுக்கு ஏற்பட்ட வசதிக்குறைவுக்குப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். நெடிய போராட்டம் இது. மீண்டும் மீண்டும் நாம் சந்திப்போம். பிரச்சனைக்காகப் போராடுவோம். ஈழத்தமிழர்களின் போராட்டம் வெற்றி பெறும் வரை ஓயமாட்டோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்திய அரசின் முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலர் ஏ.பி. வெங்கடேசுவரன் மாநாட்டில் கலந்து கொண்டு பேசியதாவது:–

**விடுதலைப் புலிகளை யாராலும் வெற்றி கொள்ள முடியாது. ஈழத் தமிழர்களின் நியாயமான இலட்சியம் வெற்றி பெறும்!**

டெல்லியில் நடக்கும் ஈழத்தமிழர் ஆதரவு சர்வதேச மாநாட்டுக்கு உள்துறை மூலம் இந்திய அரசு தடைவிதித்தது முட்டாள்தனமாகும். தடை மிரட்டலை மீறி மாநாட்டை நடத்தும் ஜார்ஜ் பெர்னாண்டசைப் பாராட்டுகிறேன். உட்கட்சி சுதந்திரம் அறியாத கட்சியைச் சேர்ந்த உள்துறை அமைச்சிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்.

இலங்கையில் இனப்பிரச்சனை உச்சக்கட்டத்தை அடைந்து போர் நடக்கும் போது வெளியுறவுத்துறைச் செயலாளராக இருந்தவன் நான். இந்தியாவுடன் இலங்கை பேச இந்திரா காந்தி நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த போராளிகளுக்கு தார்மீக உதவிகளையும், சிறிய அளவில் பொருள் உதவிகளையும் செய்தார். உள்நாட்டுப் பிரச்சனையில் யாரும் தலையிடக்கூடாது என்றாலும் தமிழர் நிலை கண்டு இந்திரா தலையிட்டார். அவர் மகன் எதிர்மறையாகத் தலையிட்டதற்கு விலை தர வேண்டிவந்தது.

தமிழர் சிங்கள இனப் பாகுபாடு என்பது 2000 வருடங்களுக்கு முன் ஏற்பட்டதாகும். காலனி ஆதிக்க காலத்தில் தமிழர்கள் அடைந்த முன்னேற்றம் கண்டு சிங்களவர் கோபமடைந்தனர். மலையகத் தமிழர் – ஈழத் தமிழர் பிரிந்து இருந்தனர். இக்கால கட்டத்தில் செல்வா – பண்டா ஒப்பந்தம் 1958–ல் அதிகாரப் பரவல் தொடர்பாக ஏற்பட்டது. ஆனால் அதை நடைமுறைப்படுத்த விடாமல் புத்த மத வெறியர்களைத் தூண்டிவிட்டு போராட்டம் நடத்தியவர் 20–ம் நூற்றாண்டின் குள்ளநரி ஜெயவர்த்தனா. அவரது போராட்டத்தால் அந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்பட முடியாமல் போனது.

அதே ஜெயவர்த்தனா அதிகாரப் பரவல் எனக் கூறி 1986–ல் ராஜீவ் காந்தியுடன் பேசி ஒப்பந்தம் போட்டார். ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாநிலங்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களை இணைப்பது. இதற்காக மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவது என கூறப்பட்டது. ஒப்பந்தம் போட்ட இரண்டு நாளில் ஜெயவர்த்தனா வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்த்து நானே களத்தில் இறங்கிப் பிரச்சாரம் செய்வேன் என்று கூறினார்.

இந்திய அரசின் பிரதிநிதியாக ஜி. பார்த்தசாரதி இலங்கை சென்றிருந்த போது சிறைச்சாலையில் இருந்த தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அரசு உதவி இல்லாமல் இதைச் செய்ய முடியுமா? இப்படிப்பட்ட நிலையில் தான் விடுதலைப் புலிகள் இயக்கம் பிறந்தது. புலிகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் வரை தமிழர் நலன் பற்றி சிங்களவர்கள் சிந்தித்தது இல்லை.

பகைவர் இல்லா இடத்தில்தான் தமிழர்கள் வீரம் காட்டுவார்கள் என்ற நிலையை அடியோடு மாற்றியவர்கள் விடுதலைப் புலிகள். இந்த நிலையில் தான் 20–ம் நூற்றாண்டின் குள்ளநரி ஜெயவர்த்தனா ராஜீவ் காந்தியை சந்தித்து தனி ஈழம் அமைந்தால் அவர்கள் தாய்த் தமிழகத்துடன் சேர்ந்து அகண்ட தமிழகம் காணுவார்கள் என்று கூறினார். இதை நம்பிய ராஜீவ் காந்தி ஜெயவர்த்தனா சூழ்ச்சிக்கு இரையானார். இங்கு பேசிய இந்திய அமைதிப்படைத் தளபதி அசோக் மேத்தா கூறியதுபோல இந்தியப் படை இலங்கை போகாமல் இருந்திருந்தால் 1400 இந்திய வீரர்கள் இறந்திருக்கமாட்டார்கள். இதைபோல 4, 5 மடங்கு அதிகமான தமிழர்களும் இன்று உயிரோடு இருந்திருப்பார்கள். ராஜீவ் காந்தியின் பெரிய மனித பேராதிக்க நிலை காரணமாக இந்த இழப்பு ஏற்பட்டது.

ராஜீவ் கொலையை பெரிது படுத்துகிறார்கள். ஆனால் 6000, 7000 தமிழர்கள் ஈழத்தில் படுகொலையானதையும் நினைத்துப் பேச வேண்டும்.

மாலைதீவை பிளொட் போராளிகள் கைப்பற்றினார்கள். அது ஈழத் தமிழர்களால் கைப்பற்றப்பட்டால் இந்தியாவிற்கு என்ன கெடுதல். டி–கோ–கார்சியாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்திற்குத்தான் பிரச்சனை. எனவே அமெரிக்கா இந்தியாவிற்குத் தகவல் தந்தது. இந்திய அரசு நமது படையை அனுப்பி மாலைதீவை மீட்டு அதிபர் கயூமிடம் ஒப்படைத்தது.

இலங்கை அதிபர் இந்தியா வந்த போது இலங்கைத் தூதரகம் எனக்கு அழைப்பு விடுத்தது. நான் போய்ப் பேசினேன். புலிகளுடன் பேசுங்கள் என்றேன். அவர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றனர். ஏன் ஒரு நிபந்தனை போடுகிறீர்கள். சமாதானப் பேச்சுக்கு முயன்று பாருங்கள் என்றேன். இலங்கை அரசு பலமான நிலையில் இருந்து பேச வேண்டும் என நினைக்கிறது.

இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் தொடரும். யாரும் அதைத் தடுக்க முடியாது. அமெரிக்கா வந்தாலும், யார் வந்தாலும் அதுதான் நிலை. வியட்னாம் என்ன ஆனது? சோமாலியாவில் ஓரிரு அமெரிக்கர்கள் இறந்ததும் இராணுவம் ஓட்டம் பிடித்தது. சாக, தியாகம் செய்ய அமெரிக்கா தயாராக இல்லை. ஆனால் புலிகள் அப்படி அல்ல.

நான் முழு தமிழன் இல்லை என்றாலும் வெளியுறவுத் துறைச் செயலாளராக இருந்தவன் என்ற முறையில் கூறுகிறேன். ஈழத் தமிழர்களின் வெற்றியை யாரும் தடுக்க முடியாது. தமிழர்களின் நியாயமான இலட்சியம் வெற்றி பெறும் இவ்வாறு அவர் பேசினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. மாநாட்டில் பேசியதாவது:–

## ஈழத்தமிழ் மக்களை ஆதரிப்பது துரோகச் செயல் என்றால் அதைத் தொடர்ந்து செய்வேன்!

ஈழத்தமிழ் மக்களின் முழு அபிலாசைகளும் தீர்க்கப்பட வேண்டும். அர்த்தமற்ற போர் முடிவுக்கு வர வேண்டும். தமிழர்களின் கஷ்டங்கள் போக்கப்பட வேண்டும். போர் காரணமாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். இளைஞர்கள் கைது செய்யப்பட்டு 5, 6 ஆண்டுகள் விசாரணை இன்றி சிறையில் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன. எனவேதான் நான் குரல் கொடுக்கிறேன். பாராளுமன்றத்தில் எனக்கு எதிராக சிங்களவர்கள் குரல் கொடுக்கிறார்கள். எனவேதான் நான் குரல் கொடுக்கின்றேன். நான் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இடங்களில் நடந்த மனித உரிமை மாநாடுகளில் ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தேன். ஆளும் கட்சியினர் என் மீது தேசத்துரோக நடவடிக்கை எடு என்கிறார்கள். எனது இனத்துக்கு நடைபெறும் அநீதிகளை உலக அரங்கில் எடுத்துக் கூறும் சுதந்திரம் எனக்கு உண்டு. அதை யாரும் பறிக்க முடியாது. எனது இனத்துக்காகக் குரல் கொடுப்பது தேசத் துரோகம் என்றால் அதைத் தொடர்ந்தும் செய்வேன்.

டில்லியில் நடக்கும் இந்த மாநாட்டில் நான் கலந்துகொள்ள பல எதிர்ப்புகள் வந்தன. உண்மை நிலையை எடுத்துக் கூறும் போது சிங்களவர் என்னை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூறுகிறார்கள். தமிழன் உரிமை ஈழத்தில் மறுக்கப்படுகிறது. அதைப் பெறவே இளைஞர்கள் போர் புரிகிறார்கள்.

ஈழத்தில் போர் முடிந்து தமிழர்கள் நல்வாழ்வு அடைய நீங்களும் (இந்தியா) உலக நாடுகளும் உதவ வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பிரான்ஸ் நாட்டில் இருந்து மாநாட்டிற்கு வந்திருந்த உலக சட்டத்துறை மன்ற வழக்கறிஞர் ஜில் பிக்குவா பேசியதாவது:–

ஈழத்தில் மனித உரிமைகளுக்காக, தமிழர்களின் அடிமைத் தளை களைய






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள். அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள். அவர்கள் தீவிரவாதிகள் அல்ல. சிங்கள அரசு தமிழர்களையும், தமிழ் இளைஞர்களையும் தீவிரவாதிகள் என்கிறது. இது சரியல்ல.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. உலகில் அதிக அளவு இனப்படுகொலை நடக்கும் நாடு இலங்கையாகும். பள்ளி, கல்லூரி, கோவில், சர்ச் என்று கூடப் பார்க்காமல் இராணுவம் குண்டு வீசுகிறது. இது கண்டிக்கத்தக்கது. மனித உரிமைகள் எங்கு மீறப்பட்டாலும் அதற்காக பிரான்ஸ் நாட்டு மக்கள் குரல் கொடுப்பார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் பழ. நெடுமாறன் பேசியதாவது:–

## வெளிநாட்டுப் பணம் வந்ததாக இந்திரஜித் குப்தா கூறிய குற்றச்சாட்டு அபத்தமானதாகும் களத்தில் போராடும் புலிகளுக்கு டில்லி மாநாடு உற்சாகம் ஊட்டும்!

சரியான காலகட்டத்தில், சகல பொறுப்புக்களையும் ஏற்று அனைத்து சவால்களையும் சந்தித்து இந்த மாநாட்டை ஜார்ஜ் பெர்னாண்டஸ் நடத்தித் தந்துள்ளார். அவர் 1987–ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் செய்த கொடுமைகளைப் புத்தகமாக வெளியிட்டவர்.

என் மூலம் வெளிநாட்டுப் பணம் மாநாட்டுக்கு வந்ததாக இந்திரஜித் குப்தா கூறியது அபத்தமாகும், பெரிய பதவியில் உள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர் அபத்தமான குற்றச்சாட்டைக் கூறலாமா?

முன்பு பதவியில் இருந்தவர்களை இந்திய உளவுத் துறைகள் எப்படி முட்டாள் ஆக்கியதோ அதே உளவுத் துறைகள் உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவையும் முட்டாள் ஆக்கி உள்ளன.

இம்மாநாட்டிற்குத் தமிழ் நாட்டில் இருந்து வந்துள்ள தொண்டர்களில் பலர் பொருட்களை அடகு வைத்துக் கடன் வாங்கியும் சொந்தச் செலவிலும் வந்துள்ளனர். அமெரிக்கா, அவுஸ்திரேலியாவில் இருந்து பணம் வந்தால் விமானம் மூலம் அல்லது தனி ரெயில் மூலம் இவர்களைக் கொண்டு வந்திருப்பேன்.

இருள் மூடிக்கிடந்த இந்திய வானில் ஒரு நம்பிக்கை ஒளியாக இம்மாநாடு எழுந்திருக்கிறது. அதைத் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் செய்துள்ளார்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் இன்றைய தினம் ஈழத்தமிழர் பிரச்சனை எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் இம்மாநாடு பற்றி அறியத் துடிப்புடன் உள்ளனர். இந்திய அளவில் ஒரு விழிப்புணர்ச்சியை ஜார்ஜ் ஏற்படுத்தியுள்ளார். அவரது நடவடிக்கைகளுக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம்.

தமிழகத்தில் அரும்பாடுபட்டு தமிழக தலைவர்களை ஒன்றுபடுத்தி டெசோ அமைப்பை ஏற்படுத்தினோம். அதில் இருந்தவர்கள் எப்படி நழுவினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். தமிழர் பிரச்சனையை தலைவர் ஜார்ஜ் அகில இந்திய அளவில் எடுத்துள்ளதற்கு நன்றி. பீகார், உத்திரப்பிரதேசம், ஆந்திரா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், டெல்லி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வந்து தீர்மானங்களை முன் மொழிந்து உங்களுக்கு (தமிழர்களுக்கு) ஆதரவாக மக்களை திரட்டுவோம் எனக் கூறினார்கள். இந்தச் செய்தி கேட்டு ஈழத்தில் உள்ள சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் விடுதலைப் புலிகள் புதிய உணர்வும், எழுச்சியும் பெறுவார்கள்.

இந்த மாநாட்டுக்கு டெல்லி தடை விதித்ததும் நாங்கள் திகார் சிறையில் மாநாடு நடந்தாலும் கலந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று உறுதி கூறிய பிரதிநிதிகளுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

மாநாட்டில் கலந்து கொள்ள வந்த ஆஸ்திரேலிய பிரதிநிதி யோகன் மைல்சை விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பி உள்ளது இந்திய அரசு. எந்த விதமான ஆயுதமும் இன்றி, வன்முறையில் பங்கு பெறாத அவரை இந்த அரசு திருப்பி அனுப்பியது மனித உரிமையைப் பறிக்கும் செயலாகும்,

1975–ல் உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு பெறவந்த தமிழறிஞர் சிவத்தம்பி (இலங்கை), பேராசிரியர் பீட்டர் சால்க் (சுவீடன்) ஆகியோரையும் 1996–ல் சென்னை மாநாட்டுக்கு இலண்டனில் இருந்து வந்த வசந்தராசாவையும் திருப்பி அனுப்பிய காங்கிரஸ் அரசு மனித உரிமையையும், பேச்சுரிமையையும் பறித்தது. அதே ஆட்சியைப் போலத்தான் இன்றைய ஐக்கிய முன்னணி அரசும் உள்ளது. நரசிம்மராவுக்கும், இந்திரஜித் குப்தாவுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது.

யோகன் மாநாட்டில் கலந்து கொள்வதால் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டு விடுமா? மனித உரிமையில் அனுதாபம் உள்ள அனைவரும் இதற்காகக் குரல் கொடுக்க வேண்டியது கடமையாகும். இதுபோல இனி நடக்கக்கூடாது. ஒட்டுமொத்தமாக தமிழர்கள் ஒருங்கிணைந்து தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டசுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்.

தமிழீழ விடுதலைப் போரில் பிரபாகரனும், விடுதலைப் புலிகளும் வெற்றி பெறப் போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. "ஈழப் போர்க்களத்தில் தங்கள் தியாகத்தாலும், வீரத்தாலும் புலிகள் பெற்றுவரும் வெற்றிகளை உலக இராசதந்திர களத்தில் நிலை நிறுத்த வேண்டும். அதற்கான அடிப்படை டில்லி மாநாட்டின் மூலம் அமைக்கப் பட்டுவிட்டது'' என அவர் பேசினார்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இலங்கையில் இருந்து வந்து மாநாட்டில் கலந்து கொண்ட சதானந்தன் பேசியதாவது:—

**புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியாது**

**ஈழத் தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே!**

ஈழத்தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஈழத்தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து விலக தயாராக இருக்கிறார்களாம். விலகி யாரை ஏற்கப் போகிறார்கள் சிங்கள இராணுவத்தையா? 1995 டிசம்பர் 5–ம் தேதி யாழ்ப்பாணத்திற்குள் சிங்கள இராணுவம் நுழைந்தது. யாரும் அங்கு இல்லை. ஒரு நாய் கூட இராணுவத்தை வரவேற்க இல்லை. புலிகள் இயக்கம் மூன்று தலைமுறையாக உள்ளது. அதற்கும் தமிழ் மக்களுக்கும் தொடர்பு இல்லை என்று கூறுவது முட்டாள்தனமாகும். விடுதலைப் புலிகளின் போராட்டமும் தமிழ் மக்களின் போராட்டமும் ஒன்று என்பது தெளிவு, இது வரலாற்று பூர்வமான உண்மையாகும்.

புலிகளின் வெற்றி, தமிழ் மக்களின் வெற்றியாகும். புலிகளின் தோல்வி தமிழர்களின் தோல்வியாகும். இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

சந்திரிகா தீர்வுத் திட்டம், 'புலிகளைக் கூட்டுக்குள் அடைக்க வேண்டும். அப்படி அடைத்தபின் அரசு விரும்பி தருமாம் சலுகைகளை'. புலிகளைக் கூட்டுக்குள் அடைக்காமல் தமிழர்களுக்கு அதிகாரம் தந்தால் புலிகளும் — தமிழர்களும் ஏற்கமாட்டார்களா?

18 வருடமாக புலிகளைக் கூட்டுக்குள் அடைக்க சிங்கள அரசுகள் முயற்சிக்கின்றன. பிரிகேடியர் வீரதுங்காவை 1975–ல் ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினார். அவர் 6 மாதத்தில் புலிகளைப் பூண்டோடு அழிப்பேன் என்றார்.

ஈழத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆயுதப் போராட்டத்தில் இறங்கியபோது அதற்குரிய படிப்பு, வேலைகளை கற்றுக் கொண்டனர். அரசியல் போராட்டத்தில் இறங்க அதற்குரிய ஆயத்தம் செய்தனர்.

மாவீரர் நாளில் பேசிய தலைவர் பிரபாகரன் தெளிவாகப் பேசியுள்ளார். திம்புப் பேச்சுவார்த்தை அடிப்படையில் 4 கோரிக்கைகள் பற்றி பேசத் தயார் எனக் கூறியுள்ளார். ஆனால் சந்திரிகா புலிகள் ஆயுதத்தைக் கீழே போட்டால் தான் பேச்சுவார்த்தை என்கிறார். புலிகள் ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டால் பின் எதற்குப் பேச்சு. ஆயுதங்களைக் கீழே போட்ட இயக்கங்கள் எல்லாம் தயவு செய்து எங்களுடன் பேசு எனக் கெஞ்சுகின்றன. சிங்கள அரசு அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. ஆனால் அரசு புலிகளுடன் பேசத் தயார். ஆனால் ஆயுதங்களை கைவிடுங்கள் என்கிறது. ஆயுதங்களைக் கீழே போட்டால் மற்ற அமைப்புகளின் நிலைதான் வரும். புலிகளின் ஆயுதப் போர் தான் சிங்கள அரசைத் தீர்வுத் திட்டத்தை அறிவிக்க வைத்துள்ளது. புலிகள் போராடவில்லை என்றால் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணுவோம் என இலங்கை அரசு பேசியிருக்காது.

தமிழர்களின் ஆதரவு புலிகளுக்கு உண்டு. புலிகள் வெற்றி பெறுவது உறுதி. புலிகளையும், தமிழர்களையும் யாராலும் பிரித்துப் பார்க்க முடியாது.

மேற்கண்டவாறு அவர் பேசினார்.

டெல்லியில் நடந்த ஈழத்தமிழர் ஆதரவு சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி பேசியதாவது:—

டெல்லியில் நடக்கும் இந்த மாநாடு ஒரு நல்லதொடக்கமாகும். தடைகளை தவிடுபொடியாக்கி மாநாடு நடக்கிறது. தடைகள் வந்தால்தான் வீறுகொண்டு எழ முடியுமென தந்தை பெரியார் கூறுவார். அதைப்போல இங்கு வீறுகொண்டு எழுந்துள்ளனர். இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை முதலில் அனைவரும் உணர வேண்டும். அதுபோல சுதந்திரப் போராட்டத்திற்கும் தீவிரவாதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உணர வேண்டும். ஈழத்தில் புலிகள் தங்கள் மக்களின் இன அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். ஐக்கிய நாட்டுச் சபை என்ன கூறுகின்றது? இனப் படுகொலையைக் கண்டிக்க வேண்டும் என்கிறது. இலங்கையில் நடப்பது இனப்படுகொலைதான் என்று உலக மனித உரிமைக்குழு உலக நாடுகள் பல அறிவித்துள்ளன. எந்த நாடாவது சொந்த மக்கள் மீது குண்டு வீசுமா? சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது குண்டு வீசுகிறது. அமைதியைக் கொல்கிறது. சிங்கள அரசுகளின் திட்டமிட்ட படுகொலைகள் வரலாற்றில் குறிக்கப்படும். பிரபாகரனையும் புலிகளையும் தமிழ் மக்கள் நம்புகிறார்கள். மக்களைக் காப்பதா தீவிரவாதம்?

தாய், தங்கை, அக்காவை தன் முன் சிங்களன் கற்பழிக்கிறான் என்றால் அதை எப்படிப் பார்க்க முடியும்? எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஒரு பெண்ணைக் கற்பழிப்பவனையே கொல்லலாம் என இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது. அதைத்தானே புலிகள் செய்கிறார்கள். இப்படி மக்களைக் காக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களான புலிகளுக்கு மரியாதை செய்ய வேண்டும்.

இலங்கையில் நடப்பது தமிழர் பிரச்சனை மட்டுமல்ல மனித உரிமைப் பிரச்சனையாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

2ம் உலக மகாயுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட தேசிய விடுதலை அமைப்புகளின் எழுச்சிகளை அடக்க ஒவ்வொரு நாடுகளின் அரசுகளும் தங்களின் உளவு ஸ்தாபனங்களையே பயன்படுத்துகின்றன. இன்று உலகில் நடைபெறும் பாரிய இன அழிப்புக்க ளிலும் முக்கிய தலைவர்களின் கொலை களின் பின்னணியிலும் முக்கிய உளவு ஸ்தாபனங்களே இருந்து வருகின்றன. இதே போல் தான் சிறீலங்காவின் ஜே.வி.பி. (J.V.P) அமைப்பினையும் அதன் தலைவர்களையும் அழித்ததிலும் படுத்தியது.

1971–ல் நடந்த ஜே.வி.பியின் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டாலும் அதன் முக்கிய தலைவர்கள் கைதாகியும் தலைமறைவி லும் இருந்து பின்னர் அவர்கள் செயற் பாடுகளில் இறங்கத் தொடங்கினர். 1977–ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற் றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசும் அதன் தலைவர் ஜே.ஆர் ஜெயவர்த்த னாவும் விஜயவீராவை விடுதலை செய்தனர். விஜயவீரா அரசியல் கட் சியாக வெளியில் பதிவு செய்து செயற் பட்டாலும் திரை மறைவில் ஆயுதப் நடவடிக்கையும் தேசியப் புலனாய்வுப் பணியகத்தினால் கண்காணிக்கப்பட் டது. அரசியல் இராணுவ ரீதியாக ஜே.வி.பி.க்குள் ஊடுருவும் நடவடிக் கையை தேசிய புலனாய்வு மேற்கொண் டது. பெருந்தொகையான புலனாய்வு உறுப்பினர்கள் ஜே.வி.பி.க்குள் ஊடுருவி அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொண்ட னர். அவர்களால் நடத்தப்பட்ட பயிற்சி முகாம்கள் அரசியல் கூட்டங்களையும் உடனுக்குடன் தேசியப் புலனாய்வுப் பணியக செயலகத்துக்கு அறிக்கைகள் கொடுக்கப்பட்டு இரகசியப்படுத்தப்

# இலங்கையில்

## ஜே.வி.பி. அழிப்பு வேலைகளில் ஈடுபட்ட

# தேசிய புலனாய்வுப் பணியகம்

தேசிய புலனாய்வுப் பணியகத்தின் (N.I.B.) பங்கு முக்கியமானது.

1970 ஆண்டுக் காலப்பகுதியில் இடதுசாரிக்கட்சி ஒன்றில் இருந்து வெளியேறிய றோகண விஜயவீர அவர் களினால் மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. சிங்கள இளைஞர் களை ஒன்றுதிரட்டி ஆயுதப் புரட்சி மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்றும் நோக்குடன் 1971–ல் விஜயவீரா அவர் களால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி யானது அன்றைய ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சிறீமாவோ பண்டாரநாயக்காவால் இந்திய உதவியுடனும் தனது இராணுவம் மூலமும் முறியடிக்கப்பட்டது. இக் காலத்தில் இலங்கையின் உளவுப் பணி யகம் பலமுள்ளதாக இருக்கவில்லை. முழுக்க முழுக்க இராணுவ பலத்தின் மூலமே இப்போராட்டம் அழிக்கப்பட் டது.

இதன் பின்புதான் சிறீலங்காவின் உளவு பணியகத்தின் தேவையும் அவசி யமும் ஏற்பட்டது. எப்படி மற்றைய நாடுகளில் அரசுக்கெதிரான போராட் டங்களை முன்கூட்டியே முறியடிக்க இவ்வளவு ஸ்தாபனங்களின் செயற் பாடு அமைந்தது என்பதை அறிந்து கொண்ட சிறீலங்கா அரசு இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உளவு ஸ்தாபனங்களின் உதவியுடன் (N.I.B) தேசிய புலனாய்வுப் பணியகத்தை விரிவு



போராட்டத்திற்கான ஆரம்ப வேலை களை மேற்கொண்டவண்ணம் இருந்த தாக அறியப்படுகிறது.

ஜே.வி.பி. கட்சியை இலங்கை அரசு திரும்பத் தடை செய்தபின்னர் இரண் டாவது கட்ட நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படுகின்றன. இந்திய இராணுவம் இங்கு வந்த பின்னர் தென் இலங்கைப் பகுதியில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. புதிதாகப் பல உறுப் பினர்கள் சேர்க்கப்பட்டனர். ஆயுதப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட ரீதியாக ஜே.வி.பி. வளர்ச்சி யடைந்தது.

1971–ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கும் பின்னர் ஜே.வி.பி.யினரின் ஒவ்வொரு பட்டது.

ஆயுதப்படைகளில் இருந்தும் பலர் அரசின் மீது இருந்த வெறுப்பின் கார ணமாக ஜே:வி.பி.யிடம் சென்று இணைந்தனர். இதையும் தேசியப் புலனாய்வு பணியகம் தனக்குச் சாத கமாகப் பயன்படுத்தியது. இதனூடாக வும் தங்கள் உறுப்பினர்களை ஜே.வி. பி.க்குள் ஊடுருவியது. இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னரே விஜயவீரா மற்றும் முக்கிய உறுப்பினர் போன்ற வர்கள் இருக்கும் இடம் யாவும் தேசி யப் புலனாய்வுப் பணியகத்திற்கு தெரிந்து இருந்தது. இவர்களை முழுமையாக அழிப்பதற்கான நேரகாலத்தைக் கவ னித்துக் கொண்டிருந்தது.

இந்திய இராணுவம் இங்கு வந்த தன் பின் தென் இலங்கையில் அரசுக் கெதிரான எதிர்ப்பினைக் காட்டியது. ஜே.வி.பி.யினர் அரசியல் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. இக் கால கட்டத்தில்தான் ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனாதிபதி அபேட்சகராக பிறேமதாசா போட்டியிட்டார். ஜே.வி. பி.யின் பெயரால் பல அரசியல் படு கொலைகள் நடைபெற்றன. சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் விஜயகுமாரதுங்கா அவரது கட்சி ஆத ரவாளர்கள் இவர்களுக்கு மக்கள் ஆத ரவு இராணுவ பொலிஸ் ஆதரவுகள் அதிகரித்தமையால் அப்போதைய



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆளும் கட்சியின் ஆதரவுடன் தேசிய புலனாய்வு பணியகத்தினரே ஜே.வி.பி.யினுள் இருந்து செய்ததாகக் கூறப்படுகின்றது.

இந்திய இராணுவம் வெளியேறிக் கொண்டிருக்கையில் தென்னிலங்கையிலும் நெருக்கடிகள் அதிகரிக்கத் தொடங்கின. அக்காலத்தில்தான் ஜனாதிபதி பிறேமதாசாவின் அரசும் தேசிய புலனாய்வுப் பணியகத்தை ஜே.வி.பியை அழிக்கும் வேலைகளை முடுக்கி விட்டனர். ஆனாலும் இராணுவமும், பொலிசும் தமது இனத்தை உறவினரை அழிக்க அதிகம் அக்கறை காட்டவில்லை. அத்துடன் மக்கள் மட்டத்திலும் இவர்களுக்கு செல்வாக்கு இருந்தது. இந்நிலையை மாற்ற சிறீலங்கா அரசும் தேசிய புலனாய்வு பணியகத்தினர் பல மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பல இராணுவ அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் இக்காலகட்டத்தில் கொல்லப்பட்டனர். 1989–ம் ஆண்டு முதல் 72 நாட்களுக்குள் 2114 கொலைகள் தென்னிலங்கை பூராவும் நடந்தது. அவை யாவும் ஜே.வி.பி.யினரே மேற்கொண்டதாகக் கூறப்பட்டது. பல்கலைக்கழக உபவேந்தர் விஜேசுந்தர, மாத்தளை நகர சபைத்தலைவர் ஜினதாசா மற்றும் அநுராதபுரம் பகுதியில் 24.03.89–ல் நடந்த படுகொலைகள் (7 பேர் கொல்லபட்டனர்) ஜே.வி.பி. செய்யவில்லை. அரசாங்கம் பச்சைப் புலிகளே செய்தனர்; என பாராளுமன்றில் 24.03.89–ல் அப்போதைய எதிர்க்கட்சித்தலைவர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அறிக்கை விட்டது குறிப்பிடத்தக்கது.

அதாவது இராணுவப் பொலிஸ் குடும்பங்கள் அழிக்கப்படத் தொடங்கிய பின்னர்தான் இராணுவமும் பொலிசும் ஜே.வி.பி.யினரை அழிக்க முன்வந்தனர். இத்துடன் ஜே.வி.பியினருக்கு மக்கள் மட்டத்தில் இருந்த ஆதரவை இல்லாமல் செய்வதற்கு இவர்களுக்குள் ஊடுருவிய புலனாய்வுத் துறையினர் பல மக்கள் விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். தேவையில்லாத கதவடைப்புக்கள் வேலைநிறுத்தங்கள் பாடசாலைகளை மூடுதல் வர்த்தக மையங்களை பூட்டுதல், போக்குவரத்து தடை, அத்தியாவசியத் தேவைகள் நடைபெறாது தடைசெய்தல் இவையாவும் தலைவர் விஜயவீராவுக்கோ மற்றும் முக்கிய உறுப்பினர்களுக்கோ தெரியாமலே நடந்துகொண்டிருந்தன.

இக்காலகட்டத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேயரத்னா அவர்களும் ஜனாதிபதி பிறேமதாசா அவர்களும் அன்றாட வாழ்க்கை பாதிப்படைவதற்கும் இப்படுகொலைகள் நடப்பதற்கும் ஜே.வி.பி.யினர் தான் காரணம் என்றும் இவர்களை பூண்டோடு அழிக்கவும் கைது செய்யவும் உத்தரவு இடுகின்றனர். உண்மையில் இவற்றில் பெரும்பாலான நடவடிக்கைகள் அரசின் புலனாய்வுத் துறையினால்தான் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 11.08.89–ல் பாராளுமன்றத்தில் ரஞ்சன் விஜேயரத்தினாவால் விடப்பட்ட அறிக்கையின்படி 2 வருடத்துக்குள் 1156 அரசியற் படுகொலைகள் (1988.02.16–ல் விஜேயகுமாரதுங்கா கொல்லப்பட்டது உட்பட அனைத்தும்) ஜே.வி.பி.யினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது.

இதன் பின்னர்தான் பிரா என்ற பெயரிலும் பச்சைப் புலிகள் என்ற பெயரிலும் பல இளைஞர்களும் யுவதிகளும் வீதியோரங்களில் சுடப்பட்டனர். ஆறுகளிலும் குளங்களிலும் கட்டிப்போடப்பட்டனர். அதாவது ஜே.வி.பி.யினருக்கு மக்கள் மட்டத்திலிருந்த ஆதரவு இல்லாமல் செய்துவிட்டு இவ் வேலைகளை மேற்கொண்டனர். தேசியப் புலனாய்வுப் பணியகத்தினரின் ஊடுருவலால் முன் கூட்டியே முக்கிய மானவர்களின் விபரங்கள் அரசுக்கும் கிடைத்திருந்தன. தலைவர் விஜயவீரா மத்திய குழு உறுப்பினர் கேரத் போன்றோர் இருக்கும் இடம் பல மாதத்துக்கு முன்பே அரசுக்குத் தெரிந்திருந்தது. இதன் காரணமாகவே 10.11.89–ல் கண்டியில் வைத்து வீஜயவீராவை இலகுவாகக் கைதுசெய்ய முடிந்தது. 12–ம் திகதியன்று தப்பியோட முற்பட்டபோது ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டதாக அரசு கூறியது. உண்மையில் அரசினால் திட்டமிட்டே விஜயவீரா கொல்லப்பட்டார்.

இன்றைய ஜனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்காவின் கொலையிலும் அப்போதைய அரசின் உளவுப்படையின் பின்னணி இருந்துள்ளதாக அறியப்படுகிறது. அதாவது இராணுவ மட்டத்திலும் தனிப்பட்ட முறையில் விஜயகுமாரதுங்காவுக்கு செல்வாக்கு வளர்வதை விரும்பாத தேசியப் புலனாய்வுப் பணியகத்தினரும் அப்போதைய ஜனாதிபதியும் ஜே.வி.பி. என்ற பெயரில் இக் கொலையைச் செய்துள்ளதாகத் தகவல்கள் உள்ளன. தற்போது ஆட்சிக்கு வந்த சந்திரிகா அவர்கள் உடன் கொமிசன் அமைத்து விசாரிக்க முற்பட்டவர் தற்போது மௌனமாக இருப்பது புரியாத புதிராகவேயுள்ளது. ஏனெனில் புலனாய்வுத்துறைக்கு இப்போது பொறுப்பாக இருப்பவர் ஜனாதிபதி சந்திரிகாவேயாகும். கிணறு வெட்டப் பூதம் வந்தது போல் நிலமை மாறிவிடும் என்ற பயத்தில்தான் கொமிசன் அறிக்கைகள் யாவும் கிடப்பிலுள்ளன.

இதே நடவடிக்கைகள் தான் இந்தியாவில் பஞ்சாப், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் 'றோ' அப்போராட்டங்களை அழித்தொழிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக இடதுசாரிப் புரட்சி இயக்கங்களுக்குள் உட்புகுந்து பதவிகளை எடுத்துக் கொள்வார்கள். பின் போராட்டத்துக்கு விசுவாசமானவர்களை அழிப்பதே இவர்களது தொழிலாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் இல்லாதொழிப்பதற்கும் இந்திய உளவுப்படை 'றோ'வும் இலங்கைப் புலனாய்வுத்துறையும் பலமுறை தனியாகவும் கூட்டாகவும் சதி நடவடிக்கைகளை மேற்கொண்டும் அவை யாவும் தோல்வியிலே முடிவடைந்தது. இதற்கு உண்மையான காணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் மதிநுட்பத்திலும் வீரம் செறிந்த வழிநடத்தலும், தலைமைத்துவமும்.

2. விடுதலைப் புலிகள் இறுக்கமான இராணுவக் கட்டமைப்பு. இதனால் எந்தப் புலனாய்வுப் பிரிவுகளாலும் உள் நுழைய முடியாத தன்மை (ஆனால் ஜே.வி.பி.யினரின் மத்திய குழுவுக்குள் கூட புலனாய்வுத்துறையினர் ஊடுருவியுள்ளனர்.)

3. சிறந்த புலனாய்வு அமைப்பைக் கொண்டிருந்தமை.

மேற்கூறிய தன்மைகள் ஜே.வி.பி. போன்ற அமைப்புக்களிடம் இல்லாமல் இருந்ததாலேயே உளவுப் பிரிவுகள் அரச ஊடுருவல்கள் ஏற்படக் காரணமாக இருந்ததை அவதானிக்க முடிகிறது. சிறந்த தலைமையும், வழிகாட்டலும், இறுக்கமான கட்டமைப்பும், ஒழுக்க நெறிகளும் நேர்மையான முறையில் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்தியை எந்தப் புலனாய்வுத் துறையாலும் தடுத்துநிறுத்த முடியாதென்பதற்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓர் எடுத்துக்காட்டாகும். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும்

# பொறுக்க இயலாத வன்முறைகள்

இன்று பல கோடிப் பெண்களுக்கும் வீடு என்பது பயங்கரம் நிறைந்த இடமாகவே உள்ளது. அந்நியர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதலுக்கு மட்டுமல்ல, தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள், அன்பானவர்கள் ஆகியோரின் நாளாந்தக் கொடுமைப்படுத்தலுக்கே இவர்கள் பயப்படவேண்டியுள்ளது.

வீட்டில் அடித்துத் துன்புறுத்தல் என்பது இன்று பெண்களுக்கு எதிராக உலகம் முழுவதும் செய்யப்படும் செயலாகும். இச்செயல் பருவ வயதில் பெண்கள் காயத்துக்கு உள்ளாவதற்கான காரணங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது. இவை வீட்டின் மூடிய கதவுகளுக்குப் புறத்தே நடைபெறுகின்றன. மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் இதுபற்றிப் பேச அஞ்சுகின்றனர். இதனால் இது வெளிப்படுத்தப்படுவதில்லை.

ஒப்பீட்டுரீதியில் ஐக்கிய அமெரிக்கா போன்ற தாராள சமூக நாடுகளில் கூட இம்சைப்படுத்தப்படும் நூறு பெண்களில் ஒருவர்தான் இதுபற்றி முறையிடுகின்றார் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களில் அநேகமானவர்களுக்கு தம்மீது அதைப் பிரயோகித்தவர்களைத் தெரிந்திருக்கின்றது எனக் குற்றவியல் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இவ்வாறு தெரிந்த பெண்களில் 40% ஆனோர் கொலை செய்யப்பட்டுவிடுகின்றனர்.

உண்மையாக இந்தக் கொடுமை பொதுவான நிகழ்வாகக் காணப்படுவது துயரம் நிறைந்த ஒன்றாக உள்ளது. இக்கொடுமை கல்வி, வகுப்பு, வருமானம், இனம் ஆகிய எல்லையைக் கடந்தும் இடம்பெறுகின்றது.

அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் நாடுகளில் உலக வங்கி மேற்கொண்ட ஆய்வுகளில் 35% ஆன தரவுகள் காற்பங்கிலிருந்து அரைப்பங்கு வீதமான பெண்கள் தங்கள் நெருங்கிய உறவினர்களால் அல்லது துணைவர்களால் பௌதிகரீதியான தாக்கத்துக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கின்றன.

தனிப்பட்ட ஒவ்வொரு நாடுகளிலும் இவ்வாறு மேற்கொள்ளப்படும் வன்முறைகளை தரவுரீதியாகக் காட்டமுடியாதபோதும், இந்தப் பலாத்காரங்கள் ஒரு பண்பாட்டிலிருந்து இன்னொரு பண்பாட்டுக்கு குறிப்பிடக்கூடியவாறு ஒரேமாதிரியாகத் தொடர்ந்து செல்கிறது எனக் கூறக்கூடியவாறு உள்ளது. அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் நாடுகளிலும் இதே போன்றுதான் நிலைமை காணப்படுகின்றது என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஐவரில் ஒருவரோ அல்லது எழுவரில் ஒரு பெண்ணோ தங்கள் வாழ்நாளில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவார் என்று நியதியாகிவிட்டது.

பெண் விடுதலை என்ற கருத்து பரவலாகக் காணப்படுவதனால் அது வன்முறையின் அளவைக் குறைக்குமென்று யாரும் நினைக்கலாம். ஆனால் பெண்களின் உரிமை என்பது வேகமாக வளரும் அதேவேளை, அதற்கு விட்டுக் கொடுக்காதபடி வன்முறையும் அதிகரித்து வருகிறது.

## வீட்டில் நிலவும் கொடுமைகள்

அநேகமான மேலைத்தேய நாடுகளில் வீட்டு வன்முறையானது சட்டத்தினாலும் தகவல் ஊடகங்களினாலும் குறிவைத்து நோக்கப்படுகின்றன. எனினும் குடிபோதையில் அல்லது புகைப்பிடித்துக்கொண்டு வண்டி ஓட்டுதல் போன்ற விடயங்களை பெரிதுபடுத்திப் பார்ப்பதுபோல் இதையும் ஒரு பொது விடயமாக்கி மக்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதில்லை. அநேக நாடுகளில் வீட்டுள் நிகழும் கொடுமையானது அந்தரங்க விடயமாகக் கருதப்படுகிறது.

வீட்டுக்கு வெளியே பாலியல் துன்புறுத்தல்களும் உடலியல் துன்புறுத்தல்களும் குற்றங்கள் எனப் பெரிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் குடும்ப வட்டத்துக்குள்ளே இப்பிரச்சினைகள் ஏற்படும் போது சட்டம் தெளிவற்றதாகவே அதைப் பார்க்கின்றது. குடும்பத்தின் வாயிற்படிவரை மட்டுமே செல்லும் சட்டங்கள் இதற்கு விநோதமான காரணங்களைக் கூறுகின்றன. இந்த விடயம் பொதுமக்களின் கவனத்தை அவசரமாக ஈர்ப்பதற்கு நிர்ப்பந்தமான



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காரணங்களை கூறலாம்.

முதலாவது வீட்டின் வன்முறையானது அபாயமாக அடுத்த தலைமுறைக்கும் தொடருகின்ற துன்பமாக உள்ளது. அதாவது வன்முறைத் தந்தையர்களால் தாய்மார்கள் தாக்கப்படும்போது பிள்ளைகளும் அதனோடு சேர்ந்து தாக்கப்படுகின்றார்கள். இப்படியான பெற்றோரின் பிள்ளைகள் இதே செயற்பாட்டை தங்கள் வீட்டிலுள்ள பிள்ளைகளிடம் செய்துகாட்ட விரும்புவதைப்போல சமூகத்திலும் இந்நடவடிக்கைகளில் ஈடுபடத்தலைப்படுகின்றனர். இந்தப் பயங்கரமான சுழற்சி முறியடிக்கப்படவேண்டும்.

இரண்டாவதாக வீட்டில் ஒரு குழந்தையின் நடத்தைக்கும் வெளியே அப்பிள்ளையின் நடத்தைக்கும் ஒருமைப்பாடு உண்டு. இத்தகைய திட்டமிட்ட ஒடுக்குமுறையானது பெண்களாலும் யுவதிகளாலும் ஒட்டுமொத்தமாகச் சகித்துக்கொள்ளப்படும்போது சமூகம் அதற்கேற்றாற்போல் மாற்றப்பட்டுவிடும். வீதிச்சிறார்கள், குழந்தைத் தொழிலாளர், விபச்சாரம் உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு வீட்டு வன்முறையே பிரதான காரணமாக அமைகின்றது.

மூன்றாவது இது பொது ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விடயம். வீட்டு வன்முறையானது பெண்களையும் யுவதிகளையும் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நலிவடையச் செய்கின்றன. ஏன் ஆயுட்காலம் முழுவதும் பாதிக்கக்கூடியவாறு இருக்கின்றது.

நான்காவது குடும்ப வன்முறையானது சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியையும் அதன் அபிவிருத்தியையும் பாதிக்கின்றது. உணவு உற்பத்திக்கும் குடும்பத் திட்டத்துக்கும் அவசியமானவை என்பதால் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் அந்தஸ்த்துக்களை உயர்த்திக்கொள்ளவும் முயலுகின்றனர். அது மட்டுமன்றி தங்களுக்கு நிலையான வளர்ச்சி வேண்டுமென உணரத் தொடங்கியுள்ளனர்.

பெண்களின் மனப்பூர்வமான விருப்பங்களையும் சாதனைகளையும் பலமாகத்தடுத்து நிறுத்துபவை அவர்களுக்கு ஏற்படும் உடற்காயங்கள் மட்டுமல்ல. ஆண்களின் மறைமுகமான வன்முறை அச்சுறுத்தலுமாகும். இந்தப் படிப்பினை ஒரு பெண் தான் எதிர்காலத்தில் எப்படி இருக்கவேண்டும் என்ற கற்பனையை வன்முறையின் நிழல் சிதைக்க முற்படும்போதே உணரப்படுகின்றது. இப்படாது மறக்கப்படக்கூடாது. ஆண்களின் அடக்குமுறைக்கு முன்னே அச்சம் காரணமாக மௌனம் சாதிக்காத, தனது செயற்பாடுகளைக் குறைக்காத பெண்கள் எவரேனும் உண்டா?

பெண்கள், யுவதிகள் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளை மாற்றக்கூடியவாறு ஒன்றும் இல்லை. இது இன ஒதுக்கீட்டுக் கொள்கையைப் போன்று அதிகாரத்தின் கட்டுமானம். இது மாற்றப்பட வேண்டியது. இவ் வன்முறையானது நெடுங்காலமாக சமூகத்தில் வேரூன்றிவிட்டுள்ளது. உண்மையாக உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளும் இவற்றை ஏற்றுக்கொள்ளும் சமூக அம்சங்களைக் களைவதற்கு முயற்சிக்கின்றன. அல்லது இவற்றைக் காணச்சகிக்காது இவற்றை நிராகரிக்கின்றன.

பெண்கள், யுவதிகள் மீதான இவ் வன்முறையைக் குறைப்பதற்கான தீர்வு தனிப்பட்ட ஒருவரின் நடவடிக்கைக்கும் தண்டனை வழங்குவதல்ல. பெண்கள் தங்களுக்கான தகுதிகளை சமூகத்தில் பலமான இடத்தில் தக்க வைத்துக் கொண்டால்தான் தங்களுக்கு எதிரான வன்முறைகள் உருத்தெரியாத சம்பவங்கள் அல்ல, அதிர்ச்சியூட்டும் உண்மைக்குப் புறம்பான சம்பவங்கள் என்பதைக் காட்டமுடியும். சிறு சிறு காலடிகளே நீண்ட பயணத்தை தொடர உதவும் என்ற கூற்று இங்கு பொருத்தமாகும். தற்கால சமூகத்தில் பெண்களுக்கான சம உரிமை வேண்டி உலகம் முழுவதும் மக்கள் திரண்டெழுகின்றனர்.

## பெண்ணின் பிறப்புறுப்புகளின் திரிபுபடுத்தல்

உலகளாவியரீதியில் முதலில் குழந்தைகளின் உரிமைகளின் நடைமுறைகளை அமுலாக்கவேண்டும். அத்துடன் பெண்களுக்கு எதிரான எல்லாவகையான வேற்றுமைகளையும் களைவதற்கு முயலவேண்டும்.

ஆனால் உடன்பாடுகள் அதிசயமாக மாற்றமடைவதைப்போல் நம்பிக்கைகளும் நடைமுறைகளும் மாற்றமடையும் எனக் கூறமுடியாது. இவை சமூக, சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் தேவையான அடித்தள வேலைகளுக்கு முதற்படியாகும்.

பல லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் சுவீடனும் பெண்களின் தேவைகளை மக்களின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காக பாராளுமன்றில் பிரதிநிதிகளை உருவாக்கியுள்ளனர். குறைந்தது ஆறு நாடுகளாவது பெண்களுக்கென்றே காவல்துறை நிலையங்களை உருவாக்கியுள்ளன. அத்துடன் பாலியல் குற்றங்களை விசாரிக்கவென தனிப்பட்டதோர் வழக்காளர்களை நியமித்துள்ளது. சீனாவும், கமரூனும் வீட்டின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அண்மையில் அடைக்கல இல்லங்களை நிறுவியுள்ளன. இவ்வமைப்புகள் தனியே பெண்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் பெண்களின் உரிமை என்பது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய விடயம் என்பதை சமூகத்துக்குத் தொடர்ந்து நினைவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

> ‘பெண்களின் மனப்பூர்வமான விருப்பங்களையும் சாதனைகளையும் பலமாகத் தடுத்து நிறுத்துபவை அவர்களுக்கு ஏற்படும் உடற்காயங்கள் மட்டுமல்ல. ஆண்களின் மறைமுகமான வன்முறை அச்சுறுத்தலுமாகும். இந்தப் படிப்பினை ஒரு பெண் தான் எதிர்காலத்தில் எப்படி இருக்கவேண்டும் என்ற கற்பனையை வன்முறையின் நிழல் சிதைக்க முற்படும்போதே உணரப்படுகின்றது’

மேற்கூறியது போல் பெண்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பொதுவான படிமுறைகளை நடைமுறைப்படுத்துவனவும் வன்முறையைத் தடுப்பனவும் இவையே. எனினும் இத்தகைய படிமுறைகள் குறைந்த நாடுகளில் அதுவும் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்கு எதிராக நிலவும் அனைத்து வேற்றுமைகளையும் இல்லாதொழிப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு (CEDAW) பல நாடுகளிலும் செயற்படும்போதும் இதனுடைய கோட்பாடுகள் உள்ளூர் சட்ட நடைமுறைகளுடன் ஒன்று சேர்ந்து இயங்குபவையல்ல. பல நாடுகளும் இப் பெண்களுக்கான அமைப்பை அறிமுகப்படுத்தி அதை நடைமுறைப்படுத்த முயன்றாலும் பல பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றன.

இந்த உரிமைகளை நடைமுறைப்படுத்தவேண்டுமானால் பெண்களுக்கு முதலில் கல்வி புகட்டப்பட வேண்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கல்வியை அடைவதற்கான வழிகளில் சமமின்மை காணப்படுவதே பெண்களின் அந்தஸ்த்தை பலவீனப்படுத்தவும் மனித உரிமைகளைக் குறைத்து மதிப்பிடவும் வகை செய்கிறது. இது பெண்களைத் தங்களுக்கு எதிரான வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு அவர்களை வலுவற்றவர்களாக்குகின்றது.

எழுத்தறிவு, எண்ணறிவு ஆகியவற்றின் பலன்களை வழங்குவதற்கு மேலாக, கல்வி என்பது தங்கள் திறமைகளில் அவர்களை நம்பிக்கை வைக்கச்செய்கிறது. இளைஞர்களும் யுவதிகளும் தங்களுக்கு எதிரான வன்முறை பற்றிய கருத்துக்களை வாதிட்டுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளை இவர்களுக்குக் கல்வித்திட்டமானது வழங்குகின்றது. அத்துடன் பெண், ஆண் மாணவர்கள் சேர்ந்து படிக்கும் பாடசாலைகளில் பெண்பிள்ளைகள் சமத்துவம் பற்றிய செய்தியை ஆண்பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பான ஊடகமாக உள்ளார்கள்.

பங்களாதேசத்திலுள்ள ஒரு வைப்பகம் நடைமுறைப்படுத்தும் பிரசித்தமான ஒரு திட்டத்தின் கீழ் சுழற்சிமுறையில் எல்லாப் பிராந்தியங்களிலும் பெண்களுக்கு சிறு கைத்தொழில்களுக்கான கடன்களை வழங்குகின்றது. பெண்கள் தங்களைத் தாங்கள் பார்த்துக்கொள்ளவும் தங்கள் குழந்தைகளைப் பேணுவதற்காகவும் இருபதுக்கு மேற்பட்ட நாடுகளில் நுண்ணிய கடன் திட்டங்கள் சமூக, சுகாதார சேவைகள் சம்பந்தமாக வழங்கப்படுகின்றன.

இந்தக் கடன் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் சிறு கடைகளை ஆரம்பிப்பதற்கும் பள்ளிக்கூடக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் உபயோகமாகின்றன. கம்போடியாவில் 15.000க்கு மேற்பட்ட பெண்களுக்கு இக்கடன் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கடனைப் பெற்ற தாய்மாரின் பெண்பிள்ளைகளில் அநேகமானோர் பாடசாலைக்குச் செல்வதைக் காணக்கூடியதாயுள்ளது.

## நம்பிக்கைக் குறிகாட்டி

பெண்கள், யுவதிகளைத் துன்புறுத்தும் இந்த மரபுரீதியான நடைமுறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல எண்ணிக்கையான அமைப்புகள் பெண்களின் பாலியல் உறுப்புகளில் திரிபு ஏற்படுத்துவதால் அதற்கு அவர்கள் கூடிதலான இழப்பைச் சந்திக்க வேண்டிவரும் என ஆண்களுக்கும், அதேநேரம் பெண்களுக்கும் அறிவுறுத்துகின்றன. வெற்றியும் கண்டுள்ளனர்.

சில மதகுருமார் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். மேலும் கென்யா, சாம்பியா போன்ற நாடுகளில் ஒரு சிறுமி பருவ வயதை அடைந்ததையிட்டு வைபவங்கள் கொண்டாடப்படும்போது, அதில் எந்தவிதமான 'வெட்டுதல்' அல்லது 'கத்தரித்தல்'

**பெண்கள் தங்களுக்கான தகுதிகளை சமூகத்தில் பலமான இடத்தில் தக்கவைத்துக் கொண்டால்தான் தங்களுக்கு எதிரான வன்முறைகள் உருத்தெரியாத சம்பவங்கள் அல்ல, அதிர்ச்சியூட்டும் உண்மைக்குப் புறம்பான சம்பவங்கள் என் பதைக் காட்டமுடியும்**

நடவடிக்கையும் இடம்பெறா வண்ணம் இவர்கள் கண்காணிக்கின்றனர்.

இன்னொரு நம்பிக்கையான குறிகாட்டி என்னவெனில் கனடா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த 'திரிபுபடுத்தல்' நடவடிக்கையால் தங்கள் நாடுகளில் அச்சுறுத்தப்படும் பெண்களுக்கு அரசியல் அடைக்கலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்த நடவடிக்கைக்கு உட்பட்டவர்கள் சட்டப்படியான ஏதிலிகள் அந்தஸ்த்து உடையவர்கள் என அனுமானிக்கப்படுகின்றனர்.

பெண்கள் தங்கள் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் ஆதிக்கங்களும் தடையாயுள்ளன. ஒரு அரச பதவியிலுள்ள பெண்கூட தன்னினத்துக்குச் சம அந்தஸ்த்து வழங்கப்படும் என்பதை உறுதி செய்ய முடியாது. ஆனால் அதிகாரம் கொண்ட பதவி வகிக்கும் பெண்கள் அரசியல் திட்டங்களினூடே நல்ல பலன்களை அடைகின்றனர் என்பது தெளிவு. எனினும் இப்படியானதொரு நிலையை அடைய நெடுங்காலம் செல்லவேண்டும்.

ஆறு மத்திய கிழக்கு நாடுகள், புரூணை மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள தருசலம் ஆகிய நாடுகளைத் தவிர உலகெங்கணும் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது. இருந்தும்கூட 07% ஆன அரச உயர் பதவிகளிலேயே இவர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

அதிகாரப் போட்டிகளில் பெண்கள் முன்னேற்றமாக ஈடுபடுவது தற்போது நிலவும் அதிகாரக் கட்டமைப்புக்கு சவாலாயுள்ளது. இந்தக் கட்டமைப்பை மீளஅமைக்க வேண்டுமெனில் பெண்களினது மட்டுமல்ல ஆண்களினதும் ஒன்றிணைந்த ஆதரவு தேவை.

பெண்களின் மனித உரிமைகளில் ஒரு முன்னேற்றமும் கிட்டாத காலப் பகுதியாக 1990–கள் இருந்தபோதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளானது ஒரு மனித உரிமை அத்துமீறல் என்பது எதுவித தயக்கமுமின்றி அங்கீகரிக்கப்பட்டது இக் காலப்பகுதியிலாகும்.

தங்களுக்கான மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் வன்முறை எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதை விவரணப்படுத்த உலகளாவிய ரீதியில் பெண்கள் பற்றிய பரப்புரைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பெண்களின் சொந்தப் பாதுகாப்பைப் பேணுவதற்காக அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்கத்தவறிய இச் சர்வதேச சமூகமே இதற்கு சாட்சியளிக்கவேண்டும்.

வியன்னாவில் 1993–ல் நடைபெற்ற மனித உரிமைகளுக்கான மாநாட்டில் பங்குபற்றியவர்கள் பொது இடங்களிலும் அந்தரங்க வாழ்க்கையிலும் பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் நீக்கப்பட வேண்டும் என கோசமிட்டுள்ளனர். பெண்களுக்கும் யுவதிகளுக்கும் வழங்கப்படும் உரிமைகள் சர்வதேச மனித உரிமைகளிலிருந்து பிரிக்கமுடியாத அவற்றிலிருந்து எவ்விதத்திலும் குறையாத அதனை முழுமைபெறச் செய்யத் தேவையானவை என்றும் வாதிட்டனர்.

மாநாட்டின் போது "முப்பத்துமூன்று பெண்கள் தாங்கள் வன்முறைக்குட்படுத்தப்பட்டதை அத்தாட்சியோடு முறையிட்டதாக" வியன்னாவில் நடைபெற்ற கூட்டத்தொடரில் தெரிவித்தனர்.

உலகில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சமூகத்திலும் என்ன நடைபெறுகிறது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

என்பதனை எடுத்துப்பார்த்தோமானால் அடக்கி வாசிக்கப்படுகின்ற, ஆனால் அதனளவில் குறிப்பிடக்கூடிய நெடுங் காலமாகப் பெண்கள் எதிர்நோக்கும் கொடுமைகளே எஞ்சிநிற்கும். ஆனால் இதுவே உண்மையானது. எம்மைச் சூழப்பார்க்கும்போது இவ் உண்மைகள் இரத்தமும் தசையுமாகக் காட்சி தரும். இந்த அனுபவங்களால் பட்டறிவு குறைந்த மக்களின் மனம் மாற்றப்பட்டு விடும்.

(CEDAW) பெண்களுக்கு எதிரான வேற்றுமைகளை இல்லாதொழிக்கும் அமைப்பு. பல நூற்றாண்டு காலமாக நிலவிவந்த இந்தக் கொடூரங்களுக்கு உத்தியோகபூர்வமாக முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அத்துடன் பல ஆண் களையும் பெண்களையும் விழிப்படை யச் செய்து, பெண்களைத் துன்புறுத்த லில் இருந்து பாதுகாப்பது சம்பந்த மான பொறுப்புணர்வு சர்வதேச சமூ கத்துக்கு வரும்படி செய்துள்ளது.

### பால்ரீதியான துன்புறுத்தல்

பின் வந்த காலப் பகுதிகளில் ஐ.நா. வின் ஒரு பொதுக்கூட்டத் தொடரில் இன்னொரு புதிய அமைப்பான பெண் கள் மீதான வன்முறைகளை இல்லா தொழிக்கும் அமைப்பு இப்பால் ரீதியான துன்புறுத்தல் நடவடிக்கைகளைக் கண் காணிக்கும் என அறிவுப்புச் செய்யப் பட்டது. இது வரவேற்கக்கூடியது. இப்

**அதிகாரப் போட்டிகளில் பெண்கள் முன்னேற்றமாக ஈடுபடுவது தற்போது நிலவும் அதிகாரக் கட்டமைப்புக்கு சவாலாயுள்ளது. இந்தக் கட்டமைப்பை மீளஅமைக்க வேண்டுமெனில் பெண்களினது மட்டுமல்ல ஆண்களினதும் ஒன்றிணைந்த ஆதரவு தேவை**

பிரகடனம் ஆவணம் எனக் குறிப் பிடக்கூடியதாக 03 வழிகள் உள்ளன.

01. மனித உரிமைகள் என்ற தலைப் பின் கீழேயே பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் சட்டமிட்டுக் காட் டியுள்ளது.

02. துன்புறுத்தப்படுவதற்கு பிரதான பரிதாபகரமான காரணி பெண்ணாக இருத்தலே என்று அடையாளம் காட் டுவதோடு பால் ரீதியான வன்முறை என்ற தலைப்பின் கீழ் பெண்களினதும் யுவதிகளினதும் வாழ்க்கை சம்பந்தப் பட்ட அனைத்து விடயங்களையும் சேர்த்து அந்தப் பிரச்சினையைப் பரந் தளவில் நோக்கச் செய்துள்ளது.

03. இன்னொரு மைல் கல் போன்ற விடயம் என்னவெனில் 1994–ல் உரு வாக்கப்பட்ட ஐ.நா.சபையின் 'பெண் களுக்கான வன்முறைகள் பற்றி சிறப்பு பகுப்பாய்வு செய்யும் அமைப்பாகும்'.

பெண்கள் மீது பிரயோக்கிக்கப்படும் வன்முறையை எதிர்த்து எல்லா சமூகத் திலும் எல்லா பிரிவுகளிலும் அதனோடு சம்பந்தமான ஒரு தோற்றப்பாட்டை திட்டமிட்ட ரீதியில் உருவாக்கவேண் டும். இதற்கு சட்ட அமைப்புகள் தொடர்பு சாதனங்கள், சுகாதார அதி காரிகள், அரச, அரசசார்பற்ற அமைப் புகள், அரசியல்வாதிகள், மதத் தலை வர்கள் இவர்களுடன் தனிப்பட்ட ஒவ் வொரு ஆணையும் பெண்ணையும் உத விக்கு அமைக்கவேண்டும். இவற்றில் பெரும்பாலான பங்களிப்பை வழங்கக் கூடியவை பெண்கள் அமைப்புகளே. தேசிய, பண்பாட்டு, மத வகுப்பு வரை முறைகளைத் தாண்டி இதற்குத் தேவை யான முயற்சிகளை இவ் அமைப்புகள் முன்னெடுத்துச் செய்கின்றன. உதார ணமாக சில அமைப்புகள் சிறிது காலப் பகுதிக்குள் கூடியளவு தாக்கத்தை தாங் கள் அமைதியான வழியில் ஏற்படுத்தி யுள்ளதாகக் கூறியுள்ளன. அதுவும் இச் சிறிய அமைப்புகள் தனிப்பட்ட ரீதி யில் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக் கது.

பால் ரீதியான வன்முறைகளை களைவதில் பல அரச அமைப்புகள் பின்னுக்கு உள்ளன. இதுவே இவர்கள் செயற்படவேண்டிய காலம். ★

## தமிழீழ மக்கள் தகவல் பரிமாற வெரித்தாஸில் விசேட சேவை!

உலகத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு தனித்துவிடப்பட்டிருக்கும் தமிழீழ மக்களுக்கும் வெளியிடங்களிலுள்ள தமிழ் மக்களுக்கும் இடையி லான தொடர்புகளை பரிமாறிக்கொள்வதற்கான முக் கிய பணியொன்றினை வெரித்தாஸ் தமிழ்ப்பணி அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்க உள்ளது.

அடுத்த ஜனவரி மாதம் முதலாக – வாராந்தம் வெள் ளிக்கிழமைகளில் மாலை ஒலிபரப்பாகி வந்த தாயகத்துத் தலையங்கங்கள் என்ற நிகழ்ச்சிக்குப் பதிலாக "உறவுப் பாலம்" என்ற இந்தப் புதிய பகுதியை அவ்வானொலி அறிமுகம் செய்கிறது.

இந்த நிகழ்ச்சியின் ஊடாக ஒருவருக்கொருவர் தக வல்கள், செய்திகள் மற்றும் ஆறுதல் நம்பிக்கை வார்த் தைகள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளமுடியுமென வெரித்தாஸ் தமிழ்ப்பணி அறிவித்துள்ளது.

உறவினர்கள் மற்றும் முக்கிய நண்பர்களுக்கு செய்தி கள், தகவல்களை தெரிவிக்க விரும்புவர்கள் அல்லது அவர்கள் எங்குள்ளனர், எப்படியுள்ளனர் என்பன போன்ற விபரங்களை தெரிய விரும்பினால் கடிதம் வழி யாகவோ அல்லது தொலைபேசி வழியாகவோ தமக்குத் தெரிவிக்குமாறு வெரித்தாஸ் கேட்டுள்ளது.

மேலும், கடிதத்திற்காக அனுப்பப்படும் பதில்களும் இந்தப் பகுதியில் வாசிக்கப்படும். அவசியமானால் அவர்கள் முகவரிக்கே எழுதப்படுகின்ற பதில்கள், தகவல்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் உடல் நலம், இழப்புக்கள் மற்றும் தற்போது இருக்கின்ற இடம், நிலைமைகள் குறித்த விபரம் கேட்கின்ற விசாரிப்பு செய்திகளுக்கும், விபரம் சொல்லுகின்ற கடிதங்களுக் கும் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அது கூறி யுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போரும் இலக்கியமும்

தமிழகத்தைவிட தமிழீழத்தில் தலைசிறந்த படைப்பிலக்கியங்கள் தோன்றும் வாய்ப்புண்டு எனவும், அடுத்த நூற்றாண்டில் இது சாத்தியமாகும் எனவும் சிலர் எதிர்வு கூறியிருக்கிறார்கள்.

இந்த எதிர்பார்ப்பிற்கு காரணம் இல்லாமலில்லை. தமிழகத்தைவிட இங்குள்ள சமூகப் புறநிலைகள் வித்தியாசமானவை புரட்சிகரமானவை. எமது மண்ணில் தேச சுதந்திரம் வேண்டி ஒரு விடுதலைப் போர் நிகழ்கிறது. ஒரு உயர்ந்த மனித விழுமியத்தை நோக்கி ஈழத்தமிழர்கள் போராடி வருகிறார்கள். இங்கு விடுதலைப் போராட்டம் சமூக வாழ்வை ஆழமாகப் பாதித்து நிற்கிறது. சமூக வாழ்வு போராட்ட வாழ்வாக மாறியிருக்கிறது. இப்படியான ஒரு புரட்சிகர வரலாற்றுச் சூழலில், காலத்தால் சாகாத உன்னத கலை இலக்கியப் படைப்புகள் தோன்றுவது சாத்தியமென்பது இவர்களது கருத்து.

எமது எதிர்பார்ப்பும் அதுவே. புதுமையான போர்க்கால இலக்கியங்கள் எமது மண்ணில் மலர வேண்டும். எமது காலத்தையும், அந்தக் காலத்தில் விரியும் வாழ்வியக்கத்தையும், அந்த வாழ்வியக்கத்தின் வரலாற்றுப் போக்கினையும் பதிவு செய்யும் அற்புதமான கலா சிருஷ்டிகள் இங்கு படைக்கப்பட வேண்டும் என்பதே எமது ஆவல், எமது எதிர்பார்ப்பு.

உலகத்தின் தலைசிறந்த கலை, இலக்கியப் படைப்புகள் போர்க்கால சூழலில் பிறந்திருக்கின்றன. இதனை வலியுறுத்திக் காட்ட ஒரு நீண்ட பட்டியல் இங்கு தேவையில்லை.

போராட்டமும் புரட்சியும் சமூக வாழ்வின் சகல உறவு நிலைகளையும் உலுப்பி விடுகிறது. சமூகத்தின் தூக்கத்தைக் கலைத்து, சமூக விழிப்புணர்வை கூர்மைப்படுத்திவிடுகிறது. தனிமனித வாழ்வைச் சுற்றியுள்ள சுவர்களை இடித்துத்தள்ளி, ஒரு பொதுமையான நோக்கில் மனிதர்களை எழுச்சி கொள்ளச் செய்கிறது. சுயவுணர்வுக்கு அப்பால், தன்னை மறந்து, தனது விருப்புகளைத் துறந்து, இனம், தேசியம், நாடு என்ற பொதுவுணர்வால் ஈர்க்கப்படும் மனிதர்கள், மற்றவர்களின் விடிவிற்காக அலாதியான அர்ப்பணிப்புகளுக்கும் துணிகிறார்கள். மனிதத்தின் அபூர்வமான, அதியுன்னத உணர்வுகள் வெளிப்பாடு காண்பதற்கும் இந்தச் சூழ்நிலைகள் வழிசமைத்துக் கொடுக்கின்றன.

அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிராக மாபெரும் மனித விளைச்சல்களாக எழும் போராட்டங்களும் புரட்சிகளும் சமூக அமைப்பில் மாறுதலை தோற்றுவிக்கும் வரலாற்று இயக்கமாக அமைகிறது. இச்சமூகப் பூகம்பங்கள் அதிரும் காலத்திலும் சூழலிலும் வாழும் ஒரு கலை, இலக்கியவாதி இந்த வரலாற்று ஓட்டத்திலிருந்து ஒதுங்கிவிட முடியாது. இப் புரட்சிகரப் புறநிலைகளை அகநிலைப் படுத்தி அக்காலத்தை உருவகிக்கும் படைப்பிலக்கியங்களை அவன் ஆக்கித்தருகிறான். சிகரத்தைத்தொடும் போர்க்கால இலக்கியங்கள் அச்சூழலையும் காலத்தையும் உள்வாங்கிப் படைக்கப்பட வேண்டும்.

காலம் கலைப்படைப்பிற்கு களம் அமைத்துக் கொடுக்கிறது. கருப்பொருளாக விளங்குகிறது. அதுபோல கலைப்படைப்பும் காலத்தைப் படைக்க வேண்டும். காலத்தில் கட்டவிழும் வாழ்க்கையைப் படைக்கவேண்டும்.

நாம் ஒரு விடுதலைப் போராட்ட யுகத்தில் வாழ்கிறோம். ஒரு புரட்சிகரமான சூழலில் வாழ்கிறோம். ஒரு பெரும் வரலாற்று இயக்கம் எமது மண்ணில் மையம் கொண்டு புயலாக வீசுகிறது. இந்த வரலாற்றுப் புயல் எமது சமூகக் கட்டுமானத்தை உலுப்பி எடுக்கிறது. சமூகத்தில் பெரும் மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது. ஒருபுறம் வீரமும் அர்ப்பணிப்பும், மறுபுறம் சாவும் அவலமுமாக, திகைக்க வைக்கும் மனித அனுபவங்களைக் கொண்டதாக இங்கு வாழ்வு புதிய பரிமாணங்களைத் திறந்திருக்கிறது. இந்த வரலாற்று மெய்யுண்மைகளை எமது எழுத்தாளர்கள் உதாசீனம் செய்ய முடியாது.

எமது எழுத்தாளர்கள் எழுத வேண்டும். அந்த எழுத்துக்கள் எமது தேசத்தின் போராட்ட வாழ்வையும் போராட்ட காலத்தையும் உருவகிக்கும் உன்னத இலக்கியங்களாக அமைய வேண்டும்.

உயர்ந்த இலக்கிய ஆக்கங்களுக்கான கரு வளம் எமது மண்ணில் நிறையவுண்டு. ஆனால் உழைப்புத்தான் தேவை.

எமது எழுத்தாளர்கள் உழைக்க வேண்டும். அந்த உழைப்பில்தான் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியும் உயர்ச்சியும் தங்கியிருக்கிறது.

★

## ஈழத் தமிழருக்காக போராடும் விடுதலைப் புலிகளை எக்காலத்திலும் ஆதரித்தே தீருவோம்

'ஈழத் தமிழர் சுதந்திரத்திற்காகப் போராடும் விடுதலைப் புலிகளை எந்தக் காலத்திலும், எந்தவொரு சூழ்நிலையிலும் நாம் தொடர்ந்தும் ஆதரித்தே தீருவோம்' என்று தமிழ்நாட்டின் சேலத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் கலாநிதி ராம்தாஸ் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்காக நாம் அழுவதும், தொழுவதும் குற்றம் என்று கூறினால் அதை நாம் தொடர்ந்து செய்வதற்கு ஒருபோதும் தயங்க மாட்டோம். ஈழத் தமிழர் பிரச்சனைக்காக தீவிரமாகப் போராடும் விடுதலைப் புலிகளை நாம் ஆதரித்தோம்; தற்போதும் ஆதரிக்கின்றோம்; தொடர்ந்தும் ஆதரிப்போம்.

உலகில் அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகள் எல்லாம் இன்று விடுதலை பெற்றுவிட்டன. பாலஸ்தீனத்தின் விடுதலைக்காகவும், தென்னாபிரிக்காவின் விடுதலைக்காகவும் உலகம் முழுவதும் குரல் கொடுத்தது.

விடுதலைப் புலிகளும் ஒரு விடுதலை இயக்கம்தான். அதற்காகவே நாம் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றோம். விடுதலைப் புலிகளுடனான எமது உறவு தொப்புள் கொடி உறவு போன்றது. எனவே அதை யாராலும் பிரிக்க முடியாது என்றும் கலாநிதி ராம்தாஸ் கூறினார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கூட்டுக்கரங்களின் வீரியமிக்க செயற்பாடு

## நேரடி அறிக்கை

## கடற்றொழிலாளர் ஒன்றிணைந்த சமாசம்

முல்லை மாவட்டத்தின் கடற்கரை ஓரக் கிராமமொன்றில் தென்னஞ்சோலையினுள் இயங்குகிறது முல்லை மாவட்டக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். 25 கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை தன் அங்கத்தவர்களாகவும், முல்லைத்தீவு நிர்வாக மாவட்டம், அது சார்ந்த கடற்பிரதேசத்தை தன்செயற்படு பரப்பாகவும் கொண்டு விளங்குகின்றது இச்சமாசம்.

"உறுப்புரிமைச் சங்கங்களின் தொழிற்பாடுகளை எளிதாக்குவதும், சங்க அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தியாக்குவதுமே சமாசத்தின் நோக்கங்களாகும்'' எம்மை ஆர்வத்துடன் வரவேற்று உபசரித்ததுடன் தகவல்களை விரிவாகத் தந்தார் சமாசத் தலைவர் திரு. ரவிகரன் அவர்கள்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்த காலத்திலிருந்தே செயற்பட்டு வரும் சிரேஸ்ர உத்தியோகத்தரான திரு. புண்ணியம் அவர்களுடனிணைந்து விபரங்களைத் தொடர்ந்து கூறினார்.

"எமது சமாசத்தின் 25 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன. முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சங்கங்களும் திருமலை மாவட்டத் தொழிலாளர் சங்கம், சுண்டிக்குளம், பூனைத்தொடுவாய் சங்கங்கள் என்பவையே அவை. 93 மாசி 1–ம் திகதி சமாசம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பதவி வகிக்கும் 06 பேர் கொண்ட இரண்டாவது பணிப்பாளர் சபை இது'' புண்ணியமண்ணர் சொன்னார்.

"கடற்படைத் தாக்குதலால் தொழில் பாதிப்புற்றிருந்த தொழிலாளர்கள் தற்போது கடற்புலிகளின் பிரசனத்தால் ஓரளவு நிம்மதியாகத் தொழில் செய்யக்கூடியதாக உள்ளது. இதனால் சந்தைக்கும் மீன்கள் போதியளவு வரக்கூடியதாக உள்ளது'' சமாசத் தலைவர்.

எங்கள் சொந்தப் படைப்பலம் எமது மக்களைக் காக்கும் அரணாக வளர்ந்து நிற்பது கேட்க மனம் பூரித்து நிறைந்தது. இதுபோலவே நாளை எமது கடலன்னை தன்னுள் கொண்டிருக்கும் செல்வக் குவியல்களை எமது மைந்தர்கள் மூழ்கி எடுத்து எம் நாட்டின் பொருண்மிய பலத்தை உறுதியுடன் வளர்த்தெடுப்பர். எமது பொருண்மியத்துக்கு கடல் முதுகெலும்பாக விளங்கும். மனதுள் எண்ணங்கள் அலையென உயர்ந்தெழுந்து ஆர்ப்பரிக்க கனவுகள் விரிந்தன. கடலில் கரைந்துபோன செயல் வீரர்களின் முகங்கள் எண்ணங்களை வியாபித்தன.

"எங்களது பணிகளை வரிசைப்படுத்தினால்..... வடபகுதிக்கு வெளியேயிருந்து ஐஸ் பெறக்கூடியதாயிருந்த போது, இங்கிருந்து றால் எம்மால் தென்னிலங்கைச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால் சாதாரணமாக 50/– 60/– ஆக இருந்த றாலின் விலை 125/– வரை உயர்ந்தது. தொழிலாளர்கள் தம் உழைப்புக்கேற்ற வருமானத்தைப் பெற்றார்கள். ஆனால் நேரடியாக லொறிகள் வவுனியா ஊடாக அனுமதிக்கப்படாததாலும், ஐஸ் கிடைக்காததாலும் இந்நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது''. மனக்கவலையுடன் தெரிவித்த புண்ணியமண்ணரைத் தொடர்ந்தார், ரவிகரன் அவர்கள்,

"அங்கத்தவர்களின் தேவைகளைப் பூரித்தியாக்குவது எமது பணிகளில் முக்கிய ஒன்று தொழிலாளர்கள் கடலுக்கு தொழிலுக்கு செல்வதற்கான எரிபொருள், வலை மற்றும் உபகரணங்கள், கருவாடு போடுவதற்கான உப்பு இவற்றை விட அத்தியாவசியப் பொருட்களும் எம்மால் வழங்கப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்கள் என்னும் போது 5 நுகர்ச்சிக்கிளைகள் சிலாவத்தை, கள்ளப்பாடு, முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை, வட்டுவாகல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதை விட — சங்கங்கள் தாமே நேரடியாக கடைகளை நடாத்துகின்றன. அத்துடன் பொருட்தட்டுப்பாடான காலங்களில் அவற்றைப்பெற்று அங்கத்தவர்களுக்கு வழங்கி வருகிறோம்''.

"அடுத்ததாக எமது முக்கிய தொழிற்பாடாக அங்கத்தவர்களிற்கு கடன் வழங்குதல் இடம்பெறுகிறது. 94–ல் 316 விதவைகளுக்கு தலா 5000.00 வீதம் 1580000.00 ரூபாய்களை வட்டியில்லாத பத்துமாதக் கடனாக வழங்கியதன் மூலம் எமது கடன் வழங்கற் செயற்பாடு ஆரம்பமானது. இத்தொகை நூறு வீதமும் மீள் அறவீடுசெய்யப்பட்டமை முக்கியமானது"

"1995–ல் ஒரு அங்கத்துவச் சங்கத்திற்கு 10 பேர் வீதம் 20 சங்கத்திற்கு ஒருவருக்கு பத்தாயிரம் என்ற அடிப்படையில் இருபது இலட்சம் ரூபா வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு இத்தொகையும் முழுமையாக அறவிடப்பட்டது''.

"இம் முழுமையான அறவீடு தான் சர்வதேச செயர் நிறுவனத்தை எமது சங்கங்களிற்கு உதவ முன்வர வைத்தது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்" பெருமையுடன் கூறினார் சமாசத் தலைவர் திரு. ரவிகரன் அவர்கள்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த டொரத்தி என்னும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவன ஆய்வாளர் தனது ஆய்வொன்றில் முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தை அதன் கடன் வழங்கற் தொழிற்பாடுகள் மீள அறவீட்டின் முழுமைத்தன்மை குறித்து சிலாகித்துக் குறிப்பிட்டிருந்தமை இங்கு சொல்லப்பட வேண்டியதே.

"East cost Loams have been performing very well"

"கிழக்குக் கரையோரமாக முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் திரும்பவும் தத்தமது இடங்களுக்குத் திரும்பிய பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி நன்கு பயன்படுத்தப்பட்டது. மீன் பிடித்தொழில் நன்கு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விருத்தியடைந்துள்ளது. இங்குள்ள மீனவ சங்கத்தின் கடுமையான நிர்வாகத்தினால் இப்பகுதி மக்கள் இலாபம் அடைந்துள்ளனர்'' என்கிறார் டொரத்தி.

இதனால் கெயர் நிறுவனம் தனது நுண் கருத்திட்டத்தின் மூலம் சங்கங்களூடாக மீனவ மக்களிற்கு கடன் வசதிகளை அளித்து வருவதும் இக்கடன்கள் முழுமையாகவும், உரியமுறையிலும் மீளச் செலுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (இக்கடன்களுக்கு 18% வட்டியே அறவிடப்படுகிறது.)

இக்கடன்களைப் பெறும் பயனாளிகளான சங்க அங்கத்தவர்கள் உரிய தொழிலைச் செய்வதற்காகவே தமது கடன் நிதியை பயன்படுத்துவதினை கண்காணித்து பயன்படுத்தும் செயற்பாட்டையும் சமாசம் செயற்படுத்தி வருகின்றது.

"அடுத்த ஒரு முக்கிய பணி கடற்படைத் தாக்குதலால் மரணிக்கும் அங்கத்தவர்களிற்கு இழப்பீடாக ரூபா 10,000 வழங்குவது 12.02.94—ல் பூனைத் தொடுவாயில் கடற்படையால் கொல்லப்பட்ட 10 அங்கத்தவர்களின் குடும்பத்திற்கும் ரூபாஒரு இலட்சம் ஒரே தடவையில் வழங்கப்பட்டது'' சமாசத் தலைவர் சொல்லிக்கொண்டிருக்க, மீன் கடித்த மிச்சமாய் ஒதுங்கும் குண்டு துளைத்த உடல்களும், கரையில் பரிதவித்து நிற்கும் அவர்களது குடும்பங்களும் மனதில் தோன்ற, உடனடிக் கண்ணீர் துடைப்பாய் இக்கொடுப்பனவு அக்குடும்பங்களிற்கு உதவுவதை எண்ணி மனதிலே ஒரு ஆறுதல் தற்காலிகமாக வேனும் ஏற்பட்டது.

"எங்களுடைய மேலும் ஒரு தொழிற்பாடு அங்கத்தவர்களிடையே ஏற்படும் தொழில்சார்ந்த பிணக்குகளைத் தீர்த்து வைப்பதாகும். பிரதி 15—ம், 30—ம் திகதிகளில் இப்பிணக்குகளுக்கான விசாரணைகள் எம்மால் மேற்கொள்ளப்படும்'' புண்ணியமண்ணை உதாரணங்களுடன் விளக்கினார்.

தகவல்கள் தொடர்ந்தன. எங்கள் மனதிலோ... எதிரியால் எம் மண் மீது விதிக்கப்படும் பொருளாதாரத் தடைகள் இராணுவ அழுத்தங்கள் முப்படைத் தாக்குதல்கள் என்பனவற்றின் மத்தியிலும் எம்மக்கள் தாம் கூட்டுறவு முறையில் ஒன்றிணைந்து தமக்குள் இயங்கும் குழுவை உருவாக்கி தாமே நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும், தம்காலில் நிற்க முயலும் நிமிர்வு தெரிந்தது. ★

# வாழ்க்கை ஒரு இனிய பாடலாகட்டும்

கருவறை தாண்டிவரும் என்
கண்களுக்குள்ளே - சூரியன்
ஒளி வீசப்போகிறான்.
புதிதாய் இவ்வுலகைப் பார்க்க
பூரண வளர்ச்சி பெற்றுத்
தயாராகிவிட்டேன்.
நான் இன்னமும் முகம் பார்க்காத
எனது தாயினதும்
எனது முதலெழுத்தை
உரிமையுடன் தரமுன்வராத
தந்தையினதும்
என்னை அங்கீகரிக்க முடியாத
இச் சமூகத்தினதும்
விருப்புகளுக்கும் அப்பால்
உங்கள் உலகோடு
இணையப்போகிறேன்.
என்னை வரவேற்க விரும்பாத
உங்களுடன்
சில வார்த்தைகள்.
பேசமுடியாத என் வாயிலிருந்தும்
முற்றும் வளர்ச்சியடையாத
மூளையிலிருந்தும்
எப்படி இந்த எதிர்பார்ப்புகள்
உருவாகி வெளிவந்தன என்ற
ஆராய்ச்சிக்கு அப்பால்
எனக்கும் மனிதம் உண்டென்று
உணர்ந்திடுங்கள்.

கருத்தொருமிப்பும் புரிந்துணர்வுமற்ற
இருவரின் உணர்ச்சிகளுக்கிடையே
நான் உருவாகியிருப்பினும்
என் உள்ளக்கிடக்கை பெரிது.
உவகையுள்ள ஓர் உலகையே
என கண்கள் பார்க்கத்
துடிக்கின்றன.
அறிவு பூர்வமானது உங்கள்
உலகென்று எனக்குத் தெரியும்.
இப்புவி தாண்டி
அண்டங்களையெல்லாம் அலசும்
வேகம் பெற்றுவிட்ட
இந்த நாட்களின் அவசரத்தில்
வாழ்வின் அடிப்படைத் தத்துவமே
தகர்ந்தது
தரைமட்டமாய் ஏன் போனது?
யுத்த களங்கள்
வீட்டிலிருந்து புறப்பட்டு
நாடுகள் உலகமென்று வியாபித்து
ஏன் விரிந்துபோய்க் கிடக்கின்றது?

விளங்காத மொழிகளைக்கூட
தெரிந்துகொள்ள
முனைபவர்களுக்கு,
துணையானவர்களின் உணர்வுகள்
மட்டும்
ஏன் புரியாமல் போனது?
கடலின் ஆழத்தையும்
இமயத்தின் உயரத்தையும்
இருந்தபடியே கூறமுடிந்த
மனிதனுக்கு
மனங்களின் ஆழம்
எப்படிப் பிடிபடாமல் போனது?
இந் நித்திலம் தாண்டி
நீளச் சென்ற மனிதர்களே!
ஏன் உங்கள் காலத்தின்மீது
இன்னமும் அன்புகொள்ளவில்லை?

என்னை ஈன்றெடுக்கப்போகும்
தாயே!
எனக்குத் தெரியாத தந்தையே!
தொப்புள் கொடியாய்
தொடரப்போகும் உறவுகளே!
உயிர்ப்புக் குரலெழுப்பும்
இச்சிசுவின் மொழியுமக்குக்
கேட்கிறதா?
என் சின்ன நெஞ்சுக்குள்ளே
முகிழ்ந்த இவ்வேதனைக் கொதிப்பு
என்
துடிப்புக்களூடே புரிகிறதா?
உறவுக்கொடி படர்ந்து
முற்றிப் பழுத்த கனியாய்
ஆரோக்கியமாய்
என்னைப்போன்றோரைப்
பெற்றெடுங்கள்.
பழமையில் ஊறிப்போன
தளைகளை
தயை கூர்ந்து எனக்குப் போடாதீர்.
உங்கள் கற்பனையில் உருவகித்த
சிற்பமாய் எனைச் செதுக்காதீர்.
வாழ்க்கையைப் பற்றிய புரியாத
வேதாந்தங்கள்
எனக்கு வேண்டாம்.

கடலைப்போல விரிந்துகிடக்கும்
இவ் வாழ்க்கைக் களம்
நடுவே
நீங்கள் போராடிய அதே
அலைகளோடு
பயணிக்கப்போகும் எனக்குத்
துடுப்பாகுக.
புதிதாய் முளைவிடப் போகும்
என் சிந்தனைகளின்
வேர்விடலுக்காய்
என்னைப் பண்படுத்துக.
அன்புப் பாலையே
எனக்கு
முதலில் ஊட்டுங்கள்.
வாழ்க்கை எனக்கோர்
இனிய பாடலாகட்டும்.
இசையை நீர் தருக.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெண்ணொடுக்குமுறை எனும் சமூகப் பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஒன்றுபடுவோம்

*1997.10.10* அன்று தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள். இந்நாளைத் தமிழீழம் கொண்டாடியது. இது, எமது இயக்கத்தின் புரட்சிப் பெண் ஒருத்தி தாயக விடுதலைக்காக தன்னைத் தற்கொடையாக்கிய நாள். எம்மினத்தை அழிக்க நினைத்த எதிரிக்கு எதிரான போரில் பாலின வேறுபாடற்று அனைவரும் கலந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தும் நாள். இன்னமும் தம்மை உணர்ந்துகொள்ளாது சமூகத்தில் பின்தங்கி நிற்கின்ற பெண்களின் முன்னேற்றத்துக்காக நாமெல்லாம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டிய தேவையை உணர்த்தும் நாள். தம்முள் இருக்கும் மனித ஆளுமையை, ஆற்றல்களை, உரிமைகளைப் புரிந்துகொள்ளுமாறு ஒவ்வொரு பெண்ணும் சமூக மனிதர்களிடம் வலியுறுத்தும் நாள். தம்மை நசுக்கிவரும் சமூக அடக்கு முறையிலிருந்தும், மேலாதிக்கத்திலிருந்தும் விடுதலையையும் அமைதியையும் வேண்டிநிற்கும் பெண்ணினத்தின் உணர்வுகளோடு இந்நாளில் நாம் ஒன்றுபடுவோம்.

பத்து வருடங்களின் முன் இதே நாளில் 2–ம் லெப். மாலதி எமது இயக்கத்தின் முதல் பெண் புலியாகக் களத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். எமது தேசிய விடுதலைப் போருக்கு உத்வேகம் கொடுத்த நிகழ்வுகளுள் ஒன்றாக இந்த நிகழ்வு அன்று அமைந்தது.

ஒரு இனத்தின் இயல்பான வாழ்நிலை அச்சுறுத்தப்படும் போது, அந்த இனம் வீறுகொண்டு எழும். தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு, தன் நிம்மதியைக் குலைக்கும் சக்தியை எதிர்க்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்படும். இது ஒரு நடைமுறை உண்மை. தமிழரின் தாயகப் பகுதியிலேயே தமிழர்களின் பாதுகாப்பு சிங்களப் பேரினவாதிகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டபோது, அதை முறியடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடத் தமிழினம் நிர்பந்திக்கப்பட்டது. தனது இருப்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காக எழுச்சிகொண்டு அணிதிரண்டது. இந்த எழுச்சி தமிழீழ மக்கள் அனைவருக்குமே பொதுவானது பாலின வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த எழுச்சியினால் உந்தப்பட்டு அணிதிரண்ட பெண்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் களம் அமைத்துக் கொடுத்தது. இதனால், தேசிய விடுதலையில் அவாக் கொண்ட பெண்கள் புலிகளின் தலைமையில் ஒரு பெரும் சக்தியாக அணிதிரண்டனர். இன்று தமிழீழ விடுதலைப் போரில் இவர்கள் ஆற்றிவரும் பங்கு மிகப் பெரியது.

எமது தாயகத்தை ஆக்கிரமிக்கப் போவதாக இறுமாந்துள்ள எதிரிக்கு எதிராக இவர்கள் களத்தில் போரிடுவதுடன், சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள பெண்ணொடுக்குமுறையைக் களைவதற்கான பணியையும் வழிநடத்துகின்றனர்.

பெண்ணொடுக்குமுறை உலகில் நெடுங்காலமாக நிலவிவரும் பிரச்சினையாகும். பாலின வேறுபாடற்று அனைத்து மக்களையும் பாதிக்கும் சமூகப் பிரச்சினையாக இது விளங்குகிறது. ஆழமாக நோக்கினால், சமுதாய மேம்பாட்டைப் பின்தள்ளும் காரணியாகவும் இது அமைகிறது. இந்தப் பிரச்சினையைத் தனியொருவராலோ, தனியொரு பாலாராலோ தீர்க்கவியலாது. ஒட்டுமொத்தமாக முழுச் சமூகமுமே இதில் அக்கறை கொள்ளும் போதுதான், பெண் ஒடுக்குமுறையை இல்லாதொழிக்கும் முயற்சியில் வெற்றி காண்பது சாத்தியமாகும்.

இன்று தமிழீழப் பெண்ணினம் பெரும் சுமைகளைச் சுமக்கின்றது. இனவாத எதிரியின் ஆக்கிரமிப்புப் போரால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளால் உண்டான மன உளைச்சல், வீதியோரங்களில் மரங்களின் கீழும் சிறு மறைப்புகளுக்கு நடுவிலும் வாழும் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளால் எழும் மனக்குமுறல், ஒழுங்காகச் சாப்பிடவும் வழிவகையின்றி கல்வியையும் தொடரமுடியாமல் அலைகின்ற குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பயம், போதிய மருத்துவ உதவிகளின்றி உறவுகள் சாவதால் உண்டாகும் அவலம், பெண் என்ற காரணத்துக்காக இரண்டாந்தரக் குடிமக்களாக நோக்கப்படுகின்ற இழிநிலை என்று எல்லாமாகச் சேர்த்து அவர்களை நிமிரவிடாமல் அழுத்தமுனைகின்றன. இத்தனை சுமைகளிலிருந்தும் அவர்கள் விடுபடத்துடிக்கின்றனர். துன்பங்களுள் அமிழ்ந்துபோகாமல் நிமிர்ந்து வாழ விரும்புகிறார்கள். எல்லாப் பணிகளிலும் தமக்குத் தோள் தருமாறு சக மனிதர்களை வேண்டுகிறார்கள்.

எமது சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்குமே பெண்ணொடுக்குமுறையை இல்லாதொழிக்கும் பெரும் பொறுப்பு இருக்கின்றது. இந்தப் பொறுப்பை அக்கறையுடன் ஏற்க எல்லோருமே முன்வர வேண்டும்.

நம் சமூகத்தின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் காரணிகளில் ஒன்றான பெண்ணொடுக்குமுறை பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்ட நிலையில்தான் அவர்களால் எந்தக் கருத்தையுமே உள்வாங்கமுடியும். எனவே அத்தகைய நிலையைத் தோற்றுவிப்பதில் சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் ஒன்றிணைய வேண்டும்.

பெண்களின் முன்னேற்றத்தில் பொருளாதாரமும் முக்கிய பங்கு வகிப்பதால், அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஆய்வுகளில் ஈடுபட வேண்டும்.

பெண்களின் வளர்ச்சி நோக்கிய எத்தகைய நடவடிக்கையை முன்னெடுப்பதற்கும், எதிரி எம்மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள இனவாதத்தடைப் போர் தடைபோட முயலுவதால், இப்போரை வெல்வதற்கான பணியிலும் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இந்த வேலைகளின் அவசியத்தை உணர்ந்து, இருபாலாருமே புரிந்துணர்வுடன் இணைந்து பெண்ணொடுக்குமுறைப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும். இதையே இந் நாளை முன்னிட்டு தமிழீழ மக்களிடம் நாம் வேண்டிக்கொள்கின்றோம். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணச் சுவடி

# மலர் வளையம் வாங்கும் சிறீலங்காவின் பத்திரிகையாளர்கள்

இன்று சிறீலங்காப் பத்திரிகையாளர்களின் முகங்கள் கவலை, வீரக்தி, ஆத்திரத்தின் ரேகைகள் படர்ந்து இருளடைந்து தொங்குகின்றன. தமது குரல்வளை நசுக்கப்படுவதாக தமது சுதந்திரம் ஒடுக்கப்படுவதாக அவர்கள் கூக்குரலிடுவதும் தொடர்கதையாக நீடிக்கிறது. இப்படியான குரல்கள் 94 ஒக்டோபர் 16–ம் திகதிக்கு முன்பாகவும் ஓங்கி ஒலித்தது. அக்குரல்களின் வெப்பத்தில் உருவான தீயைக் கிளறிவிட்டு நெய் வார்த்து சிறீலங்காவில் பத்திரிகை பாதிக்கப்படுகிறது, ஜனநாயகம் நசுக்கப்படுகிறது என்றும் கூக்குரலிட்டனர். அவர்களுக்கு கறைபடியாத கரங்களையுடையவர் என வர்ணிக்கப்பட்ட பெண்மணி தலைமை தாங்கினார் என்பது எமது மக்களால் மறக்கப்பட்டிருக்கமாட்டாது. வரலாற்றினை மறந்து போகுமளவிற்கு எமது மக்கள் இன்னமும் வங்குறோத்தடையவில்லை என்பது உண்மையே அது ஒரு புறமிருக்க இவ்வாறு சிறீலங்காப் பத்திரிகையாளர்கள் கூக்குரலிடுவது ஏன்? ஒரு நாட்டின் பத்திரிகைச் சுதந்திரம் அந்நாட்டின் ஜனநாயகத்தின் ஆரோக்கியத் தன்மையை நாடி பிடித்துப் பார்க்க உதவும் ஒரு விடயம். சிறீலங்காவிலோ பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்படுவதும், நசுக்கப்படுவதும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு பெரும் கட்சிகளாலும் தொடர்ச்சியாகவே ஒரு "அரசியல் தர்மமாகக்" கடைப் பிடிக்கப்படுகிறது. ஏனெனில் எதிர்க்கட்சி, ஆளுங் கட்சியை மேற்சொன்னவாறு கண்டிப்பதும் அரசைக் "கிழியோ கிழி'' என்று கிழிப்பதும் இந்தப் பின்புலத்தில் ஆட்சி மாற்றம் நடப்பதும் மீளவும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக பத்திரிகைச் சுதந்திரத்தில் அரசு கைவைக்க மறுபடியும் கூக்குரல்கள் எழும். பாவம் சிறீலங்கா பத்திரிகையாளர்களும் சிங்கள மக்களும் மட்டுமல்ல; ஆட்சியாளர்களால் தூக்கிப் பிடிக்கப்படும் ஜனநாயகமுந்தான்.

சிறீலங்காவின் பத்திரிகையாளர்கள் தென்னிலங்கையில் அரசால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்கள், ஊழல்கள் போன்றவற்றைக் கண்டித்து எழுதிக் குவித்து வருகின்ற போதும் வடக்கு – கிழக்கில் நடைபெறும் அரச பயங்கரவாதத்தை அரச ஆயுதப் படைகளின் தமிழர் மீதான கொடூரங்களை மனித உரிமைகளின் அப்பட்டமான மீறலை, தமிழரின் வாழ்புலம் மீதான கருவறுப்பு நடவடிக்கைகளைக் கண்டு கொள்வதேயில்லை. (ஓரிருவரைத் தவிர அவ்வாறின்றி தப்பித்தவறி கண்டு கொள்ள நேர்ந்தாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் அடக்கியே வாசிக்கும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. இராணுவத் தரப்பிற்கு ஏதாவது இராணுவ வெற்றிகள் கிடைத்தால் ஆகா ஓகோ என்று பிரமாதமாகப் புகழ்ந்து தள்ளி 'அப்பே றட்ட' கோட்பாட்டின் ஒரு மைல் கல்லாக அவற்றை உருவகித்தும் பூரித்துப் போகின்றன. அப்போது ஆட்சியாளர்கள், இராணுவத் தலைமை என்பனவும் அவர்களும் கைகோர்த்து மகிழ்வர். ஒரு தேனிலவு தொடங்கும் அச்சமயம் எதிர்க் கட்சிகள் வாய்முடி மௌனமாகிவிடும். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியவாறு சூரியக்கதிர் 1, 2 இன் போது இந்நிலை அரங்கேறியது. ரத்வத்தையோ சிங்கள தேசத்தின் நவீன 'சப்புமால் குமாராயா'வாக பத்திரிகைகளால் வர்ணிக்கப்பட்டார்.

> **தற்போது இடைநடுவில் அம்போ என நிற்கும் ஜெயசிக்குறு நடவடிக்கையினைக் கண்டித்து எழுதித்தள்ளும் இராணுவ ஆய்வாளர்களைக் குறித்து இராணுவ அதிகாரிகள் ரத்வத்தையிடம் முறையிட்டபோது "கனக்கக் கதைப்பவர்களை" போர்முனைக்கு அனுப்பப் போவதாக ஜெனரல் அறிவித்தார்**

ஆனால் இராணுவத் தரப்பிற்குப் புலிகளின் பாய்ச்சல்களால் பேரிழப்புகள் ஏற்படும் போது பத்திரிகையாளர்கள் தம் இயல்புக்கேற்ப தூண்டித் துருவி நுணுகி ஆராய்ந்து தகவல்கள், கட்டுரைகள், கார்ட்டூன்களை வெளியிட்டு அரசைப் "பிய்த்துப் பிடுங்கி'' விடுவர்.

மண்டைதீவு முகாம் 28. 06. 95–ல் தகர்த்து அழிக்கப்பட்ட போது நித்திரையில் இருக்கும் ரத்வத்தை வெடிகுண்டதிர்வால் தூக்கி எறியப்படுவதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று காட்டூன் வெளியிட்டது. அரசுக்குக் கெட்ட கோபம்வர தணிக்கைக்குழு கத்தரிக் கோலை எடுத்து விடும். பத்திரிகையாளர்களின் தேடல், ஊகம் விமரிசனம் எல்லாம் தணிக்கையாளரினால் உறிஞ்சப்பட்டு யானை உண்ட விளாங்கனியாகத் துண்டுந் துணுக்குமாகச் செய்திகள் வெளிவரும். இதைக் கண்டித்து கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தனது ஆசிரியர் தலையங்கப் பந்தியை முழுக் கறுப்பாக அச்சிட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவை செய்திகளை அன்றி செய்தியாளர்களையே "தணிக்கை'' செய்து விடும் நடவடிக்கையில் சிறீலங்காவின் ஆளுங்கட்சிகளும் இராணுவத் தலைமைப் பீடமும் இறங்கியிருப்பதுவும், அதுவே தொடர்கதையாக நீண்டு செல்வதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறன ஜனநாயகத்தைப், பத்திரிகைச் சுதந்திரத்தைப் "பேணிக் காக்கும் (!)'' நடவடிக்கைகளில் ஒருசில பதச்சோறுகள்.

1993 செப்டெம்பர் 26 கொழும்பில் இருந்து காங்கேசன்துறைக்கு ஆனையிறவினூடகச் செல்லும் யாழ்தேவி வராமல் நின்று 2 வருடங்களின் பின்னர் ஆனையிறவுத் தளத்தில் இருந்து கிளாலி நோக்கிப் புறப்பட்டது. "யாழ்தேவி'' புலோப்பளையில் புலி வீரர்கள் கொடுத்த பாரிய அடியால் இரண்டு ரி–55 தாங்கிகளையும், 125 படை வீரர்களையும் 2 மணி நேரத்தில் இழந்து 10,000 பேர் கொண்ட படையணி அல்லோலகல்லோலப்பட்டது. ஒரு பிரிகேட்டுக்கான கட்டளைத் தளபதி சாந்த கொட்டக்கொட காயமடைந்தார். ஒருவாறு கிளாலியை அடைந்த யாழ்தேவி 3



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நாட்களின் பின் திருப்பவும் ஆணையி றவு நோக்கி சொல்லாமல் கொள்ளா மல் ஓடிவிட்டது.

பத்திரிகையாளர்கள், இராணுவ ஆய்வாளர்கள் அப்போதைய இரா ணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா, ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்கா ஆகி யோரைச் சப்பித் துப்பினர். படங்கள் தரவுகளை வெளியிட்டு கண்டனங்களை அள்ளி வீசினர். பொறுமை இழந்து போன சிசில் ஒரு இராணுவ ஆய்வாள ருக்கு மலர் வளையம் அனுப்பி வைத் தார். இந்நடவடிக்கை பத்திரிகையாளர் மத்தியில் பாரிய உணர்வலைகளை திக் பிரமையை ஏற்படுத்தின. இது பச்சை ஆட்சியில் நடந்த கதை.

இவற்றையெல்லாம் கண்டு மக்களின் உரிமைகள் பறிபோவதைப் பொறுக்காத (!) சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னனியினர் (நீலக் கட் சியினர்) பத்திரிகைச் சுதந்திரத்தை மீட் போம், பாதுகாப்போம் என்று வாய் கிழியக் கத்திக் கூத்தாடினர். பத்திரிகை கள் அகமகிழ்ந்து, நீலந்தை வாழ்த்திப் போற்றிப் புகழ்ந்தன. சந்திரிகா மேல் மாகாண முதலமைச்சராக, பிரதமராக நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதி பதியாகத் தெரிவானார்.

பேச்சுவார்த்தை முறிவு இராணுவ நடவடிக்கைகள்... லீப் போர்வேட், ரிவிரச, சத்ஜெய, ஜெயசிக்குறு... சந்தி ரிகா தர்பார் தொடர்கிறது. ரிவிரச–2 நடவடிக்கையை ஆரம்பிக்கும் போது அரசு தணிக்கையினைக் கொண்டு வந் தது. பத்திரிகைச் சுதந்திரத்தினைக் காக்க உறுதியளித்த அரசு தணிக்கை யினைக் கொண்டுவந்தது. இதன் முத் தாய்ப்பாகக் கோட்டை ரயில் நிலை யத்தில் பத்திரிகையாளர்கள் தாக்கப் பட்டனர். கமராக்கள் பிடுங்கப்பட்டன.

தற்போது இடைநடுவில் அம்போ என நிற்கும் ஜெயசிக்குறு நடவடிக்கை யினைக் கண்டித்து எழுதித் தள்ளும் இராணுவ ஆய்வாளர்களைக் குறித்து இராணுவ அதிகாரிகள் ரத்வத்தையிடம் முறையிட்டபோது "கனக்கக் கதைப்ப வர்களை'' போர் முனைக்கு அனுப்பப் போவதாக ஜெனரல் அறிவித்தார். யுத் தத்தை நடாத்துவது இராணுவ ஆய் வாளர்கள் அல்ல என்றும் இடித் துரைத்தார். இது நீலநிற ஆட்சி.

ஆக ஒட்டுமொத்தத்தில் பச்சையோ நீலமோ ஸ்ரீலங்காவின் பத்திரிகையா ளர்களுக்கு இருண்ட உலகமே காத்தி ருக்கிறது. அதாவது ஜனநாயகம் கத்த ரிக்கோல் இடுக்கினுள்தான் உயிர்வாழ் கிறது. ★

# புலிகள் புகழ் புனைய வா!

இலக்கிய தாகத்தில்
தவிப்போரே
பெருந்தீனி ஈழத்தில்
உமக்காய் – வந்து
அள்ளிக்கொள்ளும்
திருடித் திண்டது போதும்!
வடக்கத்தி கற்பனை
நாயகரை நயம்பட
உரைத்தது போதும்!
தமிழா!
உனதென்றோர் புதிய
காவியம் நவின்றிட
நாளும் வந்தது.
கற்பனை நாயகன்
கர்ணனையும் விஞ்சிய
"மாவீரர்" நம் "கரும்புலிகள்"
தற்கொடை என்ற
திலகமிட்டார் – வீரத்திற்கு
இலக்கணம் சொல்லும்
வேங்கைகள் – ஈழத்தில்
ஈகங்களையெல்லாம்
விஞ்சி நின்றார் – அறிந்து
தமிழ் கவியே நீபாடு!
தமிழீழ போர்க்காவியம்
உலகத்தமிழரெம் காலத்தின்
வீரகாவியம்

கற்பனை நாயகர்
அரியணை காக்க
குதிரை ஏறினோம்...
காதல் கொண்டனராம்
கன்னியரை கொஞ்சினராம்...
வஞ்சியவள் இன்பஊற்றில்
வெஞ்சினம் தணிந்தனராம்...
வரம் தந்தனராம்... ச்சா!
எத்தனை காலம் தான்
பரணில் தூசு படிந்த
பழசை எழுதி எழுதி
திளைத்திருப்பாய் – போதும்!
வெஞ்சினம் கொண்ட
வீரவேங்கைகள்
காலத்தவன் நீ
முரசறைந்து போர்நடாத்தும்
மறவர் படையின்
நிதர்சனம் காணும்
பாக்கியம் உன்னது
பதிந்து கொள்;

உன் பெரும்பணியாய்
வரலாற்றிலிதை பதிந்துகொள்!
காவியம் தீட்டிய நீயும்
நினைப்பாய் தமிழ் வரலாற்றில்!

முறமெடுத்த குல
பெண்டிரையும்
முலையறுத்த வீரத்தாயவளையும்
நினைத்து திளைத்தனையே
போதும் –
தமிழ்க்கவியே!
குப்பியில் உயிரடைத்து
கொடும்பகையேறி
வரும் ஏ.கே.
தழுவிய எம்தமிழ்
நங்கையரை,
எட்டுத்திக்கும் முன்னுரைக்க
உன்புலமை
ஏடேறவேண்டும்.

வேங்கையின் மைந்தனும்
கடல்புறாவும்
மீள்பதிப்பில் உலா
வந்தது போதும்;
புதிய கரிகாலன்
புலிக்கொடி சுமந்து
களமாடும்
கடற்புலிகளதும்
கரும்புலிகளதும்
காவியம் – தினமும்
காலத்தின் பக்கங்களில்
பதிவாகின்ற சரித்திரம்
கண்ணெதிரில்!
தமிழ்க்கவியே
கற்பனையை விஞ்சிய
களநிலையை எழுத
நீ வரவேண்டும் – தரணியில்
ஓர் புதிய பரணி
சமைத்திட உன்புலமை
ஏடேறிட வேண்டும்
புறநானூற்றின்
புதிய பாகங்கள்
புலிகளின் நாட்டில்
போற்றிப்பாட வேண்டும்
ஏடுகளில் உங்கள்
எழுத்தாணிகள்
ஏறிவரட்டும்.

–வல்வை கித்துள்–



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# குறி

– அன்றாட் –

கிளிநொச்சி நரகலோகமாக மாறத் தொடங்கியது. கொடியவரின் தாண்டவம் தொடங்கிவிட்டது. கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், கடைகள், இல்லிடங்கள், அரச கட்டிடங்கள், பேரூந்து நிலையம், சந்தை, வைத்தியசாலை எல்லாமே பொலிவிழந்து தரை சாய்ந்தது. மாறி மாறி இடம் பெயர்ந்து களைத்த மக்கள் திரும்பவும் இடம்பெயர்ந்தனர். இதற்கு கிறிஸ்ரி குடும்பமும் விதிவிலக்கில்லை. கிறிஸ்ரிக்கு வீடு கட்ட இடம் கொடுத்த இலக்கிய நண்பன் பொடி நடையில் புறப்பட்டார். கிறிஸ்ரி தான் கட்டிய வீட்டில் சாமான்களை கொண்டு செல்வதற்கு ஆயத்தம் செய்தார். அந்த நேரம் கிறிஸ்ரியின் மனைவி அவரை உற்றுப் பார்த்தாள். கிறிஸ்ரி “என்னப்பா என்னையே பார்க்கிறாய் அவர்கள் எல்லாரும் போட்டினம்'' கிறிஸ்ரியின் மனைவி கூறினாள்.

“ஆண்டவரின் தூதர் சூசைக்கு கனவில் தோன்றி எழுந்து பிள்ளையையும் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்திற்கு ஓடிப்போம். நான் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையைத் தொலைக்க ஏரோது தேடப் போகிறான் என்றார். அவர் எழுந்து பிள்ளையையும் தாயையும் இரவிலேயே கூட்டிக்கொண்டு எகிப்துக்குச் சென்றார். ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்தார்.

என்ற ஆண்டவன் வாக்குப்படி நாங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்தம். இப்ப எங்க போறது?

கிறிஸ்ரி

“பாதுகாப்பான இடம் எங்கை இருக்கோ அங்க போய் இருக்கிறவயளோட சேர்ந்து இருக்க வேண்டியது தான். கொடூரரின் தாண்டவம் கூடும் நிலையை உணர்ந்த கிறிஸ்ரி மிகவும் விரைவாகப் பொருட்களை எடுத்து வெளியில் வைத்துவிட்டு தனது வீட்டுக்கதவைப் பூட்டினார். கதவில் உள்ள திறப்பை அவர் எடுக்க முன்பு அவருக்கு தனது பழைய வீட்டு ஞாபகமும் தாங்கள் பட்ட அவலமும் கண்முன் வந்தது.

வானம் புகைமண்டலம்.

ஷெல்லடியின் அகோரச் சத்தம் கொக்குவில் கலட்டியம்மன் கோவில் தெற்குப் பக்கமாக ஷெல் வந்து விழுகிறது. விமானக் கொடூர வல்லூறுகள் புகைமண்டலத்தூடே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. கட்டிடங்கள் தகரும் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஓலை வீடுகள் எரிந்து வானை நோக்கி கரியபுகை மண்டலத்தை மேலெழுப்புகின்றன. கிறிஸ்ரி வீட்டின் வாழையிலைகள் ஷெல் போகும் வேகத்தில் கிழிந்து கொண்டிருக்கிறது. ஷெல்கள் கூவிக்கொண்டு போகும் சத்தம் கேட்டு ஒழுங்கையால் செல்லும் சனங்கள் குப்புற விழுந்து படுத்து எழும்பிச் செல்கிறார்கள். குழந்தைகளின் ஓலமும் பெரியவர்களின் ஓலமும் வானத்தில் வட்டமிடும் விமானக் கொடூர வல்லூறுகளில் மிதக்கும் மனிதம் அற்ற மனிதர்களுக்கு நிச்சயம் கேட்டிருக்கும்.

இப்படி நினைத்த வண்ணம் கிறிஸ்ரி யாழ்ப்பாணத்தில் தனது வீட்டுக்கதவைப் பூட்டி வெளியில் வந்தார். இவ்வாறு யோசித்தபடி நிற்க. மனைவி,

“என்னப்பா கெதியாய் வாங்கோவன் போவம்'' என்ற குரல் அவரை தான் நின்ற இடத்துக்கு வரவைத்தது. அவர் வீட்டைப் பூட்டிய உடன் துவிச்சக்கர வண்டியின் கரியலில் சாமான்களை வைத்துக் கட்டினார். அதில் லாம்பும் ஒன்று தொங்கியது. கான்ரிலில் ஒரு சூட்கேஸ் பிள்ளையை மனைவி கையில் பிடித்தாள். மூவரும் புறப்பட்டனர். வளவை விட்டு வெளியே வந்து படலையைக் கட்டினார். கட்டும்போது அவர் மனைவிக்குக் கூறினார். “நாங்கள் கிளிநொச்சிப் பள்ளிக்கூடத்தில இருந்ததையும் இஞ்ச இவைகளோட காணியிலை வீடுகட்டியதையும் நினைக்க மனைவி “ஓமப்பா பள்ளிக்கூடத்தில இருக்கேக்க நீங்க காய்ச்சலாய் இருந்த நேரம் உங்களுக்குச் சன்னியெழுப்பி பினாத்தின மாதிரியையும் நான் பயப்பிட்டதையும் நினைக்க....''

“சரி சரி கதைச்சது காணும் வெளிக்கிடு'' என்றார் கிறிஸ்ரி. கதையும் நின்றது.

பேரூந்து தனது தரிப்பிடங்களில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்வது போல் இவர்களின் இடப்பெயர்வு நீண்ட பயணமாகத் தொடங்கியது. அவர்கள் இருந்த வீட்டின் நாய் மட்டும் வாசலில் நின்று அவர்கள் போகும் வழியைப் பார்த்து வாலை ஆட்டிக் கொண்டு நின்றது. அதன் பார்வையில் தன் உறவினர்கள் விட்டுச் செல்லுகின்றனரே என்ற ஏக்கம் வெளிப்பட்டது.

ஷெல்களின் சத்தத்தின் வேகமும் வல்லூறுகள் எச்சமிடும் எரிக்குழம்புகளின் எச்சமும் கிறிஸ்ரி குடும்பத்தை வேகமாக நடக்க வைத்தது. திருவையாறு முதலாம் பகுதித் தெருவால் பிரதான தெருவிற்குச் செல்வதற்காக வாய்க்கால் பாலத்தைக் கடந்து வாய்க்கால் கரையை அண்மித்த வேளை கோவிந்தன் கடைச் சந்தியில் ஷெல் விழுந்தது. கிறிஸ்ரியின் மனைவி “மடு மாதாவே சனங்கள் முன்னுக்குப் போனதுகள் என்ன பாடோ'' என்று கத்தியபடி பிள்ளையுடன் தொப்பென்று விழுந்து படுத்தாள். கிறிஸ்ரி ஒருபுறம் மனைவி ஒருபுறமாக படுத்தவர்கள் எழும்பி எறிந்த பொதிகளை திரும்ப எடுத்தனர். பாலத்தைக் கடந்து பிரதான தெருவால் நடக்கத் தொடங்கினர்.

வட்டக்கச்சி நோக்கி நகரத் தொடங்கிய கிறிஸ்ரியின் மனதினில் எண்ணம் தோன்றியது. வெள்ளாமை நிலத்தில் நத்தை கொத்திகள் இருப்பது போன்று அந்த நச்சுப்பாம்பு மனிதர்கள் இருப்பார்களா? “என்ன யோசித்துக் கொண்டு நடக்கிறியள். சுறுக்காப் போங்கோவன் அவங்கள் திரும்பவும் அடிப்பாங்கள்'' இப்படி மனைவியின் குரல் அவரின் சிந்தனையைக் கலைத்தது. பாதையோரங்களில் மாடுகள் புல்மேய்ந்தன. கொக்குகள் கூட்டம் கூட்டமாக இடம் மாறி மாறி இரைதேடின. ஆட்காட்டிப் பறவைகள் கீச் கீச் என்று கத்தியபடி பறந்து சென்றன. அந்த நச்சுப் பாம்புகளின் நஞ்சு வந்து வீழ்ந்தால் இந்தச் சீவன்களின் உயிர்கள்போகும் என்பதை இவை அறிய மாட்டா.

கிறிஸ்ரியின் மனதுக்குள் நினைத்தபடி தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

ஷெல் கூவிவரும் ஓசை கேட்டு பொருட்களையும் துவிச்சக்கர வண்டியையும் அப்படியே கைவிட்டு பிள்ளையையும் மனைவியையும் கட்டிப்பிடித்துக் கொண்டு நிலத்தில் விழுந்து படுத்தார். சில உயிர்களின் உடல்கள் கிழிநது போயிருந்தன. அவர் முகத்தில் ஷெல் அடித்தவனை கடித்துக் குதறவேண்டும் போலிருந்தது. அப்படியே மலைத்துப் போயிருந்தார். மாடுகளும் பறவைகளும் மூளை சிதறிப் பிரண்டு கிடப்பதைக் கண்டு அடிபாவம் இதுகள் என்ன செய்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ததுகள். இதுகளும் தமிழர்களை? என வேதனைகளின் வெளிப்பாடாய் குரல் தளதளக்கக் கூறினார். அவருக்கு முன்பு தான் நேரில் கண்ட காட்சி முலவைச் சந்தியில் மாதா கருப்பத்திற்கு அருகில் மண்டபத்திலிருந்து அடித்த ஷெல் விழுந்து இறந்தவர்களின் மூளை சுவரில் அப்பிக்கிடந்த காட்சி ஞாபகம் வந்தது.

கிறிஸ்ரியின் மனைவி,

"வாங்கோ கெதியாய்ப் போவம்'' என்றும் அவரை அதட்டிக் கூட்டிக் கொண்டு திரும்பவும் அவர்கள் பயணம் தொடங்கியது. அப்பாடா இனிப்பய மில்லை'' என்ற மனைவியை கிறிஸ்ரி திரும்பிப் பார்த்தார். மனைவியின் போன உயிர் திரும்பி வந்த மாதிரி இருந்தது. "பிள்ளைக்கு நல்ல பசி சந்தைக்குப் பக் கத்திலை தேத்தண்ணிக்கடை திறந்தி ருக்குது. ஏதும் வாங்கி வாவன்'' என் றார் கிறிஸ்ரி. வீட்டில் நின்ற கோலத் தோடு புறப்பட்டவள் இப்பவும் அதைப் பற்றி யோசிக்கவில்லை. கடையில் சாப் பாடு வேண்டிவருவதைப் பார்த்த கிறிஸ் ரியின் கண்கள் குளமாயின. வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால் அடுக்களைக்குள் நின்ற சீலையை மாற்றி வேறு சீலை கட்டியபின்தான் அவர்கள் முன் வரு வாள். இப்ப'' என்று எண்ணியபடி பெரு மூச்சு விட்டார். நல்ல மரநிழல் பார்த்து குந்துவம் என்று யோசித்தபடி பயணம் தொடங்கியது.

வேம்பு மரநிழல் கிடைத்தது. துவிச் சக்கர வண்டியை மரநிழலில் சாத்திய கிறிஸ்ரி பிள்ளையின் களைப்பை உணர்ந் தவனாய் பிள்ளையை அணைத்துக் கொண்டார். கிறிஸ்ரியின் மனைவி சுடு தண்ணீர் எடுக்க பக்கத்திலுள்ள கிணற் றடிக்குச் சென்றாள். சாப்பாட்டுப் பாச லைத் துவிச்சக்கர வண்டியில் வைத்து விட்டு அமர்ந்தார். மரத்தின் உச்சியில் இருந்து குரங்கு பாசலைக் கண்டதும் கிறு கிறுவென்று கீழிறங்கி பாசலை எடுக்க முனைந்தது. தண்ணீருடன் வந்த வள் கல்லெடுத்துக் குரங்குக்கு எறிந்தாள். இருந்த இடத்தைவிட்டு விலகாமல் உடம்பை மட்டும் சரித்துவிட்டு நிமிர்ந் தது. பாசலில் வைத்த குறி தப்பாமல் எடுக்க முயன்றது. கல்லெறிந்த சம்பவத் தைப் பார்த்த கிறிஸ்ரி குரங்கைப் பார்த் துக் கூறினான். "நீ தடுத்து வைச்சனி நிம்மதியாய் உன்ர கூட்டத்தோட இருக்கி றாய் நாங்கள் தெருவிலை இருக்கிறம். நீ பாசலை வைச்ச குறி தவறவில்லை. எங்களிலை பலர் வைச்ச குறி மறந்து போய்நிக்கிறம்'' கிறிஸ்ரி சொல்லி முடிக்க கொடூர வல்லூறு வானத்தில் நெருப் பைக் கக்கியது. சற்றுத் தள்ளித்தான் விழுந்ததும் கிறிஸ்ரியின் மனைவியும் பிள்ளையும் விழுந்து படுத்தனர். கக்கிய நெருப்பின் ஓசையால எட்டாம் கொப்பு வந்தாங்கிளை என்று தாவி மரத்தின் நடுப்பகுதியைச் சென்றடைந்து விட்டது குரங்கு.

பின்னர் சாப்பாட்டை நோக்கி திரும் பவும் வந்தது. அது தன் குறியை விட வில்லை. கிறிஸ்ரி குரங்கைக் கலைத்தார். அது மேற்கொப்புக்குத் தாவியது. அவர் துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு மீண்டும் பயணம் தொடங் கிய வேளை குரங்கு சத்தமிட்டது. திரும் பிப் பார்த்தார். அது பல்லை இளித்துக் காட்டியது. ★

## பொருளாதார நெருக்கடியினால் நிலத்தை விற்கும் சந்திரிகா அரசு

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையி லான பொதுஜன ஐக்கிய முன்ன ணியில் நான்காவது வரவு - செல வுத்திட்டம் அண்மையில் சமர்ப்பிக் கப்பட்டது. இந்த அரசாங்கம் சமர்ப்பித்த நான்கு வரவு - செலவுத்திட்டங்களில் மூன்றில் பாது காப்புச் செலவினம் 4400 கோடி ரூபாவிலும் அதிகமாகவே ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவை எல்லாவற்றிலுமே பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் திட்டமிடப்படவில்லை. அத்துடன் வரவு - செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சிறிய அபிவிருத்தித் திட்டங்கள்கூட செயற்படுத்தப்படவில்லை.

அரசின் புதிய வரவு - செலவுத்திட்டத்தில் இருபது வீதம் பாது காப்புச் செலவீனமாக ஒதுக்கப்பட்ட நிலையில், அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களையும் அமுல்படுத்த ஐந்து ஆண்டுகள் போதாது என எதிர்க்கட்சி கூறுகின்றது. அரசாங்கத் தின் வரவு - செலவுத்திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டம் எனவும் அது வர்ணித்துள்ளது.

இந்த நிலையில், பெருகிவரும் யுத்தச் செலவை ஈடுகட்டவும் வரவு - செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்ய வும், அரசாங்கம் எதிர்பார்த்த வருமானத்திலேயே பெருமளவு இழப் புக்களை ஈடுசெய்யவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் திணறிக்கொண்டிருக்கிறது.

இதற்காக அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளையும், உல்லாசப் பயணத்துறையையும் வெளிநாட்டு அரசாங்கங்களின் நிதி உதவியை யுமே எதிர்பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. இவற்றில் வெளிநாட்டு முதலீடுகளும் உல்லாசப் பயணத்துறையும் கொழும்பில் அடிக்கடி வெடிக்கும் குண்டுகளினாலும், யுத்த சூழ்நிலையாலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. சிறீலங்காவின் அரசியல் உயர் மட்டம் இவற்றை ஊக்குவிப்பதற்காக நாடுநாடாகத் தாமே சென்று பிரச்சாரங்களை மேற்கொள்கின்றபோதும் தலைநகரின் பாதுகாப்பற்ற தன்மை இவர்களின் முயற்சிக்கு பெரும் தடைக்கல் லாகவே இருந்துவருகிறது.

இந்த நிலையில், வெளிநாட்டு முதலீட்டார்களுக்கு மேலும் அதிக சலுகைகளையும், வரி விலக் குகளையும் அதிகரிக்க வேண்டிய தேவை சந்திரிகா அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இதனை சந்திரிகா அரசாங்கத்தின் புதிய வரவு - செல வுத்திட்டம் வெளிக்காட்டி நிற்கிறது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் சாதாரண பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய விதத்தில் எதுவித அறிவிப்புக்களும் இல்லை என்பதை அரசாங்கக்கட்சி உறுப்பினர்களே ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. வரவு - செலவுத்திட்டத்தின் மீது நடந்த விவாதம் ஒன்றில் அரச தரப்பு உறுப்பினர் ஒருவர் 'மாவின் மானி யத்தை வெட்டியதால் பொது மக்கள் கசப்பு மருந்தை உட்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகியது உண்மைதான். ஆனால் இத னால் விவசாயிகள் தமது உற்பத்திக்கு அதிக விலையைப் பெறு கின்றார்களே' என பெருமிதம் கொள்கிறார்.

யுத்தத்திற்கு இவ்வளவு பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுவ தாலேயே அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவோ அல்லது வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கவோ முடியாத நிலை உள்ளதாக அரசாங்கத்தரப்பு கூறுகிறது. யுத்தத்தை நிறுத்தி அதற்கு ஒதுக்கப் பட்ட நிதியை அபிவிருத்திக்குச் செலவிடப்போவதாகக் கூறி பத விக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியினர் இன்று யுத்தச் செலவை இருமடங்காக அதிகரித்ததுடன் அபிவிருத்தி ஏற்படா மைக்கு யுத்தச் செலவீட்டைக் காரணமாகக் கூறுவது மக்களின் ஞாபக சக்தியைப் பரிசோதிக்கும் முயற்சிதான்.

ஆனால் இதேவேளை, கட்டுப்பாடின்றிச் செல்லும் செலவீ னத்தை சமாளிக்க ஏக்கர் கணக்கில் நிலங்களை வெளிநாட்டு நிறு வனங்களுக்கு விற்கும் நடவடிக்கையில் பொதுஜன ஐக்கிய முன்ன ணியினர் ஈடுபட்டுள்ளனர்.

இதன் ஓர் அம்சமாக பெறுமதி வாய்ந்த கனிய வளமான எப்பாவல பொஸ்பேட் பாறையுள்ள நிலங்களை அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு விற்க அரசாங்கம் முன்வந்துள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய துறைமுக மற்றும் விடுதி வசதிக்காக திருகோண மலையில் 750 ஏக்கர் நிலத்தை விற்கவும் அரசாங்கம் முன் வந் துள்ளதைக் குறிப்பிடலாம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே தமிழர்கள் ஓரம் கட்டப்பட்டனர்

இலங்கையின் கரையோரங்களை 1796–ம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்ட பிரித்தானியர் 1815—ம் ஆண்டு மலையகப்பகுதியை பிடித்ததோடு தீவு முழுவதையும் தம்வசப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட இவர்களுக்கு பொருளாதாரச் சுரண்டலுக்கு ஓர் அரசியல் கட்டமைப்புத் தேவைப்பட்டது. அதன் முதல் பரிமாணமாக 1833–ம் ஆண்டு கோல்புறூக் யாப்பு விளங்கியது. இதன்படி பிரித்தானியர் தமிழர்களை யாப்பியல் ரீதியாக ஓரங்கட்டியே வந்தனர். ஆனால் ஆரம்பத்தில் ஆதரித்தனர்.

இதில் இன்னோர் விடயத்தையும் அவதானிக்க வேண்டும். பிரித்தானியர் ஏனைய தமது காலனித்துவ நாடுகளில் சிறுபான்மையினரை ஆதரித்து பெரும்பான்மையினரைத் தோற்கடித்து தமது பிரித்தாளும் தந்திரத்தில் வெற்றி கொண்டனர். உதாரணமாக இந்தியாவில் பௌத்தரை மையமாகக் கொண்ட பர்மாவையும் முஸ்லீம்களையும் மையமாகக் கொண்ட பாகிஸ்தானையும் ஏற்படுத்தினர். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் இது மாறுபாடாய் அமைந்திருந்தது. ஏனெனில் இலங்கையின் அரசியல் சூழ்நிலை பிரித்தானியாவின் ஏனைய காலனித்துவ நாடுகளைப் போல் அமைந்திருக்கவில்லை. காரணம் தமிழர்களின் அரசியல் ரீதியான எழுச்சியும் அவர்கள் அண்டை நாடான இந்தியாவோடு இணைந்து தமக்கெதிராக ஓர் பெரும் புரட்சியை உண்டுபண்ணி அது தென்னாசியா முழுவதும் பரந்துவிடுமோ என பயந்ததன் விளைவாக இருக்கலாம். இதற்காகத்தான் 1920–ம் ஆண்டின் பின்பு தமிழர்கள் பிரதிநிதித்துவ ரீதியாக ஓரம் கட்டப்பட்டு சிங்களவர் அரவணைக்கப்பட்டும் வந்தனர்.

பிரதிநிதித்துவ ரீதியாக இனவாரியில் தமிழர்களும் சிங்களவர்களும் சமத்துவமாகவே கணிக்கப்பட்டனர். இனவாரி பிரதிநிதித்துவத்தில் சொத்து கல்வி அடிப்படையிலேயே வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்த அடிப்படையில் விகிதாசார ரீதியில் தமிழர்கட்கே கூடுதலாக வாக்குப்பலம் கிடைத்தது. 1912–ல் படித்த இலங்கையர்க்கான பிரதிநிதித்துவம் என்பதில் சேர் பொன் இராமநாதனே தெரிவு செய்யப்பட்டார். இவரது வெற்றிக்கு இரண்டு காரணங்களை அடையாளம் காணலாம்.

1) அப்போது தமிழர்கள் வாக்குரிமை அடிப்படையிலும் பொதுச் சேவைப் பகுதியிலும் உயர்வான இடத்தில் இருந்துள்ளனர்.

2) இராமநாதனை எதிர்த்துப் போட்டியிட்டவர் மார்க்கஸ் பெர்ணாண்டோ எனும் கரையோரச் சிங்களவர்; அத்துடன் கிறிஸ்தவரும்கூட. அன்று இலங்கையில் ஆதிக்கம் செலுத்தியது சாதி அமைப்பு. பெர்ணாண்டோ ஒரு கரைநாட்டுச் சிங்களவராதலால் கண்டிச் சிங்களவரால் நிராகரிக்கப்பட்டார்.

இராமநாதன் உயர் இந்து வேளாளர் குடியினராயினும் இவர் பௌத்தருக்கு சார்பான பல கருத்துக்களை கொண்டிருக்கத் தவறவில்லை. இவை எல்லாம் இணைந்தே இவரின் வெற்றிக்கு காரணமானது. 1912–ல் ஆறு இலட்சம் (600000) தமிழர்களின் கல்வித் தகைமை அடிப்படையில் வாக்குரிமை பெற்றவர்கள் 1346 பேர். சமகாலத்தில் இதே அடிப்படையில் இருபத்தெட்டு இலட்சம் (28 00000) சிங்களவர்களில் 1748 பேரே வாக்கு பெற்றிருந்தனர். இவை எல்லாம் அன்று தமிழர்களின் அந்தஸ்த்து எவ்வாறு இருந்தது என்பதை காட்டுகின்றது.

இவ்வாறாக நிலைமைகள் இருந்த வந்தபோதும் 1915–ம் ஆண்டு சிங்கள முஸ்லிம் கலவரத்தை அடுத்து 1919–ல் சேர் பொன் அருணாசலம் தலைமையில் இலங்கைத் தேசியக் காங்கிரஸ் வேறுபாடுகட்கு அப்பால் அமைக்கப்பட்டமை இலங்கைத் தேசிய வாதத்தின் முக்கிய ஒரு கட்டமாக கருதப்பட்டது. இக்காலத்தில் இலங்கையில் சேனாதிபதியாக இருந்தவர் வில்லியம் மனிங் என்பவராவர். பிரித்தானியர் பிரித்தாளும் தந்திரத்தில் வல்லவர்கள். இதில் மனிங் பிரபு பிரித்தாளும் தந்திரத்தில் முடிமணியாகத் திகழ்ந்தார். இலங்கையர்களின் ஒருமைப்பாடு பிரித்தானியருக்கு பல முறைகளிலும் அச்சுறுத்தியது. இப்போதுதான் இனங்களைப் பிரிக்கவேண்டிய அவசியம் பிரித்தானியருக்கு ஏற்பட்டது. கண்டிய சிங்களவர், கரையோச் சிங்களவர், இலங்கைத் தமிழர் என மனிங் தயவு தாட்சண்யம் இன்றி உடைத்தெறிந்தார். இதில் நிரந்தரமாகப் பழிவாங்கப்பட்டவர்கள் தமிழர்கள். இவ்வாறு தமிழர்கள் பழிவாங்கப்பட்டதற்குத்தான் முன்கூறிய காரணங்களுடன் 1919–ல் அருணாசலம் தலைமையிலான அகில இலங்கைத் தேசிய காங்கிரஸ் உதயம், 1920–களில் யாழ் வாலிப சங்கத்தால் உருவாக்கப்பட்ட வாலிபர் சங்கம் என்பனவும் காரணமாயின.

நடா. கருணாகரன்

தமிழர்களை இன்னும் சிறுமைப்படுத்தும் . சின்னமாக 1931–ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொனமூர் திட்டம் இருந்தது. இது கடந்தகால சம்பவங்களுடன் 1927–களில் இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர்களின் இலங்கை விஜயமும், யாழ் வாலிபர் சங்கத்துடனான நெருக்கமான உறவும் பிரித்தானிய அதிகாரிகட்கு இன்னும் சந்தேகத்தைக் கூட்ட அவர்கள் தமிழர்களை அரசியலில் இன்னும் ஓரம்கட்டவே செய்தனர்.

இதற்குப் பதிலாக சிங்களவர்களை இன்னுமாக அரவணைத்துக் கொண்டனர். இதன் பிரகாரம்தான் சர்வஜன வாக்குரிமையும் பிரதேசவாரி பிரதிநிதித்துவமும். சர்வஜன வாக்குரிமை நல்லதோர் அம்சம்தான். அது வழங்கப்பட்ட கட்டம் தான் தமிழர்கட்கு சாபக்கேடானது. இதற்கு ஒரு உதாரணம், அமெரிக்க சுதந்திரப் போராட்ட காலத்தில் வட அமெரிக்க குடியரசுகளில் இருந்து தென்அமெரிக்க அரசுகள் பிரிந்து செல்ல முற்பட்டபோது அதனை தடுக்கமுடியாது திண்டாடிய அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், தென்னமெரிக்க குடியரசுகளின் பண்ணைகளில் அடிமையாக வேலை செய்த நீக்கிரோக்கட்கு விடுதலை அளித்தல் மூலம் தென்னமெரிக்க குடியரசுகளின் பிரிவினையை முடிவுக்குக் கொண்டுவந்தார். ஆனால் லிங்கன் கறுப்பருக்கு விடுதலை அளித்த பெரு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மைக்குரியவராக வரலாற்றிலே போற்றப்படுகின்றார். டொனமூர் பிரபுவும் எங்களை சிங்களவர்கட்கு அடமானம் வைத்துவிட்டு இலங்கையர்கட்கு சர்வ ஜன வாக்குரிமை வழங்கியவர் எனும் வரலாற்றுப் பெருமையைத் தட்டிக் கொண்டார். மேலும் இந்தியா தொடர்பான அச்சுறுத்தலும் பிரித்தானியரால் அவ்வப்போது உணரப்பட்டது. சேர் ஐவர் ஜென்னிங்கின் கருத்தானது – இந்தியாவை விட இலங்கையின் வாழ்க்கைத் தரமும் எழுத்தறிவும் உயர்வானது. இந்தியர்கள் இலங்கையில் குடியேற்றத்தடைகள் எதுவும் இல்லாவிட்டால் கடும் உழைப்பாளிகளான இலங்கைத் தமிழர்களாலும் இந்திய வணிகர்களாலும் சிங்களவர்கள் மூழ்கடிக்கப்பட்டு விடுவார்கள்.

இவ்வாறான எண்ணப்பாடுகள் பிரித்தானியர் மட்டுமல்ல சிங்களவரும் தமிழர் மீது கொண்ட சந்தேகத்தை உறுதிப் படுத்துவதாயிற்று.

டொனமூர் திட்டத்தை இராமநாதன் எதிர்த்து லண்டன் வரை சென்று வந்தார். யாழ் வாலிபர் சங்கம் இத்திட்டத்தின் கீழான அரசாங்க சபை தேர்தலை பகிஸ்கரித்தது. இதனால் சட்டசபையிலும் தமிழர் புறக்கணிக்கப்பட்டதால் 1936–ல் தனிச்சிங்கள மந்திரி சபை அமைய காரணமாகியது. 1947–ல் சோல்பரி யாப்புக்கூட சிங்களவரை மையமாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது. காரணம் இது 1943–ம் ஆண்டு சிங்கள மசோதாவை மையமாகக் கொண்டதாகவும் இதில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட காப்பீடு ஒரு வரலாற்று ஏடு மட்டுமே. ஏனென்றால் 1949–ல் நிறைவேற்றப்பட்ட இந்திய – பாகிஸ்தானிய சட்டமும் 1956–ல் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களவர் சட்டமும் நிறைவேற்றப்பட்டபோது காப்பீடு என்ன செய்தது? ஆகவே தமிழர்களை ஓரங்கட்டிய பிரித்தானியரின் தொடர்ச்சியை சிங்கள தலைவர்களும் தொடரலாயினர். 1833–1947 வரையான பிரதிநித்துவம் பின்வருமாறு அமைந்திருந்ததை ஒருகணம் நோக்குவோம்.

இவ்வாறாக அன்று காலனித்துவவாதிகளால் சுயலாபத்திற்காக ஓரம் கட்டப்பட்ட தமிழர்கள் தொடர்ந்து அதிகாரத்தை கைமாற்றிக் கொண்ட பூர்சுவாக்கத்தில் வளர்ந்த சிங்கள ஆளும் வர்க்கத்தால் நிரந்தரமாகவே முழுமையாக ஓரங்கட்டப்பட்டுவிட்டனர். இதற்காக தமது நலன்களையும் அந்தஸ்தையும் பேணிக்காத்துக் கொள்ள 1972–லும் 1978–லும் இரண்டு யாப்புப் புத்தகங்களை மாறி மாறி வரைந்துகொண்டனர். இந்நிலையில் அன்று இழக்கப்பட்ட எமது சம உரிமையைப்பெற இன்று போராடுவது தவிர்க்க முடியாத வரலாற்று உண்மையாகும்.

நன்றி 'சுதந்திரப் பறவைகள்'

# புலிகளுடன் பேசக்கிடைத்த சந்தர்ப்பம் அரசால் வீணாக்கப்பட்டுவிட்டது!

**ஆளும் கட்சி எம்.பி அழகப்பெரும சாடல்**

“அரசாங்கம் கூடுதல் ஆதரவை தமிழ் கட்சிகளுக்கு வழங்குவதன் மூலம் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவது என்பது சாத்தியப்படாததாகும்” இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான டி. அழகப்பெரும கூறியுள்ளார்.

மாத்தறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் அங்கத்தவர்கள் ஏற்பாடு செய்திருந்த தேசிய சமாதான சபைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

தமது அபிலாசைகளை நிறைவேற்ற போதிய நடவடிக்கைகளை அரசாங்கங்கள் எடுக்காது என தமிழ் மக்கள் நினைக்கின்றனர். பல அரசாங்கங்களிலும் அங்கம் வகித்த தமிழ் கட்சிகள் அவர்களின் கைப்பொம்மைகளாக செயற்பட்டு வந்தனரே அன்றி, அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படவில்லை. அவர்களில் அநேகர் தமிழ் மக்களுக்கு சரியான வழி அமைத்துக் கொடுக்கவில்லை. ஆனால், தாம் விரும்பும் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டிருந்தனர். அரசாங்கங்கள், நாட்டிற்கும் முழு உலகிற்கும் தமிழர்கள் அரசாங்கத்தில் பங்குபற்றுகிறார்கள் எனக் காட்டிவந்தன. ஆனால் இது உண்மையான நிலையாக எப்போதும் இருந்ததில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேசக்கிடைத்த சந்தர்ப்பத்தை அரசாங்கம் வீணாக்கிவிட்டது. அதாவது, அரசியல் ரீதியான பேரம் பேசுதலில் போதிய பரிச்சயம் இல்லாதவர்களை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அனுப்பியதன் மூலம் அரசாங்கம் உரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டது.

தென்னாபிரிக்காவில் வன்முறைகள் பல இடம் பெற்றபோதும் இரண்டு பிரதான கட்சிகளும் பேச்சுவார்த்தைகளைக் கைவிடவில்லை. பல குண்டுகளும் வன்முறைகளும் அங்கு வெடித்த போதும் இரு கட்சிகளும் தொடர்ந்து பேசின.

புதிதாக பிரிட்டனில் தெரிவு செய்யப்பட்ட டொனிப் பிளேயரின் அரசாங்கம் வட அயர்லாந்துப் போராட்டக் குழுவுடன் புதிய அணுகுமுறைகளைக் கையாண்டமையால் சமாதான முயற்சிகளில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த முடிந்தது. புதிய பிரிட்டிஷ் அரசாங்கம் புதிய கண்ணோட்டத்தில் அப்பிரச்சினையை அணுகியதுடன், முதலில் ஆயுதங்கள் கீழே வைக்கப்பட்ட பின்னர்தான் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற கொள்கையை தவிர்த்திருந்தது. எனவே, இந்த உதாரணங்கள் மூலம் புதிய அணுகுமுறை ஒன்றைக் கையாண்டால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது சாத்தியமாகும் எனவும் தெரிவித்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கலாபிற்று.

வின்சர் சந்தியில் இறங்க வேண்டி யிருந்தது. இவன் ஒன்று என எண்ணிக் கொண்டான். சோதனைச் சாவடியில் அடையாள அட்டையைக் காட்டிவிட்டு, சற்றுத் தள்ளிப் போய் மற்றவர்களுடன் நின்றுகொண்டான். பஸ் வந்து எல்லோ ரையும் ஏற்றிப் புறப்படுகையில், கையைக் காட்டியபடி பெண்ணொருத்தி – அறு பது வயதிருக்கும் – அவசரமாக ஓடி வந்தாள். பருத்த உடலைத் தூக்கி அவள் ஓடி வருவது சுவாரஸ்யமாய்ப்பட்டது இவனுக்கு. யாரையோ திட்டியபடி ஏறிக் கொண்டாள்.

இவனுக்கருகே கைக்குழந்தையுடன் இருந்தவளைக் கண்டுவிட்டு, அவளருகே வந்து 'எடி கலாப் பெட்டை' என்றாள். அவள் சிரித்தபடி அழைத்து, இவனுக் கும் தனக்குமிடையில் அமர்த்தினாள். நேற்றுக் காலையில் வந்து சுவிஸில் இருக்கும் தனது மகனுடன் ரெலிபோன் கதைக்கப் பதிவு செய்துவிட்டு இரவெல் லாம் விழித்திருந்து காத்திருந்ததையும், 'கோல்' கிடைக்காததையும் அப்பெண்

# ஒரு முட்டக்கண் நண்ட

நிலம் வெளுக்கவும் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட் டான். வாசலில் அம்மா 'முழுவியளம்' பார்த்து வழியனுப்பினாள். யாழ்ப்பாண நகரம் ஏழு மைல் தொலைவிலுள்ளது. எதிர்க்காற்றை வலித்துச் செல்ல வேண் டும். அங்கிருந்து முதல் பஸ்ஸில் போனால்தான் பருத்தித்துறையில் இருந்து அன்றைக்கே திரும்பமுடியும்.

வீட்டிலிருந்து பிரதான வீதிக்கு ஏறும் பாதை மூடப்பட்டுவிட்டதால், வீடுகளுக் கிடையே ஏற்படுத்திய புதிய ஒற்றையடிப் பாதையாலேயே பயணங்கள். கிளி அண்ணையின் வீட்டின் கேற்றைத் திறந்துகொண்டு இவன் போகும் போது தூக்கக் கலக்கத்துடன் படியில் அமர்ந் திருந்த அவரது மகள் பெயர் சொல்லி அழைத்தான். இவள் திரும்பிச் சிரித்து விட்டுச் சென்றாள்.

பிரதான வீதியில் ஏறி, தடையணை அருகே வந்தபோது வரிசையில் நிறையப் பேர் காத்திருந்தனர். மரக்கறிச் சுமையும், வாழைக்குலைகளுமாக விவசாயிகள் தான் அதிகம்.

ஏழு மணிக்குப் பாதை திறக்கப்பட் டது. சைக்கிளை வேகமாக மிதித்தான். வீதியில் மெல்ல மெல்ல ஆட்கள் தலை காட்டத் தொடங்கியிருந்தனர். இரா ணுவ ரோந்து அணியொன்று இரு கரை களாலும் சீரான இடைவெளியில் சென்று கொண்டிருந்தது. இடையில் எதிர்ப்பட்ட முகாம்களில் இறங்கி, சைக் கிளை உருட்டியபடி போய்ப் பின் ஏறிச் சென்றான்.

நகரத்து நுழைவாயிலில் தடையரணி லும் நிறையக் கூட்டமிருந்தது. அரச ஊழியர் வரிசையிற் சென்றதால் விரை வாகவே சோதனையிடப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டான். உள்ளேயும் பல இடங்களில் இறங்கி ஏறிச் செல்ல வேண் டியிருந்தது. பாதுகாப்பு நிலையமொன் றில் சைக்கிளை விட்டுவிட்டு, பஸ் நிலை யத்திற்கு வந்த போது, பஸ்ஸைத் தவற விட்டிருந்தது தெரிந்தது. இரண்டு மணி நேரங்கழித்தே அடுத்த பஸ். காலை உணவை முடிப்பதற்காக இவன் கடை யொன்றுக்குள் நுழைந்தான்.

திரும்பி வந்தபோது மினிபஸ் ஒன்று நின்றது. எட்டரைக்குப் புறப்படுமென் றார்கள். இவனைப் போல 'அரச பேருந் தைப் பார்த்துவிட்டு வந்த பலரும் ஏறிக் கொண்டனர்'. பஸ் புறப்பட எட்டே முக் புலம்பித் தீர்த்தாள். அடிக்கடி 'கோதாரி விழுவான்கள்' எனத் திட்டினாள்.

அடுத்த சென்றியில் இறங்கினார்கள். அறுபது வயதுக்காரி திட்டியபடி இறங் காமலே இருந்தாள். இவன் இரண்டு என எண்ணிக் கொண்டான். சோதனை முடிந்து அப்பால் போய் நின்றபோது 'கொண்டக்டர்' ஓடி வந்தான்.

"ஆற்றையப்பா அந்த உரப்பை?"

ஒருவர் தன்னுடையதுதானென்றார்.

"ஓடப்பா கெதியா... ஆமிக்காரன் கேட்கிறான், கழட்டிக் காட்டு"

மீண்டும் அனைவரும் ஏறிக்கொள்ள பஸ் புறப்பட்டது. கல்வியங்காட்டில் எல் லோரும் இறங்க வேண்டும் என்று ட்றைவர் நச்சரித்தான். அறுபது அவனை ஏசியபடி இறங்கினாள். உரப்பைக்காரன் இம்முறை பையைச் சுமந்து கொண்டு வந்தான். பஸ் புறப்படும்போது, இரண்டு இராணுவத்தினர் ஏறி, புட்போட்டில் நின்று கொண்டனர். இவனருகே இருந் தவளின் பிள்ளை அவர்களைப் பார்த்து வீறிட்டு அலறியது. அறுபது அவளிடம் இருந்து குழந்தையை வாங்கிப் பலத்து 'ஆராரோ' சொன்னாள். அது மேலும் அலறியது. மீண்டும் குழந்தையை அவ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ளிடம் போனது. இப்போது முதல் முறையாக அவள் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அடுத்த சென்றியில் இராணுவத்தினர் இறங்கிக் கொண்டனர். பெண் ஒருத்தி கையில் ஒரு குழந்தையுடன் ஏறினாள். மறுகையில் ஒரு பையொன்றையும் வைத்திருந்து ஏறமுடியாமல் தத்தளித்து, தூக்கித் தருமாறு குரல் கொடுத்தாள். ஒருவன் பையைத் தூக்கி உதவினான். பின்னால் ஐந்து பிள்ளைகளும் ஏறிக்கொண்டனர். மூத்த பையன் – ஒன்பது வயதிருக்கும், ஒரு பெண் பிள்ளையைத் தூக்கி வைத்திருந்தான். ஓரிருவயது இடைவெளிகளில் பிறந்த பிள்ளைகளாயிருக்க வேண்டும்.

இடமில்லாமல் தவித்தாள் அப்பெண். இவன் எழுந்த போது, 'நீங்கள் இருங்கோ அவ இருந்திட்டா' என்றாள் இளம்பெண். பிள்ளைகளைக் கூப்பிட்டு, பைகளையும் வைத்து அந்த இடம் முழுவதையும் அடைத்திருந்தாள் அப் பெண். பக்கத்தில் இருந்தவர் சினந்து, ஏதோ சொல்லி ஏசினார். அவளும் பதிலுக்கு ஏதோ சொல்லிச் சமாளித்தாள். கொண்டக்டர் காசு வாங்கினார்.

"என்ன அநியாயம் – சீ.ரி.பி.யிலை போயிருக்கலாம்'' என்றாள் பெண்.

'போயிருக்கலாம்தான்' என்றுவிட்டு, தாள்க்காசை வாங்கி விரல்களுக்கிடையே புதைத்துக்கொண்டான்.

புத்தூர் கழிந்து இறங்கி ஏறியபோது, இவளது சீற்றை வேறொரு பெண் ஆக்கிரமித்திருந்தாள். இவனைப் பார்த்துவிட்டு, தெரியாததுபோல வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். இளம்பெண் இவனை நோக்கி பரிதாபந்தொனிக்க முறுவலித்தாள்.

வாகனம் பெரும்பாலும் நிறைந்துவிட்டது. இந்த நெரிசலுக்கிடையேயும் ஏழெட்டுப்பேர் ஏற்றப்பட்டனர். அவர்களது உடைகள் மங்கல நிகழ்வொன்றிற்குச் செல்வதைப் பறைசாற்றின. நேரே முன் சீற்றில் இன்னும் திருமணக்களை மாறாத இளங்குடும்பமொன்று இருந்தது. இருவரும் கிறக்கத்துடன் ஒருவரையொருவர் நோக்கியும் சீண்டியும் கொண்டிருந்தனர். இவன் திரும்பி இளம் பெண்ணைப் பார்த்தான். நிமிர்ந்தவள் இவன் பார்ப்பதைக் கண்டுவிட்டு சிரித்தாள். பின் தலைகுனிந்தாள்.

"எங்கை போட்டு வாறியள்?'' இவன் கேட்டான்.

நிமிர்ந்து வனாக்குறியுடன் சிரித்தாள். இவன் மீண்டும் கேட்டான்.

"ஃபோன்லை கதைச்சிட்டு வாறன்''

"ஆரோடை?''

"அவரோடை''

"எந்த நாடு''

"ஜேர்மன்லை நிண்டவர் இப்ப போடர் கடந்து சுவிஸுக்கை போட்டாராம். அதாலை அவரோடை கதைக்க முடியேல்லை''

"இரவு எங்கை தங்கினீங்கள்?''

'ரெலிபோன் கதைக்கிற இடத்திலை தான். நிறையப் பேர் இருந்தினை. நித்திரையுமில்லை, நுளம்பு வேறை பிள்ளையோடை சரியான கரைச்சல் பட்டிட்டன். இனி வீட்டை போய்த்தான் எல்லாம்' சிரித்தாள் அவள்.

வல்லையில் அடையாள அட்டைகளை இராணுவத்தினர் வாங்கிக் கொண்டனர். பதிலுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட அட்டையொன்றை தந்தனர். மீண்டும் பயணம். சனநெரிசலில் வியர்த்துக் கொட்டியது. அந்த நேரம் பார்த்து 'காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்' என்ற பாடலைப் போட்டு எரிச்சலூட்டினான் டிறைவர். பிறகு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மந்திகைக்கு அருகே இறங்கி ஏறும் போது, இதுதான் கடைசி என்றான் கொண்டக்டர். இவன் பதினொன்று என்று எண்ணிக் கொண்டான். பருத்தித்துறையில் இறங்கி வழக்கமான கடற்கரைப் பாதை மூடப்பட்டுள்ளதால் – குச்சொழுங்கைகளுக்கால் வளைந்தும் நெளிந்தும் ஒரு மைல் தூரம் சென்று; அந்த வீட்டினுள் நுழைந்தது 'கொஞ்சந் தண்ணி தாங்கோ' என்றான் ஆவலுடன்; துக்கம் விசாரிக்காமலே.

காதுக்கை, விசாரிப்புகள், நாட்டு நிலைமை, அரசியல் எதிர்காலம் பற்றிய பகிர்வுகள் என ஒரு மணி நேரமிருந்துவிட்டு, ஒன்றரை மணிக்குப் புறப்பட்டான்.

"ஒரு மணித்தியாலம் இருக்கவே வந்தனீர்'' எனக் கனகண்ணை கேட்டார். இவன் பதிலேதும் சொல்லாமலே சிரித்துவிட்டுப் புறப்பட்டான்.

பருத்தித்துறையில் பஸ்ஸேதுமில்லை, இப்போதுதான் பஸ் சென்றது எனக் கூறினார்கள். இவனைப் போலவே வேறுமிருவர் சோர்வு மேலிட நின்றனர். பக்கத்தில் ஒரு சிறு வான் நின்றது. இவனைக் கண்டதும் "அண்ணை யாழ்ப்பாணமோ'' என்றான் ஒருவன். அவன்தான் வானின் சொந்தக்காரனாயிருக்க வேண்டும். இவன் தலையசைத்தான். "அண்ணையும் அம்பது ரூபா தருவார். அரை மணித்தியாலத்தாலைபோவம்'' ஐம்பது ரூபா என்றதும் இவன் ஏற்கவில்லை. அவன் பலவேறு நியாயங்கள் சொன்னான். விவாதப்பட்டுக் கொண்டிருந்தபோது ஆபத்பாந்தவனாக ஒரு சீ.ரி.பி. பஸ் வந்தது, இவனும் மற்றவர்களும் அதில் ஏறிக் கொண்டனர்.

இரண்டரைக்கு பஸ் புறப்பட்டது. இடையிடையே பலரும் ஏறிக்கொண்டனர். பல்கலைக்கழகப் பிள்ளைகள்தான் அதிகம். வல்லை வெளியில் அட்டையைக் கொடுத்துவிட்டு அடையாள அட்டை வாங்கிக்கொண்டான். ஆவரங்காலில் இராணுவத்தினர் சிலரும் ஏறிக் கொண்டனர்.

'டேய், சிறீ!' குரல் கேட்டு இவன் திரும்பிப் பார்த்தான். இவனோடு சிறு வகுப்பில் படித்த நண்பன் ஆவலோடு விசாரித்தான். இவன் அவனை அழைத்து அருகமர்த்தினான். அவன் சுவாரஸ்யமாய்க் கதைத்துக் கொண்டே வந்தான். திடீரென, பஸ் கிறீச்சென பிறேக் போட்டு நின்றது. என்னவென இவனும் பலரும் பதைப்புடன் பார்த்தனர். இராணுவத்தினரில் ஒருவரது தொப்பி கழன்று விழுந்து விட்டமை தெரிய வந்தது. 'அட இதே' நண்பன் சலிப்புடன் சிரித்தான்.

யாழ்ப்பாணம் வந்து சேர ஐந்தேமுக்காலாகிவிட்டது. இந்நேரம் 'பண்ட்' மூடப்பட்டிருக்கும் இனி, பலாலி வீதி வழியாகவே செல்ல வேண்டும். பார்க்கில் இவனது சைக்கிள் மட்டுமே நின்றது. கிழவன் இவனையே எதிர்பார்த்திருந்ததாகக் கூறினார். இவன் காசைக் கொடுத்துவிட்டு சைக்கிளிலேறி மிதித்தான் ஒரு நாள் பொழுது வீணாகி விட்டதாக இவன் சலிப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆரியகுளச் சந்தியைத் தாண்டும் போது, பெருமாள் கோயிலடிப் பக்கமாக வேட்டுச் சத்தங்கள் கேட்டன. சென்றிகளுக்குள் நின்ற படையினர் துப்பாக்கிகளுடன் வெளியே வந்து அங்குமிங்குமாக நிலையெடுத்தனர். அந்த வழியால் செல்லாததற்காகத் தன்னை மெச்சியபடி இவன் வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினான்.

வீட்டை அடைந்தபோது நன்றாக இருண்டிருந்தது. வாசலில் அம்மா நின்றாள். 'ஒரு இடத்துக்குப் போனா வேளைக்கு வாறேல்லையே! நானிஞ்சை நெஞ்சிடிச்சுக் கொண்டு நிக்கிறன்.' என்று சொல்லி மேலும் ஏசினாள். இவன் வெறுமையுடன் சிரித்தபடி சைக்கிளை நிறுத்தினான். சோர்வுடன் போய் குந்தில் அமர்ந்துகொண்டான்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஜெயசிக்குறு படைநடவடிக்கை

# கட்டளைப்பீட மாற்றத்தின் பின்னணி என்ன?

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டதாகக் கூறிக் கொள்ளும் சிறீலங்கா அரசாங்கம் இந்த இறுதிக்கட்ட நடவடிக்கைக்கு முன்னதாக இராணுவ உயர் கட்டளைப் பீடத்தில் பெரும் மாற்றங்களை அவசர அவசரமாக முடித்துள்ளது.

இதன்படி ஒரு வருடத்திற்கு மேலாக வடக்கு — கிழக்கு இராணுவ நடவடிக்கைக்கு பொறுப்பாகவும் ஜெயசிக்குறு நடவடிக்கைக்குப் பொறுப்பாகவும் இருந்த மேஜர் ஜெனரல் அசோகா ஜயவர்த்தனா மாற்றப்பட்டு அந்த இடத்திற்கு மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியா நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஜெயசிக்குறு படை நடவடிக்கைகளில் இதுவரை செயற்பட்டு வந்த பல கட்டளை, இளநிலை கட்டளை அதிகாரிகளும் மாற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

"ஒரு யுத்த முனைச் செயற்பாடுகளில் ஒரே தலைமை செயற்படுவதை விட அடிக்கடி மாற்றம் செய்வது'' என்ற தமது புதிய திட்டமொன்றின் அடிப்படையிலேயே இம் மாற்றங்கள் செய்யப்படுவதாக அரச தரப்பு காரணம் கற்பிக்கின்ற போதும் அரசின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்த இராணுவத்தினரின் அதிருப்தியும் இது தொடர்பாக சில இராணுவ உயர் அதிகாரிகள் மீது அரசு கொண்டுள்ள நம்பிக்கையீனமும் சந்தேகங்களும் இரு தரப்பு முறுகல் நிலைகளுமே இத்தகைய செயற்பாடுகளுக்கு காரணமாக இருக்கலாம் என இராணுவ விமர்சகர்களால் ஊகிக்கப்படுகிறது.

பொதுவாக சமாதானத்திற்கான யுத்தம் புரிவதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் தம்மைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவதாக படைத் தரப்பு உயர் அதிகாரிகளிலிருந்து சிப்பாய்கள் வரை உணர்கின்றனர்.

முக்கியமாக ஜெயசிக்குறு எனும் பாரிய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து விடுதலைப் புலிகள் நடாத்திவரும் புதிய புதிய மதிநுட்பமிக்க தொடர் தாக்குதல்களினால் படை தரப்பில் அதிகரித்துவரும் ஆள் ஆயுத





இழப்புகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு எடுக்கும் கால்தாமதங்கள் போன்றவற்றை அடுத்து ஜெயசிக்குறு திட்டமிடல் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட படைத்தரப்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளமை ஒருபுறம்.

இன்னொருபுறம் பல இழப்புக்களைச் சந்தித்து ஆக்கிரமித்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளான கிழக்கு உட்பட பெருமளவு நிலப்பரப்புகளிலிருந்தும் படைகள் வாபஸ் வாங்கப்பட்டு வருவது குறித்தும் படைத் தரப்பில் கடும் அதிருப்தி நிலவுகிறது.

இவை தவிர இதுவரை போரில் பலியான பெருமளவு படையினர் கொல்லப்பட்டமை பற்றி அறிவிக்காத அரசாங்கம் அவர்களைக் காணாமற் போன படையினர் பட்டியலில் தொடர்ந்தும் வைத்துள்ளது. இதனால் இந்தப் படையினருக்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகளை அவர்கள் பற்றிய தகவல்களைத் தருமாறு படையினரின் உறவினர்களும் செய்தியாளர்களும் கேட்டுக்குடைவதால் இதற்கான பதிலளிப்பதில் படை அதிகாரிகள் சங்கடப்பட்டு வருகின்றனர்.

மேலும் தற்போதைய நிலையில் அகலக்கால் வைத்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறை மற்றும் படையினருக்கான லீவுகள் வழங்குவதில் உள்ள நெருக்கடிகள் என்பவற்றாலும் படை அதிகாரிகளிடையே பெரும் குழப்பநிலை தோன்றியுள்ளது.

அரசாங்கம் தமது அரசியல் இலாபம் கருதியும் பிரச்சார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுமான இந்தவகையான இராணுவத் திட்டமிடல்களை பல படை அதிகாரிகள் வெளிப்படையாகவும் சிலர் மறைமுகமாகவும் விமர்சிக்க ஆரம்பித்தனர். அடுத்து சில உத்திகளைக் கையாண்டு படை உயர் பீடத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கலாம்.

இது தவிர ஒரே தலைமையில் இராணுவ உயர் அதிகாரிகள் நியமிக்கப்படும் போது கொப்பேக்கடுவ போன்று இராணுவ அதிகாரிகள் யாரேனும் சிங்களவர்களின் கதாநாயகர்கள் ஆகிவிட்டால் அது பின் தங்களது கதாநாயகப் பாத்திரத்திற்கு வேட்டாக அமைந்து விடும் என ரத்வத்தையும் சந்திரிகா அம்மையாரும் யோசித்திருக்கலாம்.

இது இவ்வாறிருக்க இராணுவ அதிகாரிகள் சிலர் மேலுள்ள சந்தேகப் பார்வையும் தொடர்ந்துவரும் இராணுவ இழப்புக்களுமே இவ்வாறான கட்டளைப்பீட மாற்றங்களுக்குக் காரணமாக இருக்கலாம் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஏனெனில், அண்மையில் ஓய்வு வந்தும் ஓய்வு கொடுக்கப்படாமல் ஐந்து மேஜர் ஜெனரல்கள் தொடர்ந்தும் ஜனாதிபதியால் பதவி நீடிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதன் காரணம் இப்பதவிக்கு வரக்கூடிய எவரும் சிறீலங்காப் படையில் இல்லையா? அல்லது இத்தகைய பதவியில் இருக்கக்கூடிய அரசாங்க விசுவாசிகள் இல்லையா? என்பதே ஆகும்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இருமுகம் காட்டும் சந்திரிகாவால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது!

## அருட்தந்தை யூட்லால் தெரிவிப்பு



சிறீலங்காவின் இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் சமாதானம் கிடைக்கமாட்டாது என தென் இலங்கையின் சிங்களவரான அருட்தந்தை யூட்லால் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு விஜயம் செய்து, பல பகுதிகளிலும் உள்ள பல தரப்பினரைச் சந்தித்து, நிலைமைகளை நேரில் பார்வையிட்டுச் சென்ற இவர் 'ஹரய' என்ற சிங்கள இதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வன்னியில், தான் பார்த்தவை; கண்டவை; கேட்டவை குறித்து அவர் விபரிக்கையில் –

போரின் காரணமாக களைப்படைந்திருந்த தமிழ் மக்கள் சந்திரிகா சமாதானத்தைக் கொண்டுவரப் போகின்றாரா எனக் கேட்டனர். நாட்டில் ஒரே பேய்தான் இருக்கிறது. அதன் நிறம் மாற்றமடைந்துவிட்டது என்பதற்காக பேய்மாற்றமடைந்து விடமாட்டாது. இந்தப் பேய் ஒரு முகத்துடன் சிங்களத்திலும் இன்னொரு முகத்துடன் தமிழிலும் கதைக்கிறது. ஆதலால் தமிழர் எதிர்பார்க்கும் சமாதானம் இந்தப் பேயின் மூலம் கிடைக்கமாட்டாது என நான் அவர்களுக்குக் கூறினேன்.

வன்னி மக்களின் இன்றைய வாழ்வு நிலையைப் பார்த்ததும் இது இலங்கையின் வரலாற்றில் கடைசிக்கணம் என்ற எண்ணம்தான் தோன்றுகிறது. இங்கு உழைப்புக்கான பிரதானவழி விவசாயமாகும். மிகவும் கஷ்டமான இப்பிரதேசத்தில் இரணைமடுக்குளமும், முருங்கன் ஆறும் மட்டுமே உள்ளது.

இன்றைய இராணுவ நடவடிக்கையின் காரணமாக இந்த மக்கள் 10, 12 தடவைகள் அகதிகளாகி உள்ளனர். சொந்த இடங்களுக்கு வருமாறு அரசு அவர்களைப் பலவந்தப்படுத்துகின்றது. ஆனால் ஷெல், கிபீர் தாக்குதலால் மக்கள் செல்லவில்லை. நான் அங்கு நின்றபோது வவுனியாவில் இருந்து வந்த ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததில் வவுனிக்குளத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

அரசு வன்னியில் உள்ள மக்களுக்கான நிவாரணத்தைக் கடுமையாக வெட்டியுள்ளது. ஐம்பதினாயிரம் பேருக்கு நிவாரணம் வழங்கப்படுவதில்லை. இம் மக்கள் தற்போது இதன் மூலம் மட்டுமே உயிர் வாழ முடியும். ஆனால் இது கிடைப்பதில்லை. கிடைப்பது கூட ஒழுங்காகக் கிடைப்பதில்லை. அரசு அது எல்.ரி.ரி.ஈ.க்கு போவதாகக் கூறி அதனை நிவாரண வெட்டுக்கான காரணமாகப் பயன்படுத்தி வருகிறது. எல்.ரி.ரி.ஈ.யினரிடம் போதியளவு உணவு இருக்கிறது. வன்னிக்கு உணவை அனுப்புவதால் அல்ல; அனுப்பாது விடுவதினாலேயே அவர்கள் பலமடைகின்றனர்.

உண்மையில் வன்னி மக்கள் மரங்களின் கீழும், கூடாரங்களின் கீழும் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டபடி வாழ்கின்றனர். காட்டிலுள்ள பாலைப்பழம், விளாம்பழங்களையே உண்ணுகின்றனர். அங்கு குழந்தைகள் நாராகிவிட்டனர். மனிதர்கள் துவண்டுவிட்டனர்.

தமிழ் மக்களது இப்பெரும் பட்டினி எமக்குக்கூடப் புரியவில்லை என்றால், இந்தப் பெரும்பாவத்துக்கு நாமும் பொறுப்புச் சொல்லவேண்டும்.

அரசு இவற்றையெல்லாம் தெற்கிலிருக்கும் எம்முடைய சம்மதத்துடனேயே செய்கிறது என்று வன்னியில் உள்ள மக்கள் சிந்திப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றால், அவர்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாம் குரல் கொடுக்கவேண்டிய கடப்பாட்டில் உள்ளோம்.

வன்னியில் முப்பது தடவைகள் மலேரியா வந்தவர்களும் இருக்கிறார்கள். குளிகைகள் தட்டுப்பாட்டால் தேவையிலும் அரைவாசியே வழங்கப்படுகிறது. இதனால் வருத்தம் பூரணமாகக் குணமடைவதில்லை.

நோய்களைக் கண்டுபிடிக்க வசதிகள் இல்லை. நோயாளர் உடல் நடுங்குகிறது என்றால் மலேரியாவிற்கான மருந்து கொடுக்கப்படுகிறது. சரிவராவிடின் நியுமோனியாவுக்குரிய சிகிச்சை நடக்கிறது. அதுவும் சரிவராவிடில் டெங்கு நோய்க்குரிய மருந்து கொடுக்கப்படும். அதுவும் சரிவராவிடின் மூளைமலேரியாவுக்கான மருந்து கொடுக்கப்படுகிறது. இதுதான் அங்குள்ள நிலை. அரசு மிகமிகக் குறைந்த அளவிலேயே மருந்துகளை அனுப்பி வருகிறது.

காடுகளைத் துப்பரவு செய்து தடிகளை நட்டு அதற்குள் பாடசாலைகள் இயங்குகின்றன. ஒருபுறம் பாடசாலை நடக்க மறுபுறம் தாய்மார் சமைக்கின்றனர். வெய்யில், மழைக்கு ஒதுங்க இடமில்லை. புழுதிக்காற்றின் நடுவே மாணவர்கள் பயிலுகின்றனர். பாடசாலை செல்லும் வயதிலுள்ள சுமார் முப்பதினாயிரம் பேர் பாடசாலை செல்வதில்லை. இவர்கள் பாலைப்பழங்களை வீதிகளில் விற்றுத் திரிகின்றனர்.

வன்னியில் போக்குவரத்துக்கு மிகவும் சிரமம். சீரான வாகனங்கள் அங்கு இல்லை. மண்ணெண்ணையிலும் மரக்கறி எண்ணையிலுமே வாகனங்கள் ஓடுகின்றன. அங்கு ஓடுபவை பஸ்கள் அல்ல என்பதுடன், அவற்றை ஒத்தவை என்று காட்டுவதற்கே அப்படியான வாகனங்கள் இங்கு இல்லை. போலியோவினால் பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு முற்சக்கர வண்டி எடுத்துச் செல்லக்கூட அரசு தடை விதித்துள்ளது. இத்தகைய நிலைமையைத் தாங்கிக்கொள்ளும் எல்லையை என்னால் எண்ணிப்பார்க்கவே சிரமமாக உள்ளது எனவும் அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம், லண்டன் 0181 646 2885

www.tamileelamarchive.com